REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மார்ச் 23 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

89
1932 - 2021

வரு. 89 இல. 70 | March 23,Tuesday, 2021 | 20பக்கங்கள் | 30/-




















## கொழும்பு அமரபுர பீடத்தின் மகா நாயக்கர் காலமானார்



கொழும்பு அமரபுர பீடத்தின் மாநாயக்கர் வணக்கத்துக்குரிய கொட்டுகொட தம்மவாச தேரர் காலமானார்.

கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் அவர் காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நோய் நிலைமை காரணமாக நீண்ட காலமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் தனது 88வது வயதில் காலமாகியுள்ளார்.

# ஆறுகளை பாதுகாக்கும் 'சுரகிமு கங்கா' திட்டம்

### கதிர்காமத்தில் ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்

இலங்கையின் ஆறுகளை பாதுகாக்கும் தேசிய முயற்சியான 'சுரகிமு கங்கா' திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (22) கதிர்காமம் மாணிக்க கங்கையில் ஆரம்பித்து வைத்தார். சுற்றாடலின் முக்கிய

06

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்;

## ஏப்ரல் 21 க்கு முதல் குற்றவாளிகளை நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டும்



**இன்றேல் நாடு தழுவிய எதிர்ப்பு**
**பேராயர் மெல்கம் ரஞ்சித்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள குற்றவாளிகளை எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்

06



ஆறுகளை பாதுகாப்பதற்கான தேசிய செயற்திட்டம் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கதிர்காமம் மாணிக்க கங்கையில் இந்த திட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து, அதற்கான பெயர் பலகையை ஜனாதிபதி திரை நீக்கம் செய்வதைப் படத்தில் காணலாம்.(ஸ)

ரூ.1000 சம்பளம் தொடர்பான வர்த்தமானி;

## இரத்து செய்ய கோரிய வழக்கு 26க்கு ஒத்திவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் வெளியிட்டுள்ள வர்த்தமானியை செல்லுபடியற்றதாக அறிவிக்குமாறு கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணையை எதிர்வரும் 26ஆம் திகதி மேற்கொள்வதற்கு மேல் முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. 20 பெருந்தோட்டக் கம்பனிகள் இணைந்து

06

ஒழுங்குபடுத்தலில் ஏற்பட்ட சிக்கல் நிலை;

# பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று



### ஜெனீவா மனித உரிமைகள் அலுவலகம் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46வது அமர்வில் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை குறித்த பிரேரணை தொடர்பான விவாதம், இன்றைய

06

மீள்பரிசீலனை செய்யுமாறு கோரிய

## ரஞ்சனின் மனுவினை நிராகரித்தது நீதிமன்றம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நீதிமன்றத்தை அவமதித்த குற்றம் தொடர்பில் தமக்கு விதிக்கப்பட்டுள்ள சிறைத்தண்டனையை மீளாய்வுக்கு உட்படுத்துமாறு கோரி முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க உச்சநீதிமன்றத்தில் விடுத்த வேண்டுகோள் மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. ரஞ்சன் ராமநாயக்கவுக்கு

06

## ஐ.நா. விவகாரத்தில் இராஜதந்திரம் அவசியம்

### ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை



ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை விடயத்தை இலங்கை அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது. நேற்று (திங்கட்கிழமை) இடம் பெற்ற ஊடக

06

## MCC உடன்படிக்கையில் அரசாங்கம் கைச்சாத்திடாது

### சட்ட மாஅதிபர் நீதிமன்றுக்கு அறிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமெரிக்க மில்லேனியம் சேலன்ஞ் கோப்பரேசனுடனான (MCC) உடன்படிக்கை மற்றும்

06

## பளையில் 239 கிலோ கேரள கஞ்சா மீட்பு

### கடற்படையினரால் இருவர் கைது




கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவிலிருந்து 239 கிலோகிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக

06

மலையக மக்கள் முன்னணி;

## அரசுடன் ஒருபோதும் இணையமாட்டாது

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



"மலையக மக்கள் முன்னணி ஒருபோதும் அரசாங்கத்துடன் இணையாது. அரவிந்தகுமார் எம்.பியை நீக்கியதன் மூலம் தமிழ் முற்போக்கு கூட்டணியில் ஏற்பட்டிருந்த சிறு விரிசலும் முடிவுக்கு வந்துள்ளது. எனவே,

06

பாடசாலை மாணவனை பலிகொண்ட சம்பவம்;

## புகையிரத விபத்திற்கு நீதிகோரி தலைமன்னாரில் போராட்டம்



**தலைமன்னார் விசேட நிருபர்**

தலை மன்னார், பியர் பகுதி புகையிரத கடவையில் கடந்த 16 ஆம் திகதி புகையிரதத்தில் தனியார் பேரூந்து மோதி ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த மாணவனின் மரணத்திற்கு நீதி கோரி நேற்று காலை அப்பகுதியில்

06

## பசறையில் நேற்று மீண்டும் விபத்து

### பெண் பலி; இருவருக்கு காயம்



பசறை தொழும்புவத்தை – 3ஆம் கட்டை பகுதியில் நேற்று (22) இடம் பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். பசறையிலிருந்து

06

கடத்தல் குற்றச்சாட்டு தொடர்பில் CID

## ராஜித மற்றும் சத்துரவிடம் 5 மணி நேர வாக்குமூலம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ராஜித சேனாரத்ன மற்றும் அவரது புதல்வர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சத்துர சேனாரத்ன ஆகியோர் நேற்று ஐந்து மணித்தியாலங்கள் கொழும்பு குற்றத்தடுப்பு

06

### விக்கல் வீராச்சாமி



ஊடகத்தோட சம்பந்தப்படாத சில அறிவிப்பாளர்களுக்கும், ஊடக ஓனர் மாருக்கும் ஜனாதிபதி அந்த மாதிரி சூடு வைத்திருக்கிறார் .....,

ஆமா, இதுக்கு மேலயும் அவங்க ஊடகத்தை நடத்த வேணுமா, பேசாம மூடிப்போட்டு வேற பிசினஸ் பார்க்க வேண்டியது தான்....!!!


அனைவரும் இணைந்து கொழும்பு நகரத்தை சுத்தமாக வைத்திருப்போம்!

உங்கள் கழிவுகளை பின்வரும் முறைமைக்கு அமைவாக பிரிந்திடுங்கள்.



**உக்கும் கழிவுகள்**

உங்கள் இல்லத்தில் சேரும் கழிவுகளில் நீங்கள் உரம் தயாரிக்கவில்லை என்றால் தயவுசெய்து அதை CMC யிடம் கையளிக்கவும்.

- சமையலறை காய்கறி கழிவுகள் மற்றும் பழக்கழிவுகள், எஞ்சிய கழிவுகள், தேங்காய் சக்கைகள், பயன்படுத்திய தேயிலை கழிவுகள், பைகள், முட்டை ஓடுகள், மாமிச கழிவுகள்.
- வீட்டுத்தோட்டத்தில் சேரும் குப்பைகள் மர இலைகள், பூக்கள்
- துண்டாக்கப்பட்ட இளநீர் மட்டைகள்

**மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்**

பின்வரும் பொருட்கள் சுத்தமாக இருக்கவேண்டும்.

- கண்ணாடிகள்
- கார்ட்போட் / கடதாசி
- சுத்தமான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- உலோகங்கள்
- சுத்தமான தேங்காய் சிரட்டைகள்
- சுத்தமான டின்கள்
- சுத்தமான யோகட் மற்றும் பிளாஸ்டிக் கோப்பைகள்
- மறுசுழற்சி செய்யக்கூடிய சமையலறை உபகரணங்கள்

**மறுசுழற்சி செய்யமுடியாத கழிவுகள்**

- மண்ணான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- சுகாதார நப்கின்கள்
- அழுக்கான யோகட் கோப்பைகள்
- பால் பேக்கட்டுகள்
- பயன்படுத்திய சஷே பேக்கட்டுகள் (ஷம்பூ, சோஸ், மைலோ மற்றும் பல)
- தலைமுடி
- ஷேவர் மற்றும் பிளேடுகள்
- சுத்தமற்ற டின்கள்
- செரமிக் பாத்திரங்கள்
- இறப்பர்
- மண் பாத்திரங்கள்
- மருந்துப் பொருட்கள்

திண்மக்கழிவு முகாமைத்துப் பிரிவு
கொழும்பு மாநகர சபை
வெப்: www.colombo.mc.gov.lk
தொ.பே: 0112 431 694

மாவட்டம் D2A
கொழும்பு கோட்டை மற்றும் புறக்கோட்டை

141, கிருல வீதி, கொழும்பு 05
ஈ-மெ: info@cleantech.lk
தொ.பே: 0112 368 768

cleantech because we care



89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# மாகாண சபை தேர்தல்; இரு வாரத்திற்குள் தீர்வு

## பிற்போடும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை -இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க

மாகாண சபை தேர்தலை நடத்துவதில் உள்ள சட்ட சிக்கலுக்கு இரண்டு வாரகாலத்தில் தீர்வை பெற்றுக் கொள்ளஎதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் மாகாணசபை தேர்தலை எக்காரணங்களுக்காகவும் பிற்போடும் நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது என தெரிவித்துள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க ,எத்தேர்தல் முறைமையின் பிரகாரம் மாகாண சபை தேர்தலை நடத்த முடியும் என உறுதியான தீர்வு கிடைத்தவுடன் தேர்தல் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், பல்வேறு காரணிகளினால் மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.தொடர்ந்து மாகாணசபை தேர்தலை பிற்போட இடமளிக்க முடியாது. பழையதேர்தல் முறைமையில் தேர்தலை நடத்துவதா அல்லது புதிய கலப்பு தேர்தல் முறைமையின் பிரகாரம் தேர்தலை நடத்துவதா என்பதில் சட்ட சிக்கல் காணப்படுகிறது. இப்பிரச்சினைக்கு இரண்டு வார காலத்திற்குள் தீர்வை காண எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டாம் என ஆளும் தரப்பின் உறுப்பினர்களும், மதத் தலைவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் எதிர்ப்புக்கான காரணத்தை தெளிவுப்படுத்தவில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வாக அறிமுகப்படுத்திய மாகாணசபை முறைமை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை அனைத்து மாகாணங்களிலும் மாகாணசபை முறைமை செயற்படுத்தப்பட்டுள்ளன.



மாகாண சபை முறைமை குறித்து முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஆராயப்படும். குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற காரணத்தினால் அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க முடியாது. மாகாண சபைகளில் குறைப்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றிற்கு தீர்வு காணப்படும்.

மாகாணசபை தேர்தலை பிற்போடும் நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது. மாகாண சபை தேர்தலை அரசாங்கம் பிற்போடுகிறது என்று விமர்சிக்கும் உரிமை எதிர்க்கட்சியினருக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கும் கிடையாது. நல்லாட்சி அரசாங்கம் 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அடைந்த தோல்வியின் காரணமாக மாகாணசபை தேர்தலை திட்டமிட்டு பிற்போட்டது. இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஆதரவு வழங்கியது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் மக்களுக்கான அபிவிருத்தி பணிகள் கடந்தகாலங்களில் முன்னெடுக்கப்படவில்லை. கட்சி ரீதியிலான முரண்பாட்டை அரசியல்வாதிகள் மாகாணசபை முறைமை ஊடாக பயன்படுத்திக் கொண்டார்கள்.

இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் பலவீனமடைந்தன. இவ்விரு மாகாண சபைகளின் பலவீனத்தால் முழு மாகாண சபை முறைமையையும் பலவீனம் என கருத முடியாது. ஆகவே மாகாண சபை தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படும் என்றார்.



## தவக்கால சிந்தனை

### 'நம்பாவிடில் பாவிகளாய்ச் சாவீர்கள்'

இயேசு கிறிஸ்து தான் இறைமகன் என்பதை பல்வேறு அருளடையாளங்கள் வழியாகவும் வல்ல செயல்கள் வழியாகவும் வெளிப்பபடுத்திக் கொண்டே இருந்தார்.

மக்களோ அவரை ஏற்றுக்கொள்ளவும் இல்லை; நம்பவும் இல்லை. யோவான் நற்செய்தி 6: 29 இல் இயேசு இதை மிகத்தெளிவாக, "கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுளுக்கு ஏற்ற செயல்" என்று சொல்லியிருப்பார்.

அப்படியிருந்தும் மக்கள் அவரை நம்பி ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இந்நிலையில்தான் இயேசு அவர்களைப் பார்த்து, "இருக்கின்றவர் நானே என்பதை நீங்கள் நம்பாவிடில் பாவிகளாய்ச் சாவீர்கள்" என்கிறார்.

இயேசு யூதர்களிடம், தான் அவர்களிடமிருந்து செல்லவிருப்பதாகச் சொல்கிறார். எங்கு செல்கிறார்? எதற்காக செல்கிறார்? என்பதை இயேசு சொல்லவில்லை. ஆனால், அவருடைய பிரிவிற்கு பின், யூதர்கள் வருந்துவார்கள் என்றும் முன்னறிவிக்கிறார். வருந்துவதோடு மட்டும் அல்லாமல், அவரைத் தேடவும் செய்வார்கள், ஆனால் அவர்கள் காணமாட்டார்கள், என்று சொல்கிறார். இதனை வெளிப்படையாக அல்லாமல் சற்று ஆழமாக சிந்தித்துப் பார்த்தால் தெளிவான சிந்தனை நமக்கு புலப்படும்.

காலமும், வாழ்வும் வரையறுக்கப்பட்டது. ஒவ்வொரு இனத்திற்கும் குறிப்பிட்ட காலம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கு அதிகபட்சமாக நூறு வயது வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வாழ்க்கையில் பலபேர் வாழத்தெரியாமல் கடைசி காலத்தில் இப்படி வாழ்ந்துவிட்டோமே இதைவிட நன்றாக வாழ்ந்திருக்கலாமே என்று வருந்துகின்றனர்.

கண் கெட்ட பிறகு அதனை நினைத்து வருந்தி பயன் ஏதும் கிடைக்கப்போவதில்லை. ஆனால் பலபேர் வாழ்வை தவறாக வாழ்ந்தபிறகு அதனை எண்ணி, எண்ணி வருந்திக்கொண்டிருக்கிறார்கள். வாழ்வை நல்ல முறையில் வாழ, அவர்களுக்கு கிடைத்த வாய்ப்பை எல்லாம் விட்டு விட்டு கடைசியில் வருந்தி பயன் ஒன்றுமில்லை.

வாழுகிறபோதே நன்றாக வாழ வேண்டும். பயனுள்ள வகையில் வாழ வேண்டும். மற்றவர்கள் பாராட்டும் வண்ணம் வாழ வேண்டும். எனவே, வாழ்வின் மகத்துவத்தை, அதனுடைய முக்கியத்துவத்தை, புனிதத்தன்மையை உணர்ந்து வாழ்வோம்.

நம்பிக்கையினாலன்றி எவரும் கடவுளுக்கு உகந்தவராயிருக்க முடியாது (எபி 11: 6).

அருட்பணி பேனார்ட் ஜீவா...

# கடற்படையின் புதிய பிரதம அதிகாரியாக ரியர் அட்மிரல் ருவன் பெரேரா நியமனம்

**ஸாதிக் ஷிஹான்**

இலங்கை கடற்படையின் புதிய பிரதம அதிகாரியாக ரியர் அட்மிரல் ருவன் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

மார்ச் மாதம் 21ஆம் திகதி முதல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாதுகாப்பு படைகளின் தளபதியான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள இவருக்கான நியமன கடிதத்தை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன கடற்படைத் தலைமையகத்தில் வைத்து கையளித்தார்.

இதேவேளை, ரியர் அட்மிரல் ருவன் பெரேரா கடற்படைத் தலைமையகத்திலுள்ள தனது அலுவலகத்தில் முதலாவது ஆவணத்தில் கையொப்பமிட்டு தனது கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாக பொறுப் பேற்றுக் கொண்டார்.



கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியின் பெருமை மிகு பழைய மாணவரான ரியர் அட்மிரல் ருவன் பெரேரா 1986ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி கெடெட் அதிகாரியாக இலங்கை கடற்படையில் இணைந்துக் கொண்டுள்ளார்.

35 ஆண்டு கால சேவையைக் கொண்ட இவர் இலங்கை கடற்படையின் தென் பிராந்திய, வட பிராந்திய மற்றும் கிழக்கு பிராந்திய கடற்படைத் தலைமையககங்களின் கட்டளை தளபதியாகவும், பிரதி பிரதம அதிகாரியாகவும் சேவையாற்றியுள்ளார்.

இந்தியா, அமெரிக்கா, சீனா, பிரான்ஸ் மற்றும் சிங்கபூர் ஆகிய நாடுகளில் பாதுகாப்பு தொடர்பான கற்கை நெறிகளை நிறைவு செய்துள்ள இவர், ரண சூர பதக்கம், உத்தம சேவா பதக்கம் ஆகிய பதக்கங்களை பெற்றுள்ளார்.

# இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் ஜனாதிபதியுடன் பேச்சு

## முஸ்லிம்கள் குறித்த அரசின் முடிவுகளுக்கு பாராட்டு

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் (OIC) பொதுச் செயலாளர் டாக்டர் யூசெப் பின் அகமட் அல்ஒத்தெய்மினுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையிலான தொலைபேசி உரையாடலொன்று இடம் பெற்றுள்ளது.





இந்த உரையாடலின் போது, அவர்கள் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புக்கும் இலங்கைக்கும் இடையிலான தற்போதைய உறவுகள் மற்றும் இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தின் நிலைமை குறித்து கவனம் செலுத்தியுள்ளனர்.

இஸ்லாமிய சடங்குகளின்படி இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கான முஸ்லிம்களின் உரிமை குறித்து இலங்கை அரசாங்கத்தின் முடிவை வரவேற்று, ஜனாதிபதியின் விருப்பத்தை அல்ஒதமைன் இதன்போது பாராட்டினார்.

முஸ்லிம் சமூகங்களின் நிலைமைகளைப் பின்பற்றுவதற்கும், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு அல்லாத உறுப்பு நாடுகளில் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் ஆர்வத்தை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

# இந்தியாவிலிருந்து மேலுமொரு தொகுதி தடுப்பூசி வருகிறது

## இரு வாரங்களில் கிடைக்குமென்கிறார் சன்ன

இந்தியாவிடம் இருந்து மற்றுமொரு தொகுதி அஸ்ட்ராசெனகா கொரோனா தடுப்பூசிகள் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.



இந்த விடயம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் அதிகளவில் தொற்றுறுதியானவர்கள் அடையாளம் காணப்படுகின்ற ஏனைய பகுதிகளிலும் தடுப்பூசிகளை செலுத்தும் பணிகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பசறை பஸ் விபத்தின் எதிரொலி;

# தேய்வடைந்த டயர்களுடன் பயணித்தால் ரூ.3,500 அபராதம்



தேய்வடைந்த டயர்களை பயன்படுத்தும் வாகனங்களை அடையாளம் காண்பதற்காக விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

எதிர்வரும் புதன்கிழமை வரை இடம்பெறவுள்ள இந்த கண்காணிப்பு நடவடிக்கையின்போது, தேய்வடைந்த டயர்களை பயன்படுத்தும் வாகனங்களுக்கு 3,500 ரூபாய் அபராதமும் அத்தகைய வாகனங்களை செலுத்தி காயத்தை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு எதிராக 25,000 ரூபா அபராதமும் விதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, நாடளாவிய ரீதியில் தற்போது வீதி விபத்துகள் அதிகரித்து வருகின்றமையை அவதானிக்க கூடியதாக உள்ளது. இந்த விபத்துகளுக்கு வாகன சாரதிகளின் கவனக்குறைபாடு , மதுபோதை மற்றும் வாகனங்களின் குறைபாடுகளும் பிரதான காரணமாக உள்ளன. இதனால் அவற்றை தடுக்கும் வகையில் விசேட சோதனைகளை மேற்கொள்வதற்கு பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

நேற்று(22) ஆரம்பிக்கப்பட்ட இந்த சோதனை நடவடிக்கைகள் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளன.

இதன்போது தேய்வடைந்த டயர்களை பயன்படுத்தும் வாகனங்களை அடையாளம் கண்டு அவற்று எதிராக சட்டநடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகள் தொடர்பில் பிரதேச பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன சட்டவிதிகளுக்கமைய வெளியிடப்பட்ட வர்த்தமானியில் வாகன சில்லுகள் தரமானதாக காணப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் , 2009 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மோட்டார் வாகன திருத்தச் சட்டத்தின் 145 ஆவது சரத்துக்கமைய போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒவ்வொரு வாகனமும் தரமான சில்லுகளை பயன்படுத்தியிருக்க வேண்டியது கட்டாயம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் , இவ்வாறு தரமற்ற சில்லுகளை பயன்படுத்தும் வாகனங்களை அடையாளம் காணுவதற்காகவே இந்த சோதனைகள் இடம்பெறவுள்ளன.

இதன்போது தேய்ந்த சில்லுகளை பயன்படுத்திய வாகனங்களை அடையாளம் கண்டால் , அவற்றுக்கு எதிராக 3, 500 ரூபா அபராதம் அறவிடப்படுவதுடன் , அத்தகைய சில்லுகளை கொண்ட வாகனங்ககளை செலுத்தி விபத்தை ஏற்படுத்தி காயமடையச் செய்தால் வழமையான சட்டவிதிகளுடன், 25 ஆயிரம் ரூபா அபராதமாக அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ராதாமேத்தாவின் 'உள்ளத்தில் வைப்போமா?'

### கொழும்பில் நூல்வெளியீடு

கலைஞர், பத்திரிகையாசிரியர், புதிய அலை கலை வட்டத்தின்நிறுவுனர்போன்ற பல்வேறு தகமைகளைக் கொண்ட ராதா மேத்தாவின் முதல் நூலாக அவர் பத்திரிகைளில் எழுதி வெளிவந்த கலைத்துறை சார்ந்த கட்டுரைத்தொகுப்பான "உள்ளத்தில் வைப்போமா? என்ற நூலின் வெளியீடு எதிர்வரும் 28 ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்த நூலை புரவலர் புத்தகப் பூங்காவின் 40ஆவது வெளியீடாக வெளி வரச் செய்துள்ள இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கின்றார்.

06

## அசாத்சாலியை 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் சாலி குற்றத்தடுப்பு திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 90 நாள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.மாவனல்லை புத்தர் சிலை தகர்ப்பு சம்பவத்தில் அடிப்படைவாதிகளை பாதுகாத்துள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு பிரதான நீதவான் புத்திக ஸ்ரீராகல முன்னிலையில் நேற்றைய தினம் சிஐடி அதிகாரிகள் பி அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளனர்.

அசாத் சாலியிடம் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிஐடி யினர் நீதிமன்றத்திற்கு தெரிவித்தனர்.

அதற்கிணங்க அசாத் சாலியை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எழுத்து மூலமாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளார்.(ஸ)

## பதுளை வீதி பஸ் விபத்து;

# காரணங்களை கண்டறிய விசாரணைக்குழு நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மொனராகலை பதுளை வீதியில் பதின்மூன்றாம் மைல்கல்லுக்கு அருகில் கடந்த சனிக்கிழமை (20) இடம்பெற்ற 14 பேரை பலி கொண்ட பஸ் விபத்து தொடர்பான உண்மை நிலையை கண்டறிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அத்துடன் சம்பந்தப்பட்ட பஸ் சாரதி மற்றும் டிசம்பர் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ .ஆர். பேமசிறிஅது தொடர்பில் தெரிவிக்கையில்,

மேற்படி விபத்துக்கான காரணங்களை கண்டறிதல் மற்றும் எதிர்வரும் காலங்களில் இது போன்ற விபத்துக்களை தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகளை பெற்றுக் கொள்ளும் வகையிலேயே மேற்படி குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவ்விபத்து இடம்பெற்ற பகுதியில் வீதி பாதுகாப்பு நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்பட்டதா என்பதை கண்டறியவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அப்பகுதியின் பாதுகாப்பைக் கருதி விபத்து இடம்பெற்ற பகுதியில் விசேட சமிக்ஞை விளக்கை பொருத்தி உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் , விபத்தின்போது எதிரே வந்த டிப்பர் வாகனத்திற்கு, பஸ் வண்டி இடம் வழங்க முற்பட்ட போதே பஸ் வண்டியின் முன் சில்லு வீதியை விட்டு விலகியதால் பள்ளத்தில் குடைசாய்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் விபத்துக்கு சாரதியின் கவனயீனமே காரணம் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.இதுவரை மேற்கொள்ளப்பட்ட

06

# 'சந்தஹிரு சேய' தூபிக்கான புதையல் பொருட்கள்; அன்பளிப்பு செய்ய மேலும் ஆறு நாட்கள் அவகாசம்

**ஸாதிக் ஷிஹான்**

அனுராதபுரம், சந்தஹிரு சேய தூபியின் நாற்சதுரத்தில் புதையல் பொருட்களை வைப்பு செய்வதற்காக கடந்த மூன்று தினங்களுக்குள் மாத்திரம் பெரும் தொகையான புதையல் பொருட்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் இவற்றை ஒப்படைப்பதற்காக எதிர்வரும் 27 ஆம் திகதி வரையான ஆறு நாட்கள் கால அவகாசம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் நான்காவது பெரிய தாதுகோபுரமாக நிர்மாணிக்கப்படவுள்ள சந்தஹிரு சேய தூபியின் நாற்சதுரத்தில் புதையல் பொருட்களை வைப்பு செய்யும் மகோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளதுடன், இதில் வைப்பு செய்வதற்கான புதையல் பொருட்களை பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் கடந்த 20ஆம் திகதி முதல் ஆரம்பமானது.

புதையல் பொருட்களை பொறுப்பேற்கவென பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள விஷேட குழுவினர் அனுராதபுரம், சந்தஹிரு சேய வளாகத்தில் பொருட்களை பொறுப்பேற்று வருகின்றனர்.

மூன்று தசாப்தங்களாக நீடித்த பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து முற்றாக இல்லாதொழிக்க முப்படை, பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு படை வீரர்கள் மேற்கொண்ட தியாகங்களை நினைவு கூறும் வகையில் 5வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவினால் சந்தஹிரு சேய தூபியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதற்கான பூரண ஒத்துழைப்பை முப்படையினர், பக்தர்கள் மற்றும் தனவந்தர்களினால் வழங்கப்படுவதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்தத் தாது கோபுரத்தில் நாற்சதுர அறைக்குள் பெறுமதியான புதையல் பொருட்களை வைப்பு செய்ய தாய் நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த படைவீரர்களின் பெற்றோர், மனைவி மற்றும் பிள்ளைகளும் தங்களது மகன், கணவன் மற்றும் தந்தை சார்பாக பெறுமதி வாய்ந்த புதையல் பொருட்களை வழங்குமாறு அவர் விஷேட வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அங்கம் – 01

# ராஜாவின் விருப்பங்கள்

நீங்கள் வேலைவாய்ப்பிற்காக அல்லது நிரந்தரமாக வதிவதற்காக வேண்டி வெளிநாட்டுக்குச்செல்ல விரும்புகிறீர்களா? தயவுகூர்ந்து உங்களினதும் உங்களின் நெருங்கிய உறவுகளினதும் பாதுகாப்பை பற்றி முதலில் அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டுக்கு செல்ல விரும்பினால் எப்பொழுதும் பாதுகாப்பான பாதையை தெரிவு செய்யுங்கள். இந்த சித்திரக்கதையில் ராஜாவுக்கு என்ன நிகழ்கின்றது என்பதை தொடர்ந்து அவதானிக்கும் போது பாதுகாப்பான புலம்பெயர்வை பற்றிய உங்களின் பார்வைக்கோணத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். இப்பத்திரிகையில் 7 நாட்களுக்கு தொடராக பிரசுரிக்கப்படவிருக்கும் சித்திரக்கதையின் 1ஆவது அங்கம் இதுவாகும். ஒவ்வொரு அங்கத்தின் இறுதியிலும் பரிசுகளை பெறும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது.

## மனித கடத்தல்காரர்கள் பற்றி விழிப்புடனிருங்கள்!

**பாதுகாப்பான வெளிநாடு செல்லும் பாதையை தெரிவு செய்வதற்கு IOM நிறுவனத்தின் நேரடி இலக்கம் 0774410086 இற்கு அழையுங்கள்.**



ராஜா பூஜாவின் மீது விருப்பம் கொள்கிறார். ஆனால் ராஜாவுக்கு போதிய கல்விப்பின்னணியும் வருமானம் தரும் தொழிலும் இல்லாததால்.



பூஜாவின் தந்தை ராஜாவின் விருப்பத்திற்கு சம்மதிக்கவில்லை



பூஜாவை வெளிநாட்டில் வசிக்கும் ஒருவருக்கு திருமணம் செய்து வைப்பதற்கே பூஜாவின் தந்தை விரும்பினார்.



அதனால் ராஜா வெளிநாட்டில் வசிப்பதற்கு ஒரு வழியைத்தேடினார்.



வெளிநாட்டில் தொழிலொன்றை தேடிக்கொண்டு பூஜாவோடு அங்கு வசிப்பதற்கு ராஜாவுக்கு விருப்பமாக இருந்தது.



இதற்கிடையில் ராஜாவின் நெருங்கிய நண்பன் தனது உறவினரான அர்னோல்டை ராஜாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். "இவர் அர்னோல்ட். இவர் என் உறவினர். இவருக்கு கொழும்பில் பெரிய வெளிநாட்டுக்கு அனுப்பும் ஏஜன்சியொன்றுள்ளது. இவர் நிறைய பேரை வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கிறார்".

## வெளிநாட்டு தொழில் முகவர் ஒருவர் சட்டரீதியானவரா என்பதை எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்?




விடை 1:
1989 என்ற இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம்




விடை 2:
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இணையத் தளத்தில் தேடிப்பார்ப்பதன் மூலம்

இக் கேள்விக்கு சரியான விடையை தெரிவு செய்வதன் மூலம் நாளாந்த பரிசுக்குழுக்களில் பரிசினை வெல்லுங்கள். உங்களின் விடையை அல்லது விடைகளை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் IOM நிறுவனத்தின் 0774410086 என்ற நேரடி இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள். விடைகளை SMS அல்லது வட்சப் அல்லது வைபர் மூலமாக 0774410086 என்ற இலக்கத்திற்கு அனுப்ப முடியும். S1 என்ற குறியீட்டை தவறாமல் குறிப்பிடவும்.

S1 விடை எண் (கள்), பிரசுரமான திகதி, பத்திரிகையின் பெயர்
பால்: ஆண் / பெண், வயது, ஊர் – மாவட்டத்தின் பெயர்

உதாரணம்:
**S1 3,4 22.03.2021 _ தினத்தந்தி**
**ஆண் 20 சிலாபம் – புத்தளம் மாவட்டம்**

விடைகள் 07.04.2021 திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

பாதுகாப்பான மற்றும் முறையான புலம்பெயர்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இச்சித்திரக்கதை IOM நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (IOM)
9.ஆம் மாடி, IBSL கட்டிடம்,
80A, எல்விற்றிகலை வீதி, பொறல்லை, கொழும்பு 8.

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சார்வரி வருடம் ஆனி மாதம் 01நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை

இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்

ஒப்புரவு அறிந்து ஒழுதலாகியத் தன்கடமை அறிந்த அறிவை உடையவர், செல்வ வளம் இல்லாத காலத்திலும் ஒப்புரவுக்குத் தளர மாட்டார்.

## அபிவிருத்தியில் இளவயதினரை நேரடிப் பங்காளர்களாக்க முயற்சி

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுத்துவதில் தற்போதைய அரசாங்கம் விஷேட கவனம் செலுத்தியுள்ளது. அவர்களது ஆற்றல்களும், திறமைகளும் நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பாக அமையக் கூடியவையாகும். அந்த அடிப்படையில்தான் அரசாங்கம் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இருக்கின்றது.

அதேநேரம், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதியில் இவ்விடயத்திற்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் 60 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொண்டது. அவர்கள் நாடெங்கிலுமுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக பிரதேச மட்டத்தில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த இவர்களது பணிகள் பக்கபலமாக அமைந்துள்ளன.

இவ்வாறான சூழலில் கடந்த நல்லாட்சி அரசாங்கம் 14 ஆயிரம் பட்டதாரிகளைப் பயிலுனர்களாக அரசாங்க சேவையில் இணைத்துக் கொண்டது. ஆனாலும் அப்பட்டதாரிகள் எவரும் அரச சேவையில் நிரந்தரப்படுத்தப்படவில்லை.

என்றாலும் தற்போதைய அரசாங்கம் கடந்த ஆட்சிக் காலத்தில் இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிப் பயிலுனர்களில் 10 ஆயிரம் பேரை தகுதியின் அடிப்படையில் சேவையில் நிரந்தரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இவர்களை சேவையில் நிரந்தரப்படுத்துவதற்கான ஆவணங்கள் மாவட்ட செயலகங்கள் ஊடாக நேற்று திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படுகின்றன.

'இப்பட்டதாரிப் பயிலுனர்களை அரச சேவையில் நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகள் தாமதமாவதற்கு கொவிட்19 அச்சுறுத்தல் முக்கிய காரணமாக அமைந்தது. குறிப்பாக இவ்வச்சுறுத்தல் காரணமாக ஊழியர்கள் கடமைக்கு சமுகமளித்தல், நேர்முகப் பரீட்சை நடத்துதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை உரிய நேர காலத்தில் மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டது' என்று பொதுச்சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த ஒரு மாத காலப் பகுதிக்குள் மட்டுப்படுத்தப்பட்ட மனித வளத்தைப் பயன்படுத்தி இப்பட்டதாரிப் பயிலுனர்களை அரச சேவையில் நிரந்தரப்படுத்துவதற்கான ஆவணங்களை மாவட்ட செயங்கங்கள் ஊடாக விநியோகிக்க முடிந்துள்ளது என்றும், அரசியல் பேதங்கள் பாராது இந்நாட்டில் கற்ற இளம் பராயத்தினரை நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் நேரடிப் பங்காளர்களாக்கவே முயற்சிக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். கடந்த காலங்களில் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களில் ஒரு தரப்பினர், அரச சேவைக்கு சேர்த்துக் கொண்ட ஊழியர்கள் சேவையில் நிரந்தரப்படுத்தப்படாத நிலையில் காணப்படுவார்களாயின், மற்றொரு தரப்பினர் பதவிக்கு வந்ததும் அவர்களை சேவையில் நிரந்தரப்படுத்தாது இழுத்தடித்து தாமதப்படுத்தி வருவது வழக்கம். அந்த வழக்கத்திற்கு மாற்றமாகவே தற்போதைய அரசாங்கம் இந்நடவடிக்கையை முன்னெடுத்திருக்கின்றது. இந்நாட்டின் அபிவிருத்தியில் உண்மையான அக்கறையையும் ஆர்வத்தையும் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் வெளிப்பாடே இதுவாகும்.

கற்றறிந்த இளம் பராயத்தினரின் பங்களிப்பு நாடொன்றின் அபிவிருத்திக்கு இன்றியமையாதது. அவர்களது ஆற்றல்களும் திறன்களும் நாட்டின் அபிவிருத்திக்காக உரிய ஒழுங்கில் பயன்படுத்தப்பட வேண்டும். அது நாட்டின் துரித அபிவிருத்திக்கு பக்கத் துணையாக அமையும். அந்தப் பின்னணியில்தான் இந்நடவடிக்கையை தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்றது.

மேலும் எந்தவொரு நாட்டினதும் அபிவிருத்தி நடவடிக்கையை அரசியல் அடிப்படையில் முன்னெடுக்க முடியாது. அவ்வாறான நடவடிக்கைகள் மூலம் எதிர்பார்த்த பிரதிபலன்களையும் அடைந்து கொள்ளவும் முடியாது. அதனால் அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அது நாட்டை துரித அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்லும்.

அதனால்தான் கடந்த ஆட்சிக் காலத்தில் அரச சேவைக்கு பட்டதாரி பயிலுனர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்ட இவர்களை சேவையில் நிரந்தரப்படுத்த தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இந்த அடிப்படையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சகல நடவடிக்கைகளும் அரசியல் பேதங்களுக்கு அப்பால் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் நிமித்தம் கட்சி அரசியல் பேதங்கள் பாராது சகலரும் ஒத்துழைப்பு நல்குவது அவசியம்.

அது நாட்டின் அபிவிருத்திக்கும் சுபிட்சத்துக்கும் அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாக அமைவதோடு துரித அபிவிருத்திக்கும் பக்கத் துணையாக அமையும். அதன் ஊடாக மக்கள் வளமான பொருளாதார வாழ்வை அனுபவிக்கவும் வாய்ப்பு ஏற்படும். அதுவே இப்போதைய தேவையுமாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கைப் பாராளுமன்றமும் ஜனநாயகமும்

ஒரு பார்வை

அரசாங்கத்தின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் விமர்சனத்திற்குள்ளாகும் போது கருத்துக்களை விபரிக்கவும் அரசாங்கத்தினது நிலையைப் பாதுகாப்பதற்கும், எதிர்க் கட்சியினர் அரசாங்கத்தின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் விமர்சிப்பதற்கும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குமான தேசிய அமைப்பே பாராளுமன்றமாகும்.

பொதுமக்களின் தேவைகள் பற்றி ஆராயும் இடமாகவும் மக்கள் எதற்காக வாக்களித்தார்களோ அது சம்பந்தமாக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை அல்லது மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாமற் போனமைக்கான காரணங்களை மக்களுக்கு அறிவிக்கும் ஓர் இடமாகவும் பாராளுமன்றம் திகழ்கின்றது. பாராளுமன்றம் என்றவுடன் நினைவுக்கு வருவது ஜனநாயகமாகும். ஜனநாயகத்தின் முக்கிய அம்சம் சட்டத்தின் ஆட்சியாகும். சட்டத்தின்மூலம் அதிகாரம் பெறப்படுகின்றது; அதிகாரத்திலிருந்து செல்வாக்கு பிறக்கின்றது.

பொது நிதியினைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமான ஒரேயொரு அதிகாரசபை பாராளுமன்றமாகும். பாராளுமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் நிலையியற் கட்டளைக்கமைவாகவே இடம்பெறுகின்றன. சில நிலையியற் கட்டளைகளுக்கு உப பிரிவுகளும் இருக்கின்றன. மொத்தமாக 143 நிலையியற் கட்டளைகள் பாராளுமன்ற நடவடிக்கைகளை வழிநடத்துகின்றன. வரிகளைத் திரட்டுவதற்கும் பொது நிதியினைச் செலவழிப்பதற்குமான வழிகளைத் தீர்மானிப்பதற்கும் பாராளுமன்றம் அதிகாரமளிக்கின்றது. அரச நிதியிலிருந்து எந்தவிதக் கொடுப்பனவும் பாராளுமன்றத்தின் அனுமதியின்றிச் செய்ய முடியாது.

மக்கள் அனுபவிக்கும் இறைமையினைப் பாதுகாப்பதில் முன்னிலை வகித்துச் செயற்படுகின்ற ஜனாதிபதி, நிறைவேற்று அதிகாரத்தினைக் கொண்டிருந்தாலும் பாராளுமன்றமே சட்டங்களை இயற்றி அமுல்படுத்தும் ஓர் அதியுயர் பீடமாக விளங்குகின்றது. ஜனநாயக நாடொன்றில் சட்டங்கள் இயற்றப்படுவது பாராளுமன்றத்திலாகும். சட்டங்களை இயற்றுவது மட்டுமன்றி, அரசியல்யாப்பில் திருத்தங்களைக் கொண்டு வரவும், தேவையற்றதெனக் கருதும் விடயங்களை அரசியல் யாப்பிலிருந்து நீக்கவும் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. அத்தோடு, தேவையான சட்டங்களை முன்தேதியிட்டு அமுல்படுத்தும் அதிகாரமும் பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், எந்தவொரு நீதிமன்றத்துக்கோ அல்லது நீதிச் சபைக்கோ பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட எந்தச் சட்டம் சம்பந்தமாகவும் எந்தவொரு அடிப்படையிலும் அதன் செல்லுபடித்தன்மை பற்றிக் கேள்வி எழுப்ப முடியாது. எனினும், பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அது சம்பந்தமாக எந்தவொரு பிரசைக்கும் உயர் நீதிமன்றத்தில் மனுச்செய்ய ஏற்பாடுகள் உள்ளன.

அரச, தனியார் சட்டங்களென 1977 – 2020ஆம் ஆண்டு வரை 1,898 சட்டங்கள் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. 2001ஆம் ஆண்டு 12 சட்டங்களும் 2020ஆம் ஆண்டு 08 சட்டங்களுமென மிகக் குறைந்த எண்ணிக்கையில் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற அதேவேளை, 1988 ஆம் ஆண்டு அதிகளவில் 84 சட்டங்கள் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்டுள்ளன. இவ்வாறாக காலத்துக்குக் காலம், தேவைக்கேற்ப நமது நாட்டில் சட்டங்கள் இயற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன.


1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையே இலங்கையின் மேதகு சபையாகும். சர்வஜன வாக்கெடுப்பு அறிமுகப்படுத்தப்பட்டாலும், 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை 1959ஆம் ஆண்டிலேயே வழங்கப்பட்டது. வாக்குரிமை மூலம் நாட்டு மக்கள் தங்கள் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்து அனுப்புவது தங்களின் அபிலாஷைகளை அப்பிரதிநிதிகள் நிறைவேற்றித் தருவார்களென்ற எண்ணத்தினாலாகும்.

மக்களுடைய அபிலாஷைகள் நிறைவேற்றப்படுகிறதோ, இல்லையோ பாராளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகள் சிலவேளைகளில் ஹன்சாட் அறிக்கை மற்றும் பத்திரிகை, வானொலி. தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களோடு அடங்கி விடுகின்றன. இன்னொரு வகையில் சொல்லப் போனால், பாராளுமன்றத்தின் மூலம் காரியம் கைகூடியதோ, இல்லையோ ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவது மட்டும் வழமையான நடவடிக்கையாக மாறி வருகின்றது.



எது எப்படியிருந்தாலும், பாராளுமன்றத்தில் சில சுவாரசியங்கள் அவ்வப்போது இடம்பெற்றுக் கொண்டுதான் வருகின்றன. அந்த வகையில், ஒவ்வொரு முக்கிய விடயத்தையும் தேர்ந்தெடுத்து ஒத்திவைப்புப் பிரேரணை விவாதமாக மேற்கொள்ளும் புதிய நடைமுறை 1997.09.11 ஆம் திகதி கொண்டு வரப்பட்டது. இன விகிதாசார அடிப்படையிலும் தகுதி அடிப்படையிலும் அரச சேவைக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வது சம்பந்தமாக 'அரச நியமனங்கள்' என்ற தலைப்பிலான விடயம் அன்றைய தினத்தில் ஆராயப்பட்டது. எதிர்க்கட்சி சார்பில் ஏ.சீ.எஸ். ஹமீத் அவர்கள் இவ் விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். அரசாங்கத் தரப்பிலிருந்து அப்போதைய பாராளுமன்றச் சபை முதல்வரும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சருமான ரத்னசிறி விக்ரமநாயக்கவினால் அதற்குப் பதில் அளிக்கப்பட்டது. இது பலரதும் பாராட்டைப் பெற்ற விடயமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

நமது பாராளுமன்றத்தில் சுமார் 35 மணி நேரம் சபை அலுவல்கள் தொடர்ந்து நடைபெற்றிருப்பது ஒரு வகையில் வியப்பான விடயந்தான். அந்த நிகழ்வு 1962.09.28ஆம் திகதி இடம்பெற்றது. அன்றைய தினம் மு.ப. 10.00 மணியிலிருந்து மறுநாள் பி.ப. 8.46 மணிவரை அக்கூட்டம் நடைபெற்றது. இது பாராளுமன்ற வரலாற்றில் மிக நீண்டநேரம் நடந்த கூட்டமாகும். கலாநிதி டபிள்யு. தஹநாயக்க 23.08.1945ஆம் திகதி பாராளுமன்றத்தில் 13 மணித்தியாலம் கொண்ட மிக நீண்ட உரையினை ஆற்றிச் சாதனை படைத்தார். ஆசியாவில் மிகப் பழைமை வாய்ந்த ஜனநாயக நாடான எமது இலங்கைத் திருநாட்டில் இத்தகைய நிகழ்வுகள் இடம்பெற்றிருப்பது எமக்குப் பெருமை.



எம்.எஸ்.எம். லின்னாஸ்...
(ஹன்சாட் பிரதிப் பதிப்பாசிரியர்)

# இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் முன்னோடி ஹஸன் மௌலானா

இலக்கியம் என்ற பொதுமைப்படுத்தலுக்குள் தமிழ் இலக்கியம், இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்கின்ற வகைமைப்பாடுகள் காலத்திற்கு ஒவ்வாதவையாக மாறிவிட்ட இக்காலத்தில், இஸ்லாமியர் தமிழுக்காற்றிய பணிகளை தனிமைப்படுத்திக் காட்ட வேண்டிய காலத்தின் தேவை எழுந்த போது, அதற்கெனத் தம்மை அர்ப்பணித்தவர்களுள் பேராசிரியர் ம.மு.உவைஸ் உள்ளிட்டோர் முக்கியமானவர்கள். அவர்களது வழித் தொடரியாக நின்று மரணிக்கும் காலம் வரை 'இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்' என்ற எண்ணக்கருவின் பரவலுக்காகவும் அதன் வாழ்நிலைக்காகவும் உழைத்தவர் மர்ஹூம் செய்யித் ஹஸன் மௌலானா.

இலக்கிய ரீதியில் மருதமுனை மண்ணுக்கு புகழ் பரப்பியோர் அல்லது பரப்பிக் கொண்டிருப்போர் பட்டியலிடல் மிகவும் நீளமும் ஆழமும் கொண்டவை. அப்படியலில் மிகக் கனதியான பக்கத்துக்குச் சொந்தக்காரர் மௌலானா.

பக்தாதின் மௌலானா பரம்பரையைச் சேர்ந்த அஷ் ஷெய்க் செய்கு அப்துல் றஸாக் மௌலானாவின் மகனாக 1937.10.10 இல் பிறந்த ஹஸன் மௌலானா, இளமைக் காலத்திலிருந்தே மார்க்க அறிவும் தமிழறிவும் பெற்றவர். தமிழ் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற ஹஸன் மௌலானா, நிந்தவூரில் பிரபல்யமான செய்கு அப்துல் றஹ்மான் மௌலானவின் மகளான பழீலாவை திருமணப் பந்தமாக்கிக் கொண்டார்.



பேராசிரியர் ம.மு.உவைஸ் அடங்கலாக 'இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்' என்ற விதை இலங்கையில் கருவாவதற்குக் காரணியாக இருந்து தம் சொந்த மண்ணிலேயே அதனை விருட்சமாக்கி பெருமை சேர்த்தவர் மர்ஹூம் செய்யத் ஹஸன் மௌலானா.

1973 இல் திருச்சியில் ஆரம்பமான மாநாடுகள் தொடங்கி சென்னை, காயல் பட்டினம், கொழும்பு, கீழைக்கரை என 2011 இல் மலேசிய மாநாடுகள் வரை 8 மாநாடுகள் இஸ்லாமியர்களின் பணிகளை ஆவணப்படுத்த வெளிக்கிளம்பின. இவை தவிர வேறுபட்ட சில அமைப்பியலிலும் மாநாடுகள் இவ்வகையில் நடந்தேறியுள்ளன.

இஸ்லாமிய இலக்கியக் கழகத்துடன் முரண்பட்ட வகையில் காயல் பட்டினத்தில் நடந்த 15 ஆவது மாநாடு வரை எல்லாமே இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் கருவூற்றையே பறைசாற்றியுள்ளன.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்ற கதையாடல் 1966 ஆம் ஆண்டு ஜுலை 2 ஆம் திகதி மருதமுனையில்தான் கருப்பெற்றது. நபிகளாரின் பிறந்த தினத்தன்று நடந்தேறிய அம்மாநாட்டின் உயிர்நாடியாக இருந்து உழைத்தவர்தான் ஹஸன் மௌலானா. புலவர்மணி ஷரிபுத்தீனுக்கு புலவர்மணி பட்டம் கொடுத்து கௌரவித்த புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை உட்பட பல அறிஞர் பெருமக்களை ஒன்றிணைத்த இம்மாநாடு தமிழ்_ முஸ்லிம் இலக்கிய உறவுக்குரிய முக்கிய மைற்கல்லாகும். இஸ்லாமிய இலக்கிய மரபை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திய முயற்சியாக இதனைக் கொள்ளல்லாம்.

கலாநிதி ம.மு.உவைஸின் மருதம் முதல் வகுதை வரை, இஸ்லாமிய இலக்கியத்தில் திருச்சித் திருப்பம் ஆகிய நூல்களில் இம்மாநாடுகள் தொடர்பில் ஆவணப்படுத்தி இருப்பது மௌலானாவின் பணிக்கு மிகப் பெரிய நற்சான்றாகும்.

மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதிகளற்ற அக்காலத்தில் மருதமுனையில் உலக இஸ்லாமிய மாநாடொன்றை நடத்த வேண்டுமென துணிந்திருப்பதானது இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் மீதான மௌலானாவின் பற்றுதிக்கான அழியாத சான்றாகும்.

யாழ்ப்பாண பதுறுதீன் புலவரின் முகைதீன் புராணத்திற்கு மௌலானா உரை எழுதினார். இது பற்றி எழுத்தாளர் அ.ஸ. குறிப்பிடும் போது " முகைதீன் புராணத்திற்கு உரையெழுதியது சாமான்யமான விடயமல்ல. தமிழ் இலக்கியத் தகுதியுடைய ஒருவரால் இலகுவில் உரை வகுத்திட முடியாது. குர்ஆன், ஹதீஸ் உள்ளிட்ட இஸ்லாமிய மூலாதாரங்களின் மீது ஆழ்ந்த அறிவும் அவசியம்.

அது சாத்தியமானதனாலேயே உரையெழுதும் பணி மௌலானாவிற்கு இலகுவாகியது" என்றார்.



மருதமுனையின் எழுத்திலக்கிய இலக்கிய ஆரம்பிப்பாளராகக் கொள்ளப்படும் சின்னாலிமாப்பாவின் (மீரா லெப்பை ஆலிம்) "ஞானரை வென்றான் மழைக்காவிய மீள்பதிப்புரை" , மருதமுனையில் நடந்த முதலாவது உலக இஸ்லாமிய மாநாட்டு உரையாளர்களின் கருத்துரைகளின் சாரமான "இஸ்லாமிய தமிழ் இலக்கிய சொற்பொழிவுகள்(1968)" இறைவனின் திருநாமங்களினூடான வல்லமைகளைக் கொண்டமைந்த படைப்பாளுமையின் சிறப்புக் கூறும் " இறைவனும் பிரபஞ்சமும்" , யாழ்ப்பாணத்து பதுறுதீன் புலவரின் "முகைதீன் புராண உரை" அரபுத் தமிழ் இலக்கியத்தின் ஈழத்துப் பங்காளிகளில் முக்கியமானவர்களான அரபுத் தமிழ் தப்ஸீர் எழுதிய செய்கு முஸ்தபா, முஸ்லிம் நேசன் மற்றும் அஸ்ராருல் ஆலம் உள்ளிட்டவைகளில் அரபுத் தமிழை மக்கள் மயப்படுத்திய அறிஞர் சித்திலெப்பை உள்ளிட்டோரின் வழிநின்று எழுதிய "அரபுத் தமிழ் கவிதைகளின் யாப்பமைதி", பண்டைய இலக்கியங்களை இஸ்லாமிய இலக்கியங்களுடன் சமன்காணும் "இஸ்லாமும் தமிழும் இலங்கியச் சங்கமம்" மற்றும் அச்சாவதற்கான ஏற்பாடுகளை அடைந்த " கஃபாவின் சிந்தனைகள்" போன்றன மௌலானாவின் எழுத்திலக்கிய அடையாளப்படுத்தல்களுக்கான நிலைநிறுத்திகளாகும்.

1993 இல் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு வழங்கிய 'தாஜுல் அதீப்' , 1994 ஆம் ஆண்டு இந்தியாவில் நடந்தேறிய 6 வது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கலைஞர் மு.கருணாநிதி பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கியமை, 2015 இல் கம்பன் கழகம் வழங்கிய விருதும் கௌரவிப்பும், 2012 இல் இஸ்லாமி இலக்கிய காவலர் விருது, 2016 இல் மருதமுனையில் நடந்த இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பொன்விழா மாநாட்டில் 1966 ஜுலை 2 ஆம் திகதி முதலாவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டினை நடத்த வழிகோலியமைக்கான நினைவுச் சின்னம் மற்றும் பொற்கிழி கௌரவம் முதலியன மௌலானாவின் பணிகளுக்காகக் கிடைத்த பேறுகளாகும்.

2016 இல் மருதமுனையில் நடந்த பொன்விழா மாநாட்டில் அன்னாரது தலைமையில் பல்வேறு தடங்கள் நடந்தேறியமையும் அன்னார் கௌரவம் பெற்றமையும் அவருக்கும் அவரது மண்ணுக்கும் கிடைத்த கீர்த்திகளாகும்.

சைவத் தமிழ் வழி நின்று தமிழ் இலக்கிய உலகிற்கு அரும்பணியாற்றிய ஆறுமுகநாவலர், விபுலானந்த அடிகள் போல் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்கு அரும்பணியாற்றிய ஹஸன் மௌலானா 16.03.2021 அன்று காலமானார். அன்னாரின் மறைவு மிக நீண்ட இடைவெளியினை உண்டுபண்ணும் பேரிழப்பாகும்.

ஜெஸ்மி எம்.மூஸா
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# இனமுரண்பாட்டை உருவாக்கும் சக்திகளை தோற்கடிப்பதே டி.எஸ். இற்கான கௌரவம்

## தேசபிதா டி.எஸ்.சேனநாயக்கவின் 69ஆவது நினைவு தினம் நேற்று

மார்ச் மாதம் 22ஆம் திகதி தேசபிதா டி எஸ் சேனநாயக்காவின் நினைவு தினமாகும். அவர் மறைந்து நேற்றுடன் 69 வருடங்களாகின்றன. எமது தாய்நாட்டின் சுதந்திரத்திற்கான இறுதிப் போராட்டத்தின் போது தலைமை தாங்கிய அவரைக் காணும் பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லை. ஆயினும் அவரின் உரைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து வாசித்து அதன் மூலம் அவரைப் பற்றி அறிந்து கொண்டேன்.

கடந்த நாட்களில் பாராளுமன்ற நூலகத்தில் அவரைப் பற்றிய புத்தகங்கள், ஹன்சார்ட் அறிக்கைகள், பத்திரிகைச் செய்திகள் பலவற்றை வாசிக்க நீண்ட நேரம் செலவிட்டேன்.

அச்சந்தர்ப்பத்தில் அவர் லண்டன் வானொலியில் பிரித்தானிய மக்களுக்காக ஆற்றிய உரை ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.( மேற்கோள் 1952 மார்ச் 23ம் திகதிThe times of Ceylon Sunday)

"கிழக்கிலுள்ள நாம் ஒளிக்காக பல ஆண்டுகளாக கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டு வந்தோம். அதிகாரத்திற்காகவும் பலவீனமானவர்களை சுரண்டுவதற்காகவும் ஏற்படுத்திய பயம், சந்தேகம் பிரிவு தொடர்பான கசப்பான பாடங்களின் மூலம் பலவற்றை கற்றுள்ளோம்.

மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அடிப்படை ஆன்மீக மதிப்பு தொடர்பாக புரிந்துணர்வுடன் செயல்படுவதால் மாத்திரம்தான் சர்வதேச ரீதியில் சரியான புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும் என நாம் நம்புகிறோம்".

டி.எஸ். சேனாநாயக்க கூறிய கருத்துக்கள் தற்போதைய காலத்துக்கும் பொருந்தும். கிழக்கு மேற்கு, கறுப்பு வெள்ளை, இன மத எல்லைகளைக் கடந்த அவரின் வானொலி உரை மூலம் பிரித்தானிய மக்களை விளிக்கும் போது 'மனித இனத்தின் ஒன்றிணைந்த தன்மை' மற்றும் 'நடுநிலைத் தன்மை' பற்றியே தெரிவித்தார். அந்த உரை மூலம் தெரியவருவது அவரி ன் எண்ணங்களில் காணப்பட்ட பௌத்த தர்மத்தின் கருத்துகளாகும்.

அவ்வழியில் சென்று. அந்தக் கருத்துக்களுக்கு அமைய, அவர் இலங்கை மக்களுக்கு தெரிவித்த கருத்து எனது ஞாபகத்தில் வருகின்றது. அது 1946 செப்டம்பர் மாதம் ஆறாம் திகதி கொழும்பு பாம்கோட் மாளிகையில் அவர் தெரிவித்த கருத்தொன்று ஞாபகத்தில் வருகின்றது. ஐக்கிய தேசிய கட்சியை உத்தியோகபூர்வமாக அமைத்த தினத்தில் தெரிவித்தது.

"சிங்களவர்களாகட்டும் ,தமிழர்களாகட்டும், முஸ்லிம்களாகட்டும் நாம் ஒரே இனம்.இலங்கையர்களுக்கு ஆசிர்வாதம் கிடைக்கட்டும்"

அன்றைய தினம் அவர் மேலே கூறப்பட்ட வார்த்தைகளுடனேயே தனது உரையை ஆரம்பித்தார். இனங்கள் தொடர்பாக அவர் கூறிய கருத்து இன்றும் பொருத்தமானது என்பது எனது கருத்தாகும்.

அத்தினம் சிங்கள மகா சபை, தமிழ்ச் சங்கம்,முஸ்லிம் லீக், பறங்கியர் சங்கம்,சோனகர் சங்கம், மலே லீக் என பிரி பிரிந்திருந்த இனங்களை ஒரே கொடியின் கீழ் இணைத்த தினமாகும்.

"நீங்கள் பிரிந்து வாழும் இனம். உங்களுக்கு சுதந்திரம் வழங்கினால் ஒருவரையொருவர் விட்டு விலகுவீர்கள். சுதந்திரம் வேண்டுமென்றால் இணையுங்கள்"

இது ஏகாதிபத்தியவாதிகள் சுதந்திரம் வழங்குவதற்கு விதித்த ஆரம்ப நிபந்தனையாகும். வெளியில் அவ்வாறு கூறினாலும் இலங்கையர்கள் இன,மத, குல, உடரட்ட பஹதரட்ட, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என பல் வேறுபட்ட வகையில் பிரிக்கும் உபாயமே அதுவாகும். சிலர் அந்த உபாபயத்துக்கு இரையானார்கள். சிலர் சுதந்திரத்துக்கு ஆதரவளிக்க 'ஐம்பதுக்கு ஐம்பது' நிபந்தனை விதித்தார்கள்.

டி.எஸ். உள்ளிட்ட சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்னால் கடும் சவால் நிலவியது. அது இலங்கையர்களை ஓரணியில் இணைக்கும் சவாலாகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்தது துயரமான சம்பவத்துடன் ஆகும் . அது நாட்டை இரண்டாக பிரித்த சம்பவம். ஆனால் இறுதியில் "நாம் இணைந்து விட்டோம் எமக்கு தாமதமின்றி சுதந்திரத்தை வழங்குங்கள்" என்று கூறும் அளவுக்கு வலுவான ஒற்றுமையை ஏற்படுத்த எமது தலைவர்களால் முடிந்தது.

சுதந்திரத்திற்குப் பின்னர் அவர் அமைத்த அரச அமைச்சரவை அங்கத்தவர்களாக ஐம்பதுக்கு ஐம்பது நிபந்தனை விதித்த தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலத்தையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தார். சந்தேகம், அவநம்பிக்கை போன்ற எண்ணங்களை பின்தள்ளி, குரோத எண்ணங்களை பின்தள்ளி இணைக்க அவருக்கிருந்த எண்ணத்தை புரிந்து கொள்ள முடியும் இனங்களை கட்டியெழுப்பும் முயற்சியில் ஆதரவைப் பெறவும் அவரால் முடிந்தது.

இவ்வாறு இலங்கை மக்களை இணைத்து, சுதந்திரத்தை பெற தலைமை தாங்கிய தலைவராக மாத்திரமல்ல, சுதந்திரத்திற்கு பின் நாட்டை கட்டியெழுப்பும் நடவடிக்கையிலும் அனைத்து மக்களையும் இணைத்து சிறப்புவாய்ந்த அரசியலில் ஈடுபட்ட எடுத்துக் காட்டான தலைவராக சரித்திரத்திலும் இடம்பிடித்துள்ளார்.

டி. எஸ். சேனாநாயக்க மறைந்த வேளையில் அவரது மறைவை தெரிவித்த பிரித்தானிய டெய்லி டெலிகிராப் அவர் குறித்து பிரசுரித்த செய்தியை மேற்கோளாக தெரிவிக்க விரும்புகின்றேன்.

"கருணையான,உபாய ரீதியான, தைரியமான பாராளுமன்ற உறுப்பினர் என்பதை அவர் நிரூபித்துள்ளார். பலம் பொருந்திய அரசாங்கம் ஒன்றை அமைக்க சுயாதீன உறுப்பினர்களை தமது கட்சியில் இணைத்துக் கொண்டது மாத்திரமல்ல, தமது எதிராளியான இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆதரவைப் பெறவும் அவரால் முடிந்தது".

டி.எஸ். சேனாநாயக்க தொடர்பான சிறிய குறிப்பு, அக் காலத்தில் வாழ்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் இருவருடைய கருத்துகளை மேற்கோளாகக் காட்ட விரும்புகிறேன். ஒருவர் அரசு சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம், மற்றையவர் டொக்டர் எம். சி. எம். கலீல் ஆகியோரே அவர்களாவர்.

1952ஆம் ஆண்டில் ஏப்ரல் 2ஆம் திகதி அவரின் மறைவு தொடர்பாக இரங்கல் உரையாற்றும் சந்தர்ப்பத்தில் அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

ஜி. ஜி.பொன்னம்பலத்தின் உரையின் எடுத்துக் கொள்ளப்பட்ட பகுதி:

"எமது சுதந்திரத்தின் இறுதிப் போராட்டத்தில் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை தலைமைத்துவம் வகித்த இருவரின் பெயரை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் டி. எஸ். சேனாநாயக்க மற்றும் பொன்னம்பலம் இராமநாதன் இருவருமே. அவர்களின் பெயர்கள் எமது தாயகம் உள்ள வரை நினைவு கூரப்படும்".

"டி.எஸ். சேனாநாயக்க எமது அரசியலிலிருந்த சிறந்த தலைவர். அவர் வார்த்தைகளால் கூற முடியாத அளவில் ஜனநாயகவாதியாக காணப்பட்டார். அவர் எவ்விதத்திலும் கிணற்றுத் தவளை எண்ணம் கொண்டவரல்ல. ஏகாதிபத்தியவாதத்தை முற்றாக வெறுத்த ஒரு தலைவராவார். எமது நாட்டு மக்கள் அவரின் எடுத்துக்காட்டுகளை பின்பற்றுவார்கள் என நம்புகிறேன்."


எம் சி எம் கலீல் அவர்களின் உரையிலிருந்து ஒரு பகுதி.

"சேனாநாயக்க உடல் பலத்தாலும், மனவலிமையாலும், பண்பாலும் உயர்ந்த மனிதர். 1915ஆம் ஆண்டு இருண்ட நாட்களில் சிறையிலிருந்து விடுதலையாகி தனது தனித்தன்மையை மீண்டும் உலகிற்கு நிரூபித்தார். அப்போதைய இராஜாங்க அமைச்சரவையில் இருந்த அப்துல் ரஹ்மானுடன் இணைந்து நாடு பூராவும் முக்கிய முஸ்லிம் கிராமங்களுக்குப் பயணம் செய்து, அவர்களோடு உணவுண்டு, முஸ்லிம்_ சிங்கள மக்களிடையே சமாதானம் மற்றும் சகோதரத்துவத்தை மீண்டும் ஏற்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள் இன்றும் எனது ஞாபகத்தில் உள்ளன".

"அதேபோன்று அவரது சொந்த வீடான வுட் லேண்ட்ல் நடைபெற்ற ஏனைய பிரிவினருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் "ஏன் உங்களால் இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையானோரை நம்ப முடியாமல் உள்ளது. நாம் ஒருபோதும் உங்களது நம்பிக்கைக்குத் துரோகம் செய்ய மாட்டோம். என்று கூறியது எனது ஞாபகத்தில் உள்ளது. நாம் அவருடன் இணைந்து கொண்டோம். அது பற்றி இன்று வரை கவலை கொள்ளவில்லை."

டி. எஸ் சேனாநாயக்க மற்றும் டொக்டர் கலீல் ஆகியோருடனான கலந்துரையாடல் எமது எதிர்கால சந்ததியினர் செல்ல வேண்டிய பாதைக்கு ஒளியை பெற்றுத் தருவதாகும். ஏகாதிபத்தியவாதிகளின் பிரித்தாளும் உபாயத்தை இன்று நாம் கண்கூடாகக் காண்கின்றோம். எம்மிடையே மோதலை ஏற்படுத்தி அதன் மூலம் குறுகிய நன்மையை அடைய நினைக்கும் அரசியலை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

ஆசியாவில் இரண்டாவதாகக் காணப்பட்ட எமது தாயகத்தை விட பின்தங்கிய நாடுகள் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டுள்ளன. கீர்த்தி மிக்க நாடாக எமது தாயகத்தை எதிர்கால சந்ததிக்கு ஒப்படைக்க வேண்டும் என்றால் எம்மிடையே மோதலை ஏற்படுத்தும் சக்திகளை தோற்கடிக்க வேண்டும். இலங்கை மக்களை ஒன்றிணைக்க பங்களிப்பை வழங்குவது தேசத் தந்தை டி.எஸ். சேனநாயக்கவுக்கு நாம் அளிக்கும் கௌரவம் என்பதை நான் நம்புகிறேன்.





இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்...
முன்னாள் அமைச்சர்
தமிழில்: வயலட்

# முப்பது ஆண்டு கல்வி சேவையிலிருந்து ஓய்வு

பொத்துவில் அல் அஷ்ரப் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய அ.மு.அப்துல் ஹக்கீம் தனது முப்பது வருட ஆசிரிய மற்றும் அதிபர் சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

பொத்துவில் பிரதேசத்தில், முதல் முறையாக சிங்கள மொழி ஆசிரியராக நியமனம் பெற்ற இவர், பின்னர் சமூகக்கல்வி, தமிழ்,சித்திரம் போன்ற பாடங்களில் மாணவர்களை அதிபரின் வேண்டுதலில் தேர்ச்சி பெற வைத்தார்.



இவர், பொத்துவில் மத்திய கல்லூரி, இன்ஸ்பெக்டர் ஏத்தம் அ.த.க.வித்தியாலயம், அல் கலாம் முஸ்லிம் வித்தியாலயம் என்பவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றி,இறுதியாக அக்/அல் அஷ்ரப் வித்தியாலயத்தில் 2007 முதல் 2020 வரை அதிபராகக் கடமையாற்றினார்.

அத்தோடு 1990ஆம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்று பொத்துவில் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றும் போது பொத்துவில் மகாவித்தியாலயத்தை, மத்திய கல்லூரியாகத் தரம் உயர்த்தவும், தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்தவும் நடவடிக்கை எடுத்து 1990ஆம் ஆண்டே மத்திய கல்லூரியாகத் தரம் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இவர் ஒரு நாடக நடிகருகும் கவிஞரும், சிறந்த மேடைப் பேச்சாளருமாவர். 1990.03.20 இல் ஆசிரியர் நியமனத்தைப் பெற்று சேவை செய்து தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.


சேகுமதார்_ குழந்தை உம்மா தம்பதியருக்கு 1961ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி மூன்றாவது மகனாகப் பிறந்த அ.மு.அப்துல் ஹக்கீம், தனது ஆரம்பக் கல்வியை அ.மு.க.பாடசாலையில் (தற்போதுள்ள மினாறுல் உலூம் வித்தியாலய) கற்று, இடைநிலை,உயர்தரக் கல்வியை தற்போது தேசியப் பாடசாலையாக தரம் மாற்றப்பட்டிருக்கும் பொத்துவில் மத்திய கல்லூரியில் கற்றுக் கொண்டார்.

சிறுவயதில் போலியோ நோயால் பாதிக்கப்பட்டு உடல் நோயுடன், உள உறுதியுடன் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற அ.மு.அப்துல் ஹக்கீம் அவர்களின் கல்விப் பணியோடு சமூகப் பணியில் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும் என பாடசாலை ஆசிரியர்கள் பிரார்த்திக்கின்றனர்.

எம்.எஸ்.எம்.ஹனீபா...
(ஒலுவில் விசேட நிருபர்)

# குஷ்பு களத்தில் இறங்கியதால் களைகட்டும் ஆயிரம் விளக்கு!





தமிழகத்தில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதி இப்போது கூடுதலாக ஆயிரம் விளக்குகளை தன்னுள் பொருத்திக் கொண்டு ஜோதியாக எரிகிறது. அ.தி.மு.க கூட்டணியில் பா.ஜ.க சார்பில் நடிகை குஷ்பூ இத்தொகுதியில் களமிறக்கப்பட, போட்டி சுவாரஸ்யமாகியுள்ளது. அனல் பறக்கிறது. ஆனால். எல்லாவற்றையும் விட முக்கியமான கேள்வி, அத்தொகுதியில் வசிக்கும் ரஜினிகாந்தின் வாக்குகள் யாருக்கு என்பதே?

அரசியலில் களமிறங்குவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரஜினி, உடல்நிலையை காரணம் காட்டி கரை ஒதுங்க, அவரது ரசிகர்கள் இந்த நிமிடம் கூட ஏதாவது அதிசயம், அற்புதம் நடந்து விடாதா என்ற ஏக்கத்தில் உள்ளனர்.

காரணம், 25 ஆண்டுகளாக 'அவர் வருவார்' என்ற எதிர்பார்ப்புடன், எத்தனையோ ரசிகர்கள் காசு பணம் பார்க்காமல், குடும்பம் பார்க்காமல், நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்தனர். ஆனால், அவையனைத்தும் ரஜினியின் ஒற்றை அறிக்கையில் தூள்தூளாகின.

தேர்தலில் களமிறங்கவில்லை என்றாலும், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் யாருக்கு வாக்களிக்கப் போகிறார் என்பது இன்றும் பரபரப்பான எதிர்பார்ப்பாகும். ஆயிரம் விளக்கு தொகுதியில் தி.மு.க சார்பில் மருத்துவர் எழிலனும், பா.ஜ.க சார்பில் குஷ்புவும் போட்டியிட, தி.மு.க vs அ.தி.மு.க என்ற நிலை மாறி, திமுக vs பா.ஜ.க என்று களம் சூடுபிடித்துள்ளது.

பொதுவாக இந்த தொகுதி தி.மு.க கோட்டை என்றாலும், இம்முறை குஷ்பூ களமிறங்கியுள்ளதால் அவரது செல்வாக்கு எப்படி இருக்கும் என்பதை மே 2ம் திகதிதான் அறிய முடியும். எனினும், இரு வேட்பாளர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். எழிலன், தி.மு.க தலைமையின் குடும்ப மருத்துவர் என்பதால், அவருக்கு தொகுதியில் நல்ல செல்வாக்கு உள்ளது. ரஜினிக்கும் இவரை நன்கு தெரியும். பிரபலமான மருத்துவர். கருணாநிதியின் மருத்துவர் என்ற அளவில் ரஜினிக்கு தெரியும்.

குஷ்புவை பொறுத்தவரை எதுவும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எத்தனையோ படங்களில் ரஜினிக்கு ஹீரோயின். 'பெஸ்ட் ஒன் ஸ்க்ரீன்' ஜோடியாக வலம் வந்தவர்கள். சினிமா மட்டுமல்ல, அதைத் தாண்டி ரஜினி குடும்பத்துடன் எப்போதும் நெருக்கமாக இருப்பவர் குஷ்பூ.

ரஜினியின் மனைவி லதாவின் சிறந்த தோழிகளில் ஒருவர். எல்லாவற்றுக்கும் மேலாக குஷ்பூவின் நெருக்கமானவர்களில் ஒருவராக இருப்பவர் ரஜினி. ரஜினி அரசியலுக்கு வருவதாக அறிவித்த போது, அவரை பெரியளவில் பாதிக்கச் செய்யும் பணியை ஆவிபறக்க செய்த கட்சிகளில் உச்ச இடத்தில் இருந்தது தி.மு.கதான். அ.தி.மு.க ரஜினியை எந்த இடத்திலும் உரசவில்லை.

## ரஜினியின் ஆதரவு யாருக்கு என்பது புரியாத மர்மம்!

ஆனால், ரஜினியின் ஆதி முதல் அந்தம் வரை அனைத்தையும் தோண்டியெடுத்து, மேடைக்கு மேடை, வீதிக்கு வீதி விட்டுக் கொண்டிருந்தது தி.மு.கதான்.

தி.மு.கவுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தது ரஜினி மட்டும்தான்.

இன்னும் சொல்லப் போனால் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு கடந்த இரண்டு மூன்று வருடங்களாக பெரும் தலைவலியாக, வெளியே சொல்ல முடியாத புலம்பலாக இருந்தது ரஜினிதான். ரஜினி களத்திற்குள் வந்தால், தி.மு.க, அ.தி.மு.க என்று பல கட்சிகளின் வாக்குகளும் சிதறும் என்பதால் ஏற்பட்ட கலக்கம் அது. இப்போது ரஜினியின் ஆதரவு என்பது யாருக்கு என்பதே பெரும் எதிர்பார்ப்பாக உள்ளது.

குஷ்புவோ, 'ரஜினியின் ஆதரவு எனக்கு கண்டிப்பாக கிடைக்கும்' என்று வெளிப்படையாக கூற, எழிலனோ, 'அவரு யாருக்கு வேணாலும் வாக்கு போடட்டும்' என்கிறார். நட்பின் அடிப்படையில் பார்த்தால் ரஜினியின் வாக்கு, குஷ்புவுக்கு கிடைக்கும் எனலாம்.

ஆனால், ரஜினிக்கு வேறு திட்டம் இருக்கிறது என்கிறார்கள் சிலர். தி.மு.க கூட்டணி, அ.தி.மு.க கூட்டணி என இருவருக்குமே வாக்களிக்காமல், வேறு ஒரு புதியவருக்கு வாக்களிக்கலாம் என்ற எண்ணம் ரஜினிக்கு இருப்பதாக கூறுகின்றனர். குறிப்பாக, நண்பர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யத்தையும் ரஜினி பரிசீலனையில் வைத்திருப்பதாக கூறுகின்றனர்.

## பளையில் 239 கிலோ...

பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடற்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவரை கடற்படையினர் கைது செய்தனர். மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளையும், சந்தேகநபர்களையும் பளை பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சம்பவம் குறித்து நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யப்படவுள்ளதாக பளை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## பசறையில் நேற்று மீண்டும் விபத்து...

படல்கும்புர நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று எதிர் திசையில் வந்த சிறிய ரக பாரவூர்தியுடன் மோதுண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் பயணித்த முச்சக்கரவண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளானது. அதில் பெண் ஒருவர் பலியானதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பசறை மற்றும் பதுளை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஏப்ரல் 21 க்கு முதல் குற்றவாளிகளை...

என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கேட்டுக் கொண்டுள்ளார்.

அவ்வாறு எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன் குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படாவிட்டால் நாடு தழுவிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளப் போவதாகவும் பேராயர் தெரிவித்துள்ளார்.

திருப்பலிப் பூசை ஒன்றின் பின்னர் மக்கள் மத்தியில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எத்தகைய சக்திகள் செயற்பட்டாலும் ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதி கிடைக்கும் வரை தாம் மக்களுடன் அணி திரள்வதாகவும் தெரிவித்துள்ள பேராயர், நீதி நிலைநாட்டப்படுவதை காணவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள பேராயர்,எதிர்வரும் ஏப்ரல் 21ம் திகதிக்கு முன்பதாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் மேற்கொள்ளப் போகும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மிகவும் பலமானதாகவும் நாடு தழுவியதாகவும் அமையும்.

ஆகக் குறைந்தது எந்த பாரபட்சமுமின்றி சம்பந்தப்பட்ட ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும். எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் அதனை மேற் கொள்ளாவிடில் தொடர்ச்சியான எதிர்ப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

# பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தின் ஊழியர்கள் 474 பேருக்கு கொரோனா

### ஆராய அமைச்சர் கம்மம்பில குழு நியமிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சப்புகஸ்கந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தின் ஊழியர்கள் 474 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் ஆராய்வதற்காக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் உதய கம்மம்பில ஐவர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளார்.

மேற்படி குழுவுக்கு பெற்றோலிய வளத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் சந்திகா எத்துகல தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சின் ஆலோசகர் லலித் வசந்த, பெற்றோலியக் கூட்டுத்தாபத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் புத்திக மடிஹேவா, அமைச்சின் சிரேஷ்ட உப செயலாளர் நயனா சேனாரத்ன, களஞ்சியப்படுத்தல் பிரிவின் சுகாதார அதிகாரி ரோசினி சிறிவர்தன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 10 தினங்களுக்குள் அது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் உதய கம்மன்பில மேற்படி குழுவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (ஸ)

## ராஜித மற்றும் சதுரவிடம்...

விசாரணைப் பிரிவில் வாக்குமூலம் வழங்கினர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கடத்தலுக்கு உட்பட்டதாக கூறப்படும் ஊடகவியலாளர் சுஜீவ கமகே, சத்துர சேனாரத்னவின் அலுவலகத்தில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவை சந்தித்தமை தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்காகவே அவர்கள் இருவரும் நேற்று கொழும்பு குற்றத் தடுப்பு விசாரணை பிரிவில் ஆஜராகி வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

நேற்று முற்பகல் 11:20 மணியளவில் அவர்கள் இருவரும் கொழும்பு குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு சமூகமளித்திருந்த நிலையில் சுமார் ஐந்து மணித்தியாலங்கள் அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவிலிருந்து வெளியேறும் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன,

நாம் அரசியலுக்கு வரும்போது பதவி, சிறப்புரிமைகள் போன்றவற்றோடு துன்பங்களையும் அனுபவிப்பதற்கு தயாராகவே வரவேண்டும். அதுதான் அரசியல். நான் இடதுசாரியாக இருந்து பல்வேறு நெருக்கடிகளை சந்தித்துள்ளேன் எதிர்காலத்திலும் அவ்வாறானவற்றிற்காக அர்ப்பணிப்பேன் என்றும் அவர் தெரிவித்தார்.(ஸ)

## பதுளை வீதி பஸ் விபத்து;

# காரணங்களை கண்டறிய விசாரணைக்குழு நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மொனராகலை பதுளை வீதியில் பதின்மூன்றாம் மைல்கல்லுக்கு அருகில் கடந்த சனிக்கிழமை (20) இடம்பெற்ற 14 பேரை பலிகொண்ட பஸ் விபத்து தொடர்பான உண்மை நிலையை கண்டறிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அத்துடன் சம்பந்தப்பட்ட பஸ் சாரதி மற்றும் டிசம்பர் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ .ஆர்.பேமசிறிஅது தொடர்பில் தெரிவிக்கையில்,

மேற்படி விபத்துக்கான காரணங்களை கண்டறிதல் மற்றும் எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற விபத்துக்களை தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகளை பெற்றுக் கொள்ளும் வகையிலேயே மேற்படி குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவ்விபத்து இடம்பெற்ற பகுதியில் வீதி பாதுகாப்பு நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்பட்டதா என்பதை கண்டறியவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அப்பகுதியின் பாதுகாப்பைக் கருதி விபத்து இடம்பெற்ற பகுதியில் விசேட சமிக்ஞை விளக்கை பொருத்தி உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் , விபத்தின்போது எதிரே வந்த டிப்பர் வாகனத்திற்கு, பஸ் வண்டி இடம் வழங்க முற்பட்ட போதே பஸ் வண்டியின் முன் சில்லு வீதியை விட்டு விலகியதால் பள்ளத்தில் குடைசாய்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் விபத்துக்கு சாரதியின் கவனயீனமே காரணம் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி சாரதிக்கு பஸ் வண்டியை கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் அதுவே இந்த விபத்துக்கு முக்கியமான காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

லுணுகலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் வண்டி வீதியை விட்டு 250 அடி பள்ளத்தில் குடைசாய்ந்ததில் 15 பேர் பலியானதுடன் மேலும் சுமார் 40 பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விபத்து இடம்பெற்ற போது அந்த பஸ் வண்டியில் 50 பேர் பயணம் செய்துள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஸ)

## ஆறுகளை பாதுகாக்கும்...

அங்கமாகக் கருதப்படும் நீரின் தரத்தைப் பாதுகாப்பதன் மூலம் மக்களுக்கு தூய குடிநீரை வழங்குவதும் சுற்றாடல் மற்றும் உயிரியல் வளங்களைப் பாதுகாப்பதும் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.

சுற்றாடல் அமைச்சும் மத்திய சுற்றாடல் அதிகார சபையும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன. முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்திற்காக வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆறுகளைப் பாதுகாக்கும் உலக தகவல் தொழில்நுட்ப இணையத் தளம் ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த இணையத் தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் இந்த வேலைத் திட்டத்தின் முன்னேற்றம், ஆய்வின் தரவுகள், பிரதேசக் குழுக்களினால் வழங்கப்படும் செயற்றிட்டம் பற்றிய தகவல்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புகையிரத விபத்திற்கு நீதிகோரி...

போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வமதத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தலை மன்னார் பியர் பகுதியில் உள்ள புகையிரத கடவையில் கடந்த 16 ஆம் திகதி ஏற்பட்ட விபத்தில் தலை மன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்று வந்த பாலச்சந்திரன் தருண் (வயது14) என்ற மாணவன் உயிரிழந்த தோடு, மாணவர்கள் பொது மக்கள் என 25 பேர் வரை பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த விபத்திற்கு நீதிகோரியே நேற்றைய தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நேற்று காலை 7.45 மணியளவில் தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு முன்பாக குறித்த போராட்டம் ஆரம்பமானது.

இதன் போது பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், சர்வமத தலைவர்கள் அரசியல் பிரதிநிதிகள் ஆகியோர் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தலைமன்னார் பியர் பகுதியில் உள்ள புகையிரத கடவை வரை பதாதைகளை ஏந்தியவாறு சென்றனர்.

இதன் போது போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல், மன்னார் பிரதேச செயலாளர் , புகையிரத திணைக்கள அதிகாரி ஆகியோர் சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடினர்.

இதன்போது பல்வேறு கோரிக்கைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்தனர்.

குறித்த புகையிரத கடவைக்கான தடையினை புதிதாக அமைத்து, அதற்கான பாதுகாப்பு ஊழியரை புதிதாக நியமிக்க கோரியும் குறிப்பாக வயோதிபர் இல்லாமல் நடுத்தர வயதுடையவர்களை கடமையில் ஈடுபடுத்தி, அப் புகையிரத கடவையில் பொலிஸாரின் கண்காணிப்பு இடம் பெற வேண்டும் என்ற கோரிக்கையினையும் அவர்கள் முன்வைத்தனர். கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் அரசாங்க அதிபர் உறுதியளித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## அரசுடன் ஒருபோதும் இணைய...

கூட்டணியாக பயணிப்போம்" என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அரவிந்தகுமார் எம்.பியை கட்சியை விட்டு நீக்குவதற்கும், அவர் வகிக்கும் பதவிகளை பறிப்பதற்கும் மலையக மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு மத்திய செயற்குழு மற்றும் தேசிய சபை ஆகியன ஒப்புதல் வழங்கிய பின்னர் இவ்விவகாரம் தொடர்பில் இராதாகிருஷ்ணன் எம்.பி ஊடகங்களுக்கு விளக்கமளித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழு மற்றும் தேசிய சபையின் கூட்டம் நேற்று கூடியது. இதன்பிறகே இந்த கருத்தை இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு,

" தெரிந்து துரோகம் செய்தவர்களிடம் நியாயம் கேட்காதே, அவர்கள் செய்த தவறுக்கு ஆயிரம் பதில்களை சொல்வார்கள் என ஹிட்லர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி அரவிந்தகுமார் எம்.பியும் தெரிந்தே தவறு செய்துள்ளார். அந்த தவறை திருத்திக் கொள்வதற்காக எம்மால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை அவர் ஏற்கவில்லை. அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டு பகிரங்கமாக மன்னிப்பு கோருமாறு கேட்டோம். அவர் அதனை செய்யவில்லை.

இந்நிலையில் அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையை நாம் படிப்படியாக முன்னெடுத்தோம். இதனால் சிறு தாமதம் ஏற்பட்டது. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியிலுள்ள இதர பங்காளிக்கட்சிகள் கேள்வி எழுப்பின.

அதிருப்தியையும் வெளியிட்டன. தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை மேற்படி தரப்புகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அக்கட்சிகளும் குறித்த தீர்மானத்தை வரவேற்றுள்ளன.

அதேபோல அரவிந்தகுமார் எம்.பியை நான் வழிநடத்துவதாகவும் அவருக்கு பின்னால் நின்று நான் செயற்படுவதாகவும் அரசுடன் டீல் இருப்பதால்தான் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் சிலர் விமர்சனங்களை முன்வைத்தனர். இதனால் எனக்கும் களங்கம் ஏற்பட்டது. தற்போது அந்த களங்கமும் நீங்கியுள்ளது .

எனக்கு அரசுடன் 'டீல்' இல்லை .எமது கட்சி அரசுடன் இணையாது. ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பயணிக்கும். தமிழ் முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கின்றோம். அரவிந்தகுமார் எம்.பியால் சிறு விரிசல் ஏற்பட்டிருந்தது. தற்போது அதுவும் முடிவுக்கு வந்துள்ளது என்றார்.

## MCC உடன்படிக்கையில் அரசாங்கம்...

'ஷோபா' உடன்படிக்கையையும் மேற்கொள்ளப் போவதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா நேற்று உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் மிலேனியம் சேலன்ஞ் கோப்பரேசனுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வதை தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட சில தரப்பினர் தாக்கல் செய்த மனு தொடர்பான விசாரணை நேற்று உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதற்கிணங்க பிரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர, ஏ, எச். எம். டி.நவாஸ் ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் மேற்படி வழக்கு நேற்று விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்த சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபரின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பர்சானா ஜமீல் நீதிமன்றத்திடம் விடயங்களை முன்வைத்தார்.

அதன்போது அமெரிக்க மில்லினியம் சேலஞ்ச் கோப்பரேஷன் நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் உடன்படிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தினார்.

அதேவேளை அத்தகைய உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கான தீர்மானத்தை ரத்து செய்துள்ளதாக அமெரிக்க மிலேனியம் சேலென்ஞ் கோப்பரேஷன் நிறுவனம் அதன் தீர்மானத்தை வெளியிட்டிருந்ததையும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதேபோன்று 'ஷோபா' உடன்படிக்கையை மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கம் தீர்மானம் மேற்கொள்ளவில்லை என்பதையும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதனை ஏற்றுக் கொண்டுள்ள நீதிபதிகள் குழாம் மேற்படி வழக்கு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூலை 12ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும் அன்றைய தினத்தில் மேற்படி விடயம் தொடர்பில் எழுத்துமூல அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அமெரிக்க மில்லினியம் சேலன்ஞ் கோப்பரேஷன் நிறுவனத்தினுடனான உடன்படிக்கை மற்றும் 'ஷோபா' உடன்படிக்கை ஆகியவற்றில் அரசாங்கம் கைச்சாத்திடுவதை தடுக்குமாறு கோரியே மேற்படி மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ)

## பிரேரணை மீதான...

தினத்துக்கு (23) பிற்போடப்பட்டது. இலங்கையில் மனித உரிமைகள் மீறல் தொடர்பான விவாதம் நேற்று (22) நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது. விவாதத்தை ஒழுங்குப்படுத்துவது தொடர்பில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக இந்த விவாதம் பிற்போடப்பட்டதாக ஜெனிவா மனித உரிமைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜெனிவா மனித உரிமை பேரவை அமர்வில் இலங்கை தொடர்பான பிரேரணை இன்றைய தினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்ததுடன் அதன் மீதான வாக்கெடுப்பும் இன்று நடைபெறவுள்ளது.

நேற்றைய தினம் அதற்கான வாக்கெடுப்பு நடைபெறவிருந்த நிலையில் அமர்வின் நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக விவாதமும் வாக்கெடுப்பும் இன்றைய தினத்திற்கு ஒத்திப்போடப்பட்டது.

நட்பு நாடுகளின் ஆதரவுடன் மேற்படி பிரேரணையை தோற்கடிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் பல்வேறு நாடுகளுடனும் இராஜதந்திர மட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை,இலங்கை தொடர்பான யோசனையை பிரிட்டன், கனடா, ஜேர்மன்,மெசிடோனியா மலாவி உள்ளிட்ட 6 நாடுகள் முன்வைத்துள்ள நிலையில் இன்று நடைபெறும் விவாதத்தின்போது சில நாடுகள் அதில் தலையீடு செய்யலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்ற நிலையில் இலங்கையானது நட்பு நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ் போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்கும் என்றும் இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது இலங்கைக்கு ஆதரவாக செயற்படும் என எதிர்பார்ப்பதாகவும் மேற்படி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான ஐநா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தொடர்பில் சீனா, ரஷ்யா, பிலிப்பைன்ஸ் பாகிஸ்தான் போன்ற நாடுகள் தமது விமர்சனங்களை வெளிப்படுத்தியிருந்தன.

எவ்வாறாயினும் பிரிட்டனின் பிரேரணைக்கு கனடா, ஜெர்மன், மெசிடோனியா உட்பட சில நாடுகள் அனுசரணை வழங்கியுள்ள நிலையில் மேற்படி பிரேரணையை தோற்கடிப்பதற்கு அரசாங்கம் இராஜதந்திர மட்டத்திலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாகவும் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான மனித உரிமை ஆணைக்குழுவின் பிரேரணைக்கு எதிராக அணி திரளுமாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன சர்வதேச நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் 193அங்கத்துவ நாடுகளில் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் வாக்களிக்கும் தகுதி 47 நாடுகளுக்கு மட்டுமே உள்ளது. அவற்றில் இருபத்தொரு நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகவும் மேலும் சில நாடுகள் நடுநிலை வகிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ)

## ராதாமேத்தாவின்...

(02ஆம் பக்கத் தொடர்)

முதற்பிரதியை தொழில் அதிபரும், நகைச்சுவைக் கலைஞருமான எம். பிரேம்ராஜ் பெற்றுக்கொள்கிறார்.

இந்த நூலின் ஆய்வுரையை தொழிலதிபரும், அறங்காவலருமான கணேஷ் ஈசுவரனும் வாழ்த்துரையை தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவரும், நூல் ஆய்வுரையை கொழும்பு மாவட்ட செயலகத்தின் கலை,கலாசார உத்தியோகஸ்தர் திருமதி கிறிஸ்ரிரோஸும் வழங்குகின்றனர்.

இந்த நிகழ்ச்சியின் மற்றொரு அம்சமாக புதிய அலை கலை வட்டம் நடத்திவரும் எவோட்ஸ் 2021 கலாசார போட்டியில் பாடல் எழுதும் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் கௌரவ, சிறப்பு, கலை இலக்கியத்துறை, ஊடகத்துறை மற்றும் சமூக அரசியல்துறையைச் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

## காரணங்களை கண்டறிய...

(02ஆம் பக்கத் தொடர்)

விசாரணைகளின் படி சாரதிக்கு பஸ் வண்டியை கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் அதுவே இந்த விபத்துக்கு முக்கியமான காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

லுணுகலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் வண்டி வீதியை விட்டு 250 அடி பள்ளத்தில் குடைசாய்ந்ததில் 15 பேர் பலியானதுடன் மேலும் சுமார் 40 பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விபத்து இடம்பெற்ற போது அந்த பஸ் வண்டியில் 50 பேர் பயணம் செய்துள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஸ)

## ரஞ்சனின் மனுவினை...

நீதிமன்றை அவமதித்த குற்றத்திற்காக நான்கு வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அவரது சட்டத்தரணியூடாக நேற்றைய தினம் மேற்படி வேண்டுகோள் மனுவை அவர் சமர்ப்பித்தார்.

அந்த மனுவின் ஊடாக ரஞ்சன் ராமநாயக்க , சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சட்டத்தின் கீழ் நபரொருவருக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு சட்டபூர்வ உரிமை உள்ளது என்றும் அதற்கிணங்க தமக்கு மேன்முறையீடொன்றை முன்வைப்பதற்கு அனுமதி தருமாறும் அந்த மேன்முறையீட்டை ஐந்து நீதிபதிகள்கொண்ட குழுவோ அல்லது அதனைவிட அதிகமான நீதிபதிகள் கொண்ட குழுவொன்றோ மீள்பரிசீலனை செய்வதற்கு கவனத்தில் எடுக்குமாறும் அவர் தமது சட்டத்தரணிகள் மூலம் நீதிமன்றத்தை கோரியிருந்தார்.

எனினும் அவர் விடுத்த வேண்டுகோள் மனுவை உச்சநீதிமன்றம் நிராகரித்தது. (ஸ)

## ஐ.நா. விவகாரத்தில்...

சந்திப்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, அமர்வின் முடிவில் இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால் பொதுமக்கள் பெரும் பாதிப்பை சந்திக்க நேரிடும் என கூறினார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை இராணுவமயமாக்கல் போன்ற விடயங்களை எடுத்துக்காட்டுகிறது என குறிப்பிட்ட அவர், இலங்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குறித்த தீர்மானம் பாராட்டத்தக்கதல்ல என்றும் கூறினார். எனவே இராணுவமயமாக்கல் குறித்தும் அவர்கள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை மீறுவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்கக்கூடாது என்றும், இது மோதல்களுக்கு வழிவகுக்கும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

## இரத்து செய்ய கோரிய...

மேற்படி மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தன.

மனு மீதான விசாரணை நேற்றையதினம் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயாதுன்னே கொரயா ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது எதிர்வரும் 26ஆம் திகதி தகவல்களை உறுதிப்படுத்துமாறும் நீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதிகளாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி, தேயிலை கைத்தொழில் தொடர்பான சம்பள நிர்ணய சபையின் தலைவர் உள்ளிட்ட 18 பேருக்கு எதிராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

# தமிழகத்தில் மீண்டும் பள்ளிகளுக்கு விடுமுறை



தமிழகத்தில் மீண்டும் கொரோனா நோய்த் தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் மீண்டும் ஊரடங்கு அமல்படுத்தப்படுமா என்ற கேள்வி அனைத்துத் தரப்பினரிடையேயும் எழுந்துள்ளது.

இந்நிலையில், 9 முதல் 11ம் வகுப்பு வரையிலான மாணவர்கள் மறு அறிவிப்பு வரும் வரையில் பள்ளிக்கு வர வேண்டாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

கொரோனா நோய்த் தொற்றினை கட்டுப்படுத்தும் வகையில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு பள்ளி, கல்வி உள்ளிட்ட அனைத்து சேவைகளும் முழுமையாக முடக்கப்பட்டன. தொடர்ந்து, மாணவர்களின் கல்வித் தரம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்கான ஆன்லைன் வழியில் வகுப்புகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கொரோனா காலத்தில் மாணவர்கள் பள்ளிக்கு வந்து தேர்வு எழுத முடியாத சூழல் தொடர்ந்து நீடித்ததால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் தேர்வின்றி தேர்ச்சி என தமிழக அரசு அறிவித்தது. அதோடு இறுதி ஆண்டு கல்லூரி மாணவர்களைத் தவிர இதர மாணவர்கள், அரியர் மாணவர்கள் தேர்ச்சி என்றும் அரசு அறிவித்தது.

தொடர்ந்து, கடந்த ஆண்டு டிசம்பர் முதல் இந்த ஆண்டு ஜனவரி மாதங்களில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை வெகுவாக குறைந்த நிலையில் ஊரடங்கில் படிப்படியாக தளர்வுகள் அறிவிக்கப்பட்டு மக்கள் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பினர்.

ஊரடங்கு தளர்வின் படி 9 முதல் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் மீண்டும் பள்ளிகள் திறக்கப்பட்டன. இதர வகுப்பு மாணவர்களுக்கு தொடர்ந்து ஆன்லைன் வழியிலேயே வகுப்புகள் தொடர்ந்து வருகிறது. இதனிடையே, கடந்த ஆண்டைப் போலவே நடப்பு ஆண்டிலும் 10, 11ம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வுகள் ரத்து செய்யப்படுவதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், கொரோனா இரண்டாம் அலையாக மீண்டும் அதிகளவில் பரவத் தொடங்கியுள்ளது.

குறிப்பாக, பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு இத்தொற்று அதிகளவில் பரவி வருவதால் பெற்றோர்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

அரசுப் பள்ளி ஒன்றில் சமீபத்தில் 6 ஆசிரியர்கள் உட்பட மாணவர்கள் பலருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டு அப்பள்ளி மூடப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. பள்ளிகளே இந்நோய் பரவ முக்கிய காரணமாக உள்ளது என பலரும் குற்றம் சாட்டினர்.

## கமல்ஹாசனை நாங்கள் சீரியஸாக கருதவில்லை

*திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின்*

கமல்ஹாசனை நாங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்று திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திமுக சார்பில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடுகிறார் உதயநிதி ஸ்டாலின். இருப்பினும் தமிழகம் முழுக்க சூறாவளி சுற்றுப்பயணம் செய்து திமுக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி அவர் பேசி வருகிறார்.

நேற்று மதுரை வந்திருந்த உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது,...

திமுக மற்றும் அதிமுக ஆகிய இரு கட்சிகளையும், மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று கமல்ஹாசன் கூறியுள்ளார். கமல்ஹாசன் பற்றி கருத்து கூற நான் விரும்பவில்லை. நாங்கள் அவரை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ளார்.

## விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு பானை சின்னம்

சட்டசபை தேர்தலில் திமுக கூட்டணியிலிருந்து ஆறு இடங்களில் போட்டியிடும் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்குப் பானை சின்னத்தைத் தேர்தல் ஆணையம் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாடு சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள திமுக மெகா கூட்டணியை அமைத்துள்ளது. திமுக தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ், மதிமுக, விசிக, இடதுசாரிகள், மமக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தமிழக வாழ்வுரிமைக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இதில் காங்கிரஸ் தவிர மற்ற கட்சிகளுக்கு ஒற்றை இலக்கத்திலேயே திமுக இடங்களை ஒதுக்கியிருந்தது. அதன்படி விசிகவுக்கு இந்தத் தேர்தலில் ஆறு இடங்கள் ஒதுக்கப்பட்டது. திமுக சின்னத்தில் போட்டியிடாமல் இந்த முறை சுயேச்சை சின்னத்திலேயே போட்டியிடுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

கடந்த 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் இடம் பெற்றிருந்த விசிகவுக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டன. அதில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரவிக்குமார் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டார். அதேநேரம் தொல் திருமாவளவன் பானை சின்னத்தில் போட்டியிட்டார்.

இந்தத் தேர்தலிலும் விசிகவுக்கு பானை சின்னத்தை ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இந்நிலையில், விடுதலை சிறுத்தைகள் கட்சிக்குப் பானை சின்னத்தை தற்போது தேர்தல் ஆணையம் ஒதுக்கியதுள்ளது.


**அரசாங்க அறிவித்தல்**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தால் கணிக்கப்படும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்**

(அடிப்படை : 2013 = 100)

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் கணிக்கப்பட்ட 2021 பெப்ரவரி மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் **142.8 (நூற்றி நாற்பத்தி இரண்டு தசம் எட்டு)** என பொது அறிவித் தலுக்காக இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

**பி.எம்.பி.அநுரகுமார,**
**தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர**
**பதில் பணிப்பாளர் நாயகம்**
**தொகைமதிப்பு மற்றும்**
**புள்ளிவிபரத் திணைக்களம்**
**த.பெ.இல.121, பத்தரமுல்ல.**
22.03.2021



இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலை மனுக்கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ. மில்லியன்) | CIDA தரம் | மனு காப்புறுதிப்பிணைத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/DC/SAB/IR-GOSL/2021/32 | வரக்காபொல துணைவழி (Bypass) வீதியில் கால்வாய் அமைத்தல். | 352.0 | C1 or C2 | 4.3 | 546 |

02. இக் கட்டுமாண பணியில் இரண்டு இடைவெளிகள் மற்றும் ஒற்றை இடைவெளி இல் பாலங்களை அமைக்கும் பணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது..

03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

04. ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) தரத்தில் **பாலக்கட்டுமானத்துறையில்** நிபுணத்துவத்திற்கு அமைய பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை **www.rda.gov.lk** எனும் இணையத்தளத்திலிருந்து **2021.03.22** ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

(அ). மாகாணப் பணிப்பாளர் (சப்ரகமுவ)
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
இரத்தினபுரி
தொலைபேசி : 045-2233907 பெக்ஸ் :- 045-2222471

(ஆ). பணிப்பாளர் (கட்டுமானம்)
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
மூன்றாம் மாடி, “மஹாநெகும மஹா மெதுர”
டென்சில் கொபேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை
தொலைபேசி - 011-2864388 மற்றும் பெக்ஸ் :- 011-2861821

06. மனு தொடர்பான கூட்டம் **2021.03.30** ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு மாகாணப் பணிப்பாளர் (சப்ரகமுவ) வீதி அபிவிருத்தி அதிகார சபை, இரத்தினபுரி காரியாலயத்தில் இடம்பெறுவதுடன் தேவையேற்படின் வேலைத்தள பரீட்சிப்பும் இடம்பெறும்.

07 இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2021.03.22** ஆம் திகதியிலிருந்து **2021.04.16** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை பத்தரமுல்லை, டென்சில் கொபேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான “மகநெகும மஹமெதுர” 3 வது மாடியில் அமைந்துள்ள பணிப்பாளருக்கு (கட்டுமானம்) மீள் செலுத்தப்படாத கட்டணத்துடன் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

மீளச்செலுத்தப்படாத **ரூபா.37,800.00/-** (வட் வரிகளுக்கு உட்பட்ட) கட்டணத்தை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

**அ. கணக்கின் பெயர் : பொது முகாமையாளர்- RDA**
**ஆ. கணக்கு இலக்கம் : 0000001943**
**இ. வங்கி : இலங்கை வங்கி - பெருநிறுவன கிளை**

1987 இலக்கம் 03 ஆம் ஒப்பந்தச் சட்டத்தின்படி, மனுவினைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

08. அனைத்து மனுக்களும், **2021.08.16** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **2021.04.19** ஆம் திகதி **14.00** மணித்தியாலங்களுக்கு முன் **தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, பணிப்பாளர், வழங்கல் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, முதலாம் ஆம் மாடி, “மகநெகும மஹமெதுர” டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரியில் கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. மனுக்கள் **2021.07.19** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**முதலாம் மாடி, 'மகநெகும மஹமெதுர', டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**



**21.03.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 631,727**
**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 25,834,880.00**
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 26
www.nlb.lk
NLB NATIONAL LOTTERIES

**உத்தியோகபூர்வ முடிவுகள்**
**செவன** உங்களுக்கு வீடு - கைகளில் காசு
திகதி 21/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 324
ஆங்கில எழுத்து R வெல்லப்பட்ட இலக்கங்கள் 15 36 52 53

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000/- வீதம் | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100,000/- வீதம் | 02 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000/- வீதம் | 76 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 200/- வீதம் | 148 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100/- வீதம் | 3,701 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 50/- வீதம் | 2,004 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- வீதம் | 50,893 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- வீதம் | 7,784 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 2,949,440.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,000,000.00
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 2728 சீட்டிழுப்பு திகதி 21 / 03 / 2021
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 39 51 70 76

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 06 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 144 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 330 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 8,656 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 5,721 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 141,406 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 25,799 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 182,062
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 5,656,540.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,391,190.80
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம் 4433 உத்தியோகபூர்வ முடிவுகள்
**மஹஜன சம்பத**
திகதி: 21-03-2021
வெற்றி எழுத்து J வெற்றி இலக்கங்கள் 6 4 1 0 7 4

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 6 4 1 0 7 4 | ரூபா 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 4 1 0 7 4 | ரூபா 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 1 0 7 4 | ரூபா 10,000/- | 108 |
| 4ஆம் பரிசு | 0 7 4 | ரூபா 1,000/- | 1,124 |
| 5ஆம் பரிசு | 7 4 | ரூபா 100/- | 11,237 |
| 6ஆம் பரிசு | 4 | ரூபா 20/- | 111,465 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 6 4 1 0 7 | ரூபா 10,000/- | 11 |
| 8ஆம் பரிசு | 6 4 1 0 | ரூபா 1,000/- | 118 |
| 9ஆம் பரிசு | 6 4 1 | ரூபா 100/- | 1,115 |
| 10ஆம் பரிசு | 6 4 | ரூபா 50/- | 11,174 |
| 11ஆம் பரிசு | J | ரூபா 20/- | 44,771 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை - ரூ. 10,550,620.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 18,833,456.00
NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை www.nlb.lk

**தன நிதானய** உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி - 21/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் - 470
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 01 32 74 80
ஆயிரம் முறை 1152

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 85 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 195 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 4,541 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 3,142 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 77,945 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 14,459 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,459,700.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 100,490
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை 88,999,419.20
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

தரு திரி சம்பத DARU DIRI SAMPATHA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 31
திகதி 21.03.2021
வெற்றி இலக்கங்கள் Z
வெற்றி இலக்கங்கள் 14 21 23 50

| Prize | Prize Structure | Prize Money | No. of Winners |
|---|---|---|---|
| 01 Prize | 4 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 500,000/- | 01 |
| 02 Prize | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000/- | 02 |
| 03 Prize | 3 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 1,000/- | 49 |
| 04 Prize | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 200/- | 166 |
| 05 Prize | 2 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 100/- | 3,868 |
| 06 Prize | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40/- | 3,135 |
| 07 Prize | 1 இலக்கம் மட்டும் பொருந்துமாயின் | 20/- | 78,432 |
| 08 Prize | ஆங்கில எழுத்து மட்டும் பொருந்துமாயின் | 20/- | 17,777 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,218,580.00
அடுத்த சீட்டிழுப்புக்கான ஸ்டார் சுப்பர் பரிசு ரூ. 7,171,321.20
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

## பௌத்த மத அலுவல்கள் திணைக்களம்

**1931 இல 19 விகார தேவாலகம் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் பஸ்நாயக்க நிலமே ஒருவரைத் தேர்ந்தெடுத்தல்**

மாத்தறை மாவட்டத்தின் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தெவிநுவர விஷ்னு மகா தேவாலயத்திற்காக பஸ்நாயக்க நிலமே ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு 2020.12.23ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் கொரோனா தொற்றுநிலை காரணமாக நடைபெறாது போன கூட்டம் 2021.04.28 புதன் மு.ப.10.30 இற்கு மாத்தறை, நூபே, சணச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்பதை தயவுடன் அறிவிக்கிறேன்.

02. 2020.11.23 ஆம் திகதி பிரசுரமான பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்படும் ஏனைய விடயங்கள் அவ்வாறே செல்லுபடியாகும் என்பதையும் அறிவித்துக் கொள்கின்றேன்.

**சுனந்த காரியப்பெரும**
**பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகம்,**
**2021.03.23ஆம் திகதி பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில்**

## காணி சீர்திருத்த ஆணைக்குழு

*காணி அமைச்சு*

## வரைஞர் பதவிக்கான வெற்றிடம்

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் வெற்றிடம் உள்ள வரைஞர் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கு தகைமையை பூர்த்தி செய்திருக்கும் இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி :- **வரைஞர்**
   1.1.பதவி எண்ணிக்கை :- **02**
02. சம்பள அளவு :- **30310/- 300x10 – 350x7 – 495x4 – 660x20 – 50940/-**
   2.1.மாதாந்த அடிப்படை சம்பளம் :- **30310/-**
03. வயது :- **22 – 45 வயது வரை**
04. **தகைமை**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:-**

4.1 கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

4.2 கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் எல்லா பாடங்களிலும் (பொதுப் பரீட்சை தவிர்த்து) சித்தி பெற்று மூன்றாம் நிலைக்கல்வி கற்கை ஒன்றை கற்பதற்கு தேவையான தகைமை அளவை பெற்றிருத்தல்.

4.3 தொழில்நுட்ப திறன்/ தேர்ச்சி
ஒவ்வொரு பதவிக்கான பணிகள் சார்ந்த மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட வகையில் தேசிய தொழில் தகைமை (N.V.Q) ஐந்து (05) அளவுக்கு குறையாத தொழில்நுட்ப கற்கை ஒன்றை வெற்றிகரமாக கற்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

05. மேல் குறிப்பிடப்பட்ட தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவம் ஒன்றை குறித்த சான்றிதழ்களின் பிரதியுடன் 2021.04.05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைப்பதற்கு வகைசெய்தல் வேண்டும்.

06. அனைத்து விண்ணப்பதாரர்களின் விபரங்கள் சுருக்கமாக பட்டியலிட்டு நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படும்.

07. அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபையில் பணியாற்றுகின்ற அதிகாரிகளின் விண்ணப்பங்கள் தமது திணைக்களம்/ நிறுவனத் தலைவர்களின் பரிந்துரையுடன் தேர்வு செய்யப்பட்டால் விடுவிப்பதற்கு முடியும் என்பதை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வரைஞர் பதவிக்காக விண்ணப்பப் படிவம்'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்**
**காணி சீர்திருத்த ஆணைக்குழு**
**இலக்கம் 475, கடுவலை வீதி**
**பத்தரமுல்லை**
**2021.03.19**

## சுகாதார சேவைத் திணைக்களம்

**போதனா வைத்தியசாலை - கராப்பிட்டிய, காலி**

## ஆய்வுகூட உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் உருப்படிகளை வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்படும் பொறியிடப்பட்ட கேள்வி மாதிரிப் பத்திரங்கள் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரால் ஏற்கப்படும்.

| உருப்படியின் பெயர் | Qtu | கேள்வி மாதிரிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் திகதி மற்றும் நேரம் | இறுதித்தினம் மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 1. frozen section | 01 | 2021.03.23 மு.ப.9.00 - பி.ப.3.00 | 2021.04.12 மு.ப.10.00 |
| 2. Macro Digital imaging system | 01 | | |
| 3. Slide Stainer | 01 | | |

02. இலங்கை சந்தை சார்பாக மேற்படி உபகரணங்களை உற்பத்தி செய்து சமர்ப்பிப்பதற்காக பெயர் குறிப்பிடப்படும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மாத்திரம் மேற்படி கேள்விக்காக சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவர்

03. தகைமையுள்ள கேள்விதாரர், முகவர் மூலமாக அல்லது கேள்விதாரர் சார்பாக நியமிக்கப்பட்டவர் பெற்றுக்கொண்ட கேள்வி மாதிரிப் பத்திரங்களை முறையாக பூர்த்தி செய்து, பொறியிடப்பட்ட இரு பிரதிகள் மூலம் ஒப்படைத்தல் வேண்டும் அத்துடன், கீழ்க்காணும் விடயங்களின் அடிப்படையில் அதனை நிறைவேற்றுதல் வேண்டும்.

**கேள்வி மாதிரிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் வேளையில்**

a. காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பப்படும் வேண்டுதல் கடிதம்

b. சகல கேள்விப் பத்திரங்களுக்கும் காசாக ரூ.2000.00 தொகையை காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்காளருக்கு செலுத்துதல் வேண்டும் அத்துடன், அது மீளளிக்கப்படமாட்டாது

c. உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகளுடன் வியாபார பதிவு செய்தற் சான்றிதழ்

d. வெளிநாட்டு வியாபார அதிகார சபையினால் உள்ளூர் பிரதிநிதியாக விண்ணப்பதாரி நியமிக்கப்பட்டமைக்காக சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்/கடிதம் அல்லது அதிகாரத்தை ஒப்படைக்கும் ஆவணம்

**கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் வேளையில்**

a. கொழும்பு டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள சமாகம் மெதுரையில் அரச ஒப்பந்தங்கள் பற்றிய பதிவாளரால் விநியோகிக்கப்படும் பதிவுச்சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

b. 2% கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் (கேள்விப் பிணைக்காக காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது)

வாரத்தின் வேலை நாட்கள் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்

c. CDDA பதிவுச்சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

தொலைபேசி - 091-2232159
பெக்ஸ் - 091-2227638

கேள்விக்கான காலம் முடிவடைந்தவுடன் வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் மேலும், மேலதிக விபரங்களை காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர்/கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்விச் சபையின் தலைவர்**
**போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய, காலி**

# 67ஆவது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிப்பு

67வது தேசிய திரைப்பட விருதுகள் டெல்லியில் நேற்று அறிவிக்கப்பட்டது. மத்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த திரைப்படத்துறைக்கான தேசிய விருதுகளை வழங்கி வருகிறது. இந்த வருடத்திற்கான சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த திரைப் படங்களுக்கான விருதுகள் நேற்று அறிவிக் கப்பட்டன. விருதுகளை குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்க உள்ளார். வெளியிடப்பட்ட விருது வென்றவர்கள் அறிவிப்பில், சிக்கிம் மாநிலம் சிறந்த சினிமா ஃபிரண்ட்லி ஸ்டேட் என்ற விருதை வென்றுள்ளது.

★ திரைத்துறைக்கான சிறந்த மாநிலம் தேசிய விருது சிக்கிம் மாநிலத்துக்கு அறிவிப்பு

★ நடிகர் தனுஷ் நடித்துள்ள அசுரன் படத்துக்கு சிறந்த தமிழ் படத்துக்கான தேசிய விருது அறிவிப்பு

★ நடிகர் பார்த்திபன் இயக்கி நடித்த ஒத்த செருப்பு படத்துக்கு ஜூரி விருது அறிவிப்பு

★ சிறந்த நடிகருக்கான தேசிய விருது நடிகர் தனுஷுக்கு அறிவிப்பு

★ சிறந்த நடிகருக்கான விருதை ஹிந்தி நடிகர் மனோஜ் பாஜ்பாய் உடன் தனுஷ் பகிர்ந்து கொள்கிறார்.

★ சூப்பர் டீலக்ஸ் திரைப்படத்தில் நடித்த விஜய் சேதுபதிக்கு சிறந்த துணை நடிகருக்கான தேசிய விருது அறிவிப்பு

★ மணிகர்னிகா, ஜான்சி ராணி மற்றும் 'பங்கா' படங்களில் நடித்த நடிகை கங்கனா ரணாவத்க்கு சிறந்த நடிகைக்கான தேசிய விருது அறிவிப்பு

★ விஸ்வாசம் படத்துக்காக சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது இசையமைப்பாளர் டி. இமானுக்கு அறிவிப்பு

★ சிறந்த நடனக் கலைஞராக ராஜூ சுந்தரத்துக்கு தேசிய விருது

★ ஒத்த செருப்பு திரைப்படத்துக்காக ரசூல் பூக்குட்டிக்கு சிறந்த ஒலிப்பதிவாளர் விருது அறிவிப்பு

★ சிறந்த இந்தி தரைப்படத்துக்கான விருது மறைந்த சுஷாந்த் நடித்த சிச்சுசோரேவுக்கு அறிவிப்பு

★ கேடி (எ) கருப்புதுரை படத்தில் நடித்த நாக விஷாலுக்கு குழந்தை நட்சத்திரத்துக்கான தேசிய விருது அறிவிப்பு

★ சிறந்த சினிமா விமர்சகருக்கான தேசிய விருது கொல்கத்தாவை சேர்ந்த சோஹினி சத்தோபத்யாயாக்கு அறிவிப்பு

★ நானி நடிப்பில் வெளியான ஜெர்சி படத்திற்கு சிறந்த தெலுங்கு படத்திற்கான தேசிய விருது அறிவிப்பு

★ கன்னடத்தின் அவனே ஸ்ரீமன் நாராயணா படத்திற்காக சிறந்த சண்டை பயிற்சியாளராக விக்ரம் மோருக்கு தேசிய விருது அறிவிப்பு

★ சிறந்த அனிமேசன் திரைப்படமாக ராதா தேர்வு

★ சிறந்த குடும்பத்திரைப்படமாக பாதிர ஸ்வப்னம் என்ற மலையாளப்படம் தேர்வு

**அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**ட்ரீம் மேர்ச்சன்ட்ஸ் (பிறைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்:
**PV 00203593**

பதிவு முகவரி:
**இல.466/9, லேக் ரோட், டி.பி.விஜேசிங்ஹ மாவத்தைக்கு அப்பால், பெலவத்த, பத்தரமுல்ல**

**பணிப்பாளர்கள்**

**அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**சிலோன் ரோயல் ஜெம்ஸ் (பிவீடி) எல்.டி.டீ**

பதிவிலக்கம்:
**PV 109229**

கூட்டிணைக்கப்பட்ட திகதி:
**19.10.2015**

பதிவு முகவரி:
**இல.171/5/2, பக்மீகஹரோட், போரே, அத்துருகிரிய**

**கம்பனி செயலாளர்**

# கிளிநொச்சி பொன்னகரில் அடாத்தாக காணி துப்புரவு; உடனடியாக பணிகள் தடுத்து நிறுத்தம்

*பரந்தன் குறூப் நிருபர்*

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் அத்துமீறி வெளியாட்கள் அங்குள்ள அரச காணி துப்புரவு செய்யப்பட்டமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற நிலையில் கிராம அலுவலர் ஊடாக குறித்த துப்புரவுப் பணிகள் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளதாக கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன் நேற்று தெரிவித்துள்ளார்

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்கு முன்பாக உள்ள பொன்னகர் மத்தியில் அமைந்துள்ள சுமார் 3 ஏக்கர் வரையான அரச காணியை ஆக்கிரமிக்கும் நோக்கில் கிளிநொச்சி தொண்டமன் நகர் பகுதியில் ஏற்கனவே அரச காணி மற்றும் அரச வீட்டுத் திட்டடம் என்பவற்றை பெற்றுக்கொண்ட கிளிநொச்சியில் செயற்பட்டு வரும் கல்வி அறக்கட்டளையின் இணைப்பாளர் ஒருவரும் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கோரக்கன் கட்டு கிராம அலுவலர் பிரிவில் ஏற்கனவே அரச வீட்டுத் திட்டத்தினையும் வாழ்வாதார உதவிகளையும் பெற்றுக் கொண்ட ஒருவரும் இணைந்து நேற்று முன்தினம் பகல் கனரக வாகனம் ஒன்றின் மூலம் குறித்த காணியில் துப்புரவு பணிகளை முன்னெடுத்தனர்.

இதனை அவதானித்த ஊர் மக்கள் கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தியதுடன் தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.தங்களுக்கு குறித்தகாணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிபார்சில் வழங்கப்பட்டது என்று தெரிவித்து துப்பரவு பணியினை நிறுத்த மறுத்த சமயம் காணி அபகரிப்பில் ஈடுபட்டவர்களுக்கும் கிராம மட்ட பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதை அடுத்து அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கரைச்சி பிரதேச செயலாளரிம் இது தொடர்பில் நேற்று கேட்டபோது,...

இந்த காணியில் மேற்கொள்ளப்பட்ட துப்புரவு பணியை கிராம அலுவலர் மூலம் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வுள்ளதாகவும்தெரிவித்ததுடன் பொன்னகர் பிரதேசத்தில் வசிக்கும் காணிகளற்ற குடும்பங்களின் விபரங்களை சேகரித்து பிரதேச செயலர், பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கிராம அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை

## கேள்விக்கான அழைப்பு

**இலங்கையின் வட மாகாணத்தின் காற்றை அளக்கும் தூண்கள் இரண்டை வழங்குதல், நிறுவுதல், ஒப்படைத்தல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்**

**பெறுகை இல: : SEA/ PD/RMP/II-2021**

1. மேற்படி பெறுகைக்காக, திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவர், சர்வதேச போட்டி கேள்வி வைத்தலின் கீழ் தகைமையான சேவை வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

2. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு **www.energy.gov.lk** உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து கேள்வி ஆவணங்களை பரீட்சிப்பதற்கு மற்றும் ஆங்கில மொழியில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். மீளளிக்கப்படாத LKR 2,000/- கேள்விக் கட்டணத்தை கேள்வி ஆவணத்திற்காக செலுத்துதல் வேண்டும் அத்துடன், கொடுப்பனவுகள் இங்கை வங்கியின் (7010) டொரிங்டன் சதுக்க கிளையில் (453) அமைந்துள்ள இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் கணக்கு இலக்கம் 0074944408 இற்கு செலுத்துதல் **PD/RMP/11-2021** என தெளிவாக குறிப்பிட்டு வைப்புச் செய்தல் வேண்டும். (சுவிப்ட் குறியீடு BCEYLKLX) ஆகும் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டண காசு வைப்புப் பற்றுச்சீட்டை அல்லது ஈ பற்றுச்சீட்டை (ஒன்லைன் கொடுப்பனவிற்காக) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கொடுப்பனவு பற்றுச்சீட்டின் பிரதி இல்லாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

3. கேள்விகள் 2021 ஜுலை 26 வரை செல்லுபடியாதல் வேண்டும் அத்துடன், கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 2021.08.10ஆம் திகதி வரை செல்லுபடியாகும் LKR 220,000/- கேள்விப் பிணையொன்று இருத்தல் வேண்டும். கேள்வியில் குறிப்பிடப்படுமாறு கேள்விக்கு முன்னரான கூட்டம் 2021 ஏப்ரல் 07ஆம் திகதி இலங்கை நேரம் 14.30 (GMT+5.30 கால வலயம்) இற்கு நடைபெறும்

4. கேள்விகள் உள்ளடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'SEA/PD/RMP/11-2021"** என்று குறிப்பிட்டு பொறியிடப்பட்ட கேள்விகளை கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, BMICH, 5ஆம் கட்டிடத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் பெறுகைப்பிரிவிற்கு கிடைக்குமாறு ஒப்படைக்கலாம் அல்லது குரியர் செய்தல் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது பொறியிடப்பட்ட "இலங்கையின் வடக்கு மாகாணத்தில் காற்று அளவை இரண்டை வழங்குதல், நிறுவுதல் ஒப்படைத்தல் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்" என்று குறிப்பிடப்பட்ட கேள்வி ஆவணத்தை procurement.slsea@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் 2021 மே 05ம் திகதி இலங்கை நேரம் 14.30 (GTM+5.30 கால வலயம்) இற்கு முன் இடம்பெறுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

5. நாட்டின் கொவிட் 19 தொற்று காரணமாக, கேள்விதாரர்களின் தனிப்பட்ட கலந்து கொள்ளலில் இருந்து தவிர்த்து 2021 மே 05ஆம் திகதி 14.30 (GTM+5.30 கால வலயம்) இற்கு கூடும் கூட்டம் (Google meet) ஊடாக விலைமனுக்கள் திறக்கப்பட்டு வாசிக்கப்படும். அதற்கு சமுகமளிப்பதற்கு விரும்பும் கேள்விதாரர்கள் கேள்வியின் கடித உறையின் பின்பக்கம் இணையத்தள முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

6. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் +94112677445 அல்லது +94112676515 நீடிப்பு 507 தொ.பே இலக்கத்தினை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு இல்லையெனில் திருமதி.ஏ.கட்டுகஹவிற்கு மின்னஞ்சல் முகவரியில் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். apsarakatugaha@gmail.com

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை நிலைபெறுதகு அதிகார சபை,**
**5ஆம் கட்டிடம் முதலாம் மாடி, BMICH,**
**பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07, இலங்கை**

**தொலைபேசி: +94(0) 112677445.**
**பெக்ஸ்: +94(0) 112682534.**
**மின்னஞ்சல்: info@energy.gov.lk.**
**இணையம்: www.energy.gov.lk**

**2021 மார்ச் 23**

# இறக்காமத்தில் இன்று கலைஞர்கள் கௌரவிப்பு

*இறக்காமம் தினகரன் நிருபர்*

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் கலைஞர்களை ஊக்குவிக்கும் 'கலைஞர் சுவதம்' கௌரவிப்பு நிகழ்வு இன்று (23) செவ்வாய்க்கிழமை இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எம். நஸீர் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எம்.ஏ. லதீப் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இறக்காமம் பிரதேச செயலகமும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்தும் இவ்விழாவில், கலை கலாசார பாரம்பரியங்களை வளர்த்து பாதுகாத்து வரும் கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் இலக்கியம், தற்காப்புக் கலை, தபேலா, ஆயுர்வேத மருத்துவம் மற்றும் கவிதை போன்ற துறைகளில் பிரசித்தி பெற்ற 10 பேர் 'கலைஞர் சுவதம்' விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளவர்களின் விபரம் பின்வருமாறு ஐ.பஸீல் (கவிதை), கே.எல்.எம்.இஸ்மாயில் (கவிதை), கே.எம்.சியாத் (கவிதை), ஏஸ்.எல்.ஏ.முனாப் (சித்திரக்கலை), ஏச்.எம்.எம்.பாஹீம் (ஓவியம்), எஸ்.சீ.சாஜஹான் (ஓவியம்), ஏ.எல்.முக்குலுத்தும்மா (நாட்டு வைத்தியம்), எம்.எம்.ஏ.குத்தூஸ் (நாட்டு வைத்தியம்), எம்.ஐ.ஜௌபர் (தற்காப்பு), எச்.மாரசிங்க (தபேலா வாத்தியம்) ஆகியோரே பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

# ஆலையடிவேம்பு பிரதேச செயலக கணக்காளர் நியமனம்

*வாச்சிக்குடா விஷேட நிருபர்*

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் கணக்காளராக கணபதிப்பிள்ளை பிரகஷ்பதி மாவட்ட செயலகத்தினால் நியமிக்கப்பட்டார். பதில் கணக்காளராக கடந்த சில மாதங்களாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய இவர் இன்று பிரதேச செயலாளர் வி.பபாகரனின் முன்னிலையில் தனது கடமையினை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவரை பிரதேச செயலாளர் மாலை அணிவித்து கௌரவித்து வரவேற்றார். அத்தோடு பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.சோபிதா உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களும் இணைந்து வரவேற்பினை அளித்தனர்.

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலையின் பழைய மாணவரான இவர், வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தை கிழக்கு பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தார். பின்னர் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை கணக்காளர் சேவை பரீட்சையில் சித்தியடைந்து 2013.08.01ஆம் திகதி தனது முதலாவது கணக்காளர் சேவையினை உகண பிரதேச செயலகத்தில் ஆரம்பித்தார்.




# அரசியல் சாக்கடை என்று வெளியே போகாதீர்கள் இறங்கி துப்புரவு செய்யுங்கள்

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அழைப்பு

**ஹற்றன் விசேட நிருபர்**

மலையகத்தில் படித்த இளைஞர்களை அரசியலுக்கு கொண்டு வர வேண்டும். அப்போது தான் மலையகம் மாற்றம் பெறும். மாணவர்கள் அரசியல் ஒரு சாக்கடை என்று எண்ணி வெளியே போகாதீர்கள். அதனை இறங்கி துப்புரவு செய்யுங்கள் என தோட்ட வீடமைப்பு சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்திய இலங்கை சமுதாய பேரவையுடன் இணைந்து நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலயத்தில் மூன்று திறன் வகுப்புக்களை மாணவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்.

முன்னர் தோட்ட பாடசாலை என்ற ஒன்று இருக்கவில்லை. மடுவங்கள் தான் இருந்தன. தற்போது அவை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றம் பெற்று வந்தாலும் கூட அவை முழுமையாக அபிவிருத்தியடையவில்லை. இன்று அந்த பாடசாலையில் மாணவர்கள் கற்று தான் வருகிறனர். ஆகவே இந்த பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய பாரிய தேவை எமக்குள்ளது.

இன்று நாட்டில் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று பேசும் போது ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியினை பற்றி பேசுவோம். நாவலப்பிட்டி கதிரேசன் பாடசாலையை பற்றி பேசுவோம். நான் மூன்று வருடத்திற்கு முன்னர் கொத்மலையில் வேலை செய்யும் போது தங்களது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து தருமாறு அதிபர்கள், ஆசிரியர்கள் என்னிடம் கோரினார்கள் அப்போது இவர்கள் தேவையில்லாதவற்றை எல்லாம் கேட்பார்கள். எங்களுக்கு ஒரு விஞ்ஞானக்கூடம் கட்டித்தாங்க என்று ஒரு மாணவன் என்னிடம் கேட்டான்.

அவ்வாறு தூர நோக்கோடு சிந்திக்கின்ற மாணவர்கள் தான் எமக்கு தேவை. நீங்கள் பாடசாலைக்கு வருவது வெறுமனே படித்து விட்டு போவதற்கு மட்டும் அல்ல. ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு இலட்சியம் இருக்க வேண்டும். அந்த இலட்சியத்தினை அபிவிருத்தி செய்தால் தான் மலையகத்தினை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். நீங்கள் சிந்தித்து பாருங்கள் நன்றாக படித்த சிலர் வெளிநாடுகளுக்கு சென்று நல்ல தொழில்களில் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் இங்கு வருவதில்லை. நாம் எங்கு சென்றாலும் என்ன வளர்ச்சி பெற்றாலும் மலையகம் தான் எமது தாயகம். ஆகவே அதனை நாம் விட்டுக்கொடுக்கக் கூடாது.

இன்று (ஸ்மார்ட் கிலாஸ்); திறன் வகுப்புக்கள் பாடசாலைகளில் மாத்திரம் அமைக்க கூடாது. தொழிற்கல்வி நிலையங்கள் போன்றவற்றிக்கும் இவற்றை பெற்றுக்கொடுக்க வேண்டும். நவீன மலையகத்தினை மாணவர்களில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

அதே நேரம் இன்று பல இடங்களில் நிறைய நூலகங்கள் உள்ளன. ஆனால் அவற்றில் புத்தகங்கள் கிடையாது.

அவை வேறு தேவைகளுக்கே பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே நகர நூலகத்திட்டத்தினை கொண்டு வந்துள்ளோம். எதிர்காலத்தில் நகரங்களுக்கு நூலக வசதிகளை எமது தலைவர்கள் ஊடாக பெற்றுக்கொடுப்போம். கணனி அறிவினை விருத்தி செய்ய வேண்டும் என்று தான் நாங்கள் பிரஜாசக்தி நிலையங்களை உருவாக்கினோம். இன்று அவை இயங்காத நிலையில் காணப்படுகின்றன.

உயிரற்று கிடந்த பிரஜாசக்தி நிலையங்களுக்கு உயிர் கொடுத்தவர் கணேஸ் தேவநாயகம். இன்று ஒரு சில நிலையங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கு முழுமையாக உயிர் கொடுக்க வேண்டும். அதற்கு உதவியாக பரத் அருள்சாமியும் இணைந்து செயற்படுவார். இவர்கள் இருவரும் இணைந்து மாணவர்களை மாற்றுவார்கள் என நம்புகிறேன்

இன்று அதிகமானவர்கள் பாடசாலைக்கு கட்டிடங்களை கட்டிக்கொடுத்தால் அல்லது மதில்களை கட்டிக்கொடுத்தால் அதனூடாக கல்வி மேம்படும் என்று நினைத்து கொண்டு இருக்கின்றனர்.ஆனால் அதனை தாண்டி இன்று எத்தனையோ விடயங்கள் உள்ளன. நன்றாக படித்து சிறந்த புள்ளிகளை பெற்றவர்கள் எத்தனையோ பேர் இன்று தொழில் இன்றி இருக்கின்றனர். குறிப்பாக இந்த நாட்டில் ஏனைய மாவட்டங்களை விட நுவரெலியா மாவட்டத்தில் தான் இந்த நிலைமை அதிகமாக இருக்கின்றது. ஆகவே வேலையற்று இருக்கும் எண்ணிக்கையை குறைப்பதற்கு பல திட்டங்களை உருவாக்க வேண்டும். அதற்கு பாடசாலையிலேயே தொழிற்கல்வியினையும் விருத்தி செய்ய வேண்டும்.

இங்குள்ள குறைகளையும் எதிர்காலத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் இதன் போது தெரிவித்தார்.











பதுளை பசறை பஸ் விபத்தில் பாதிக்கப்பட்டு பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தெண்டமான் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்ததுடன் அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்டு வரும் சிகிச்சைகள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.
அத்துடன் இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தவர்களுடன் தனது துக்கத்தை பகிர்ந்து கொண்டார். மேலும், காயங்களுடன் சிகிச்சைபெற்று வருவோருக்கும்,உயிரிந்தோரின் குடும்பத்தினருக்கும் அரசாங்கம் உதவிகளை வழங்க ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

### பசறை பஸ் விபத்து

## விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

பசறையில் பஸ் விபத்தில் உயிரிழந்த 14 பேரின் இறுதி சடங்குகளிலும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க ஆகியோர் பங்குபற்றியதுடன், உறவுகளை இழந்த குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதல் கூறி இறுதிச் செலவுகளுக்கான நிதி உதவிகளையும் வழங்கி வைத்தனர். ஆரம்பக்கட்டமாக இறுதி சடங்குகளை செய்வதற்காக 15ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், விரைவில் ஆளுநரின் ஊடாக இழப்பீட்டு நிதியை பெற்றுக்கொடுக்கவும் செந்தில் தொண்டமான் நடவடிக்கக எடுத்துள்ளார்.





## பசறை பஸ் விபத்தில் உயிரிழந்தவர்கள் விபரம்

**லுணுகலை நிருபர்**

பதுளை செங்கலடி வீதியில் பசறை 13 ஆம் கட்டை மெத்தைக்கடைக்கு அருகாமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

01.ராமன் நாகரட்ணம்
வயது 68
டெமேரியா
B டிவிஷன் , மீதும்பிடி பசறை.
02. பாக்கியநாதன் யோகதாஸ்
வயது 48
டெமேரியா B டிவிஷன் மீதும்பிடி
பசறை.
03. ஜெகதுன் பீபி
வயது 86
24 ம் கட்டை, வெல்லவல லுணுகலை.
04. ஆதா சாய்பு பாத்திமா உம்மா
வயது 47
24 ம் கட்டை வெல்லவல லுணுகலை. ,
05. சுப்பிரமணியம் ராஜேந்திரன்
வயது 55
சோலன்ஸ் மேல் பிரிவு லுணுகலை. ,
06. ரத்னாயக முதியன்சலாகே ஹன்சிகா சந்தமாலி
வயது 25
ஏதன்ட வத்த யப்பாம ஹொப்டன் லுணுகலை.
07. தென்னகோன் முதியன்சலாகே அசங்க பத்மகுமார
வயது 35
யன உதான கம்மான யப்பாம டிவிஷன்
ஹொப்டன் லுணுகலை. ,
08. முத்தையா முருகேசன்
வயது 71
19 ம் கட்டை ஹொப்டன் லுணுகலை,
09. பொன்னழகன் டானில் ஹரிஹரன்
வயது 40
வட்டுவத்த அத்துடுவெல்ல ஹாலிஎல,
10. மகேந்திர ஹாரியலாகே நாவிந்த தக்சரனி
வயது 21
இல 51 ,
செவன திஸ்ஸபுர லுணுகலை. ,
11. அந்தோணி நோவா
வயது 32
இல 51, செவன திஸ்ஸபுர லுணுகலை,
12. செல்லையன் சுப்பிரமணியம்
வயது 73
தேஷ்போக் டிவிஷன் சோலன்ஸ் தோட்டம்
லுணுகலை. ,

13. பெருமாள் முரளிதரன்
வயது 46
31/51/01
லுணுகலை ,
14. பெனடிக் மெரோனா
வயது 31
அடாவத்தை லுணுகலை. ,

அத்துடன் 33 பேர் காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருவதோடு 5 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக பதுளை பொது மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கழிவுத் தேயிலை களஞ்சியசாலை சுற்றிவளைப்பு இருவர் கைது

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

பூண்டுலோயா கும்பாலொலுவ பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் இயங்கிவந்த கழிவுத் தேயிலை களஞ்சியசாலையொன்றை சுற்றிவளைத்த தலவாக்கலை விசேட அதிரடிப்படையினர், 4 ஆயிரத்து 195 கிலோ கழிவுத் தேயிலையையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கழிவுத் தேயிலையை குறித்த நிலையத்துக்கு கொண்டுவந்து, தூய தேயிலை என்ற போர்வையில் சந்தைக்கு விற்பனைக்கு அனுப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், கைப்பற்றப்பட்ட கழிவு தேயிலை தூளையும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் சட்ட நடவடிக்கைகளின் நிமித்தம் பூண்டுலோயா பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் கையளித்தனர்.

## பசறையில் ஏற்பட்ட கோர விபத்தில் காயமடைந்தவர்களைப் பார்வையிடுகையில்



பசறை, 13ஆவது மைல்கல் பகுதியில் ஏற்பட்ட கோர விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், பதுளை நகர பிரதான, இ.தொ.காவின் மாவட்ட செயலாளர் டி.வி.சென்னன், முன்னாள் ஊவா மாகாண சபை உறுப்பினர் சிவலிங்கம் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு காயமடைந்தவர்களுக்காக சிகிச்சைகள் குறித்து ஆராய்ந்தனர். காயமடைந்தவர்களுக்கு மேலதிக சிகிச்சை தேவைப்படும் பட்சத்தில் அவர்களை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளையும் செய்துகொடுத்ததுடன், கொவிட் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களுக்கு மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளை துரிதப்படுத்தி உடல்களை குடும்பத்தாருக்கு விரைவாக பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தினகரன் செய்தியால் 15 வருட குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு

### பொது மக்கள் நன்றி தெரிவிப்பு

**ஹற்றன் விசேட நிருபர்**

ஊடகச் செய்தியால் 15 வருட குடாஓயா கொலனி மக்களின் குடிநீர் பிரிச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளதாக பொது மக்கள் நன்றி தெரிவித்தனர்.

ஹற்றன் குடாஓயா கொலனி மக்கள் கடந்த 15 வருடகாலமாக குடிநீர் இன்றி மிகவும் சிரமப்பட்டனர். இந்நிலையில் இப்பிரச்சினை தொடர்பாக கடந்த வாரம் ஊடகங்களில் செய்தி வெளியானதை தொடர்ந்து அதிகாரிகள் அவ்விடத்திற்கு விஜயம் செய்து சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதுடன் நேற்று (20) திகதி நீர்ப்பாசன அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் பணிப்புரைக்கமைய இணைப்பதிகாரி ஜோர்ஜ் அவ்விடத்திற்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்ததுடன் சுமார் இரண்டு வாரங்களில் இவர்களுக்கு குடிநீரை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக உறுதியளித்தார்.

இதுதொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில் இதுவரை வந்த அரசாங்கங்களில் எந்தவாரு அரசாங்கமும் குடிநீர் பெற்றுக்கொடுப்பதில் அக்கறை செலுத்தவில்லை. தற்போது உள்ள அரசாங்கம் இந்த குடிநீர் பிரச்சினையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமைக்கு நன்றி தெரிவிப்பதுடன் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றினை மிக விரைவில் பெற்றுத்தர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 மார்ச் 23
செவ்வாய்க்கிழமை

# வடமாகாணத்தில் முதன் முறையாக பட்டதாரிகளுக்கு ஆங்கில ஆசிரியர் நியமனம்

—வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ்





டிப்ளோமா பட்டதாரிகள் ஆங்கில ஆசிரியர்களாக வடமாகாணத்தில் இணைக்கப்பட்டுள்ளது முதன் முறையாகும் என வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடமாகாணத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான ஆங்கில ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வும், வடமாகாண விவசாய அமைச்சுக்கு கீழான விவசாய போதனாசிரியர், விவசாய தொழில் நுட்பவியலாளர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கும் நிகழ்வும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 'தந்தை செல்வா' மண்டபத்தில் நேற்று 9 மணிக்கு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் பேசிய அவர்,....

ஆங்கில, கணித, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆசிரியர்களுடைய ஆளணி பற்றாக்குறை, வடமாகாண கல்வி தரத்திலும் கல்வி நிலையிலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக கூறிய அவர், அதனை நிவர்த்தி செய்யும் முதல் படியாக இந்த ஆங்கில ஆசிரியர் நியமனம் அமையும் என நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும், இனிவரும் காலங்களில் அத்தனை கிராமப்புற பாடசாலைகளிலும் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆசிரியர்கள் தேவைக்கு ஏற்ப தகுதிகளின் அடிப்படையில் நியமிக்கபடவுள்ளதால் கல்வி சார் செயற்பாடுகள் சரியாக புகட்டப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார். அத்துடன், மாணவர்கள் பல்கலைகழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அந்தந்த துறைகளில் பயிற்றுவிக்கப்பட வேண்டும் எனவும் சர்வதேச தரத்திலான கல்வியை மாணவர்கள் பெற்றுகொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் பாரம்பரிய முறையிலான உற்பத்தி முறைகளே தற்போதும் காணப்பட்டு வருவதால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் உற்பத்தி விலை அதிகமாக காணப்படுகிறது, அதுவே பொருட்கள் இறக்குமதி செய்யக் காரணமாகிறது எனவும் சுட்டிக்காட்டினர்.

மேலும், இந்த நிலையை மாற்றி நவீன தொழில்நுட்ப முறைகளை விவசாயிகள் மற்றும் கால்நடை உற்பத்தியாளர்களுக்கு பயிற்றுவித்து நவீன தொழில்நுட்ப முறைகளின் மூலம் உற்பத்தி செலவை குறைத்து உற்பத்தி துறையிலே ஒரு புதிய புரட்சியை கொண்டுவர வேண்டும் எனும் நோக்கத்துடன் தான் விவசாய போதனாசிரியர், விவசாய தொழில்நுட்பவியலாளர்களுக்கான நியமனங்கள் வழங்கபடுவதாகவும் குறிப்பிட்டார்.

# வடக்கு மாகாணத்தில் மேலும் 14 பேருக்கு கொரோனா

யாழ்.விசேட நிருபர்

வடக்கு மாகாணத்தில் மேலும் 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 290 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

அதில் யாழ்ப்பாணத்தில் 11 பேருக்கும் மன்னாரில் மூவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஏழு பேருக்கு வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதுடன் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஆறு பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மூன்று வீடுகளில் வர்ணப்பூச்சு வேலை செய்வதற்காக பளை பகுதியிலிருந்து சென்றிருந்த ஒருவர் மூலமே இவர்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூரில் தொற்று உறுதிசெய்யப்பட்ட இன்னொருவர் ஏற்கனவே தொற்று உறுதியானவருடன் தொடர்புடையவராவார்.

இதேவேளை, கோண்டாவிலில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபை சாலையில் ஒருவருக்கு வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதுடன் இவர், அங்கு சாரதிப் பயிற்சிப் பாடசாலையில் பணியாற்றுகிறார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சண்டிலிப்பாய் மருத்துவ அதிகாரி பிரிவினில் ஒருவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன் இவர், ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டவருடன் தொடர்புடையவராவார்.

மேலும், ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டவருடன் தொடர்புடைய ஊர்காவற்றுறை மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த மூவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக மருத்துவர் கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்

# வவுனியா மீன் சந்தையின் கழிவு நீர் வெளியேற்றத்தால் சுகாதார சீர்கேடுகள்





ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா மன்னார் வீதி குருமன்காடு சந்தியில் அமைந்துள்ள மீன் சந்தையிலிருந்து வெளியேறும் கழிவு நீரினால் அப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் அருகிலுள்ள தேவாலயம், இந்து ஆயலம், பேருந்து தரிப்பிடம் என்பனவற்றிற்கு செல்லும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உட்பட்டு வருவதாகவும் இதனைக்கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறும் அம்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் .

மன்னார் வீதி , குருமன்காட்டு சந்தியில் அமைந்துள்ள மீன் சந்தைக்கு கழிவு நீர் சேமிக்கும் தொட்டி சிறியதாக அமைக்கப்பட்டுள்ளதால் அத்தொட்டியில் சேரும் கழிவு நீர் நிரம்பி வழிகின்றதுடன் மேலதிகமாக அங்கு சேமிக்க முடியாததால் அதிகளவான கழிவு நீர் வெளியே வீதி ஓரமாக வெளியேறி வருகின்றது. இதனால் குறித்த மீன் சந்தைப் பகுதி எங்கும் துர்நாற்றம் வீசிவருகின்றது. அருகருகே அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயம் மற்றும் இந்து ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் உட்பட பல்வேறு திணைக்களங்களில் பணியாற்றுவதற்கு செல்லும் பணியாளர்களும் அங்கு அமைந்துள்ள பேருந்துத்தரிப்பிடத்தில் காத்திருப்பதால் சொல்லொணாத் துன்பங்களை தினமும் அனுபவித்து வருகின்றார்கள் .

எனவே இவ்வாறு மீன் சந்தையிலிருந்து வெளியேறும் கழிவு நீரினைத்தடுத்து சேமிப்புத் தொட்டியில் பேணி அதனை நகரசபையினால் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்து அப்பகுதியில் நிலவும் துர்நாற்றத்தை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கூறப்படுகிறது.

# இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் நிவாரண பொருட்கள் வழங்கல்

கோப்பாய் குறுப் நிருபர்

சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை சங்கங்களின் சம்மேளனத்தின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையினால் உணவுப் பொருட்கள் அல்லாத வெள்ள அனர்த்த நிவாரணப் பொருட்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பயனாளிகளுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய், பருத்தித்துறைப் பிரிவு அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவின் தலைவர் ந.இலங்கேஸ்வரன் தலைமையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் தலைவர் கு.பாலகிருஷ்ணன் மற்றும் யாழ். கிளையின் உப தலைவரும் சண்டிலிப்பாய் பிரிவின் செயலாளருமான த. ரவிச்சந்திரன் அவர்களும் கலந்துகொண்டு சண்டிலிப்பாயில் பொருட்களை வழங்கி வைத்தனர்.





விடுதலைப் புலிகளாலும் ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்களாலும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களினது உறவுகளின் சங்கம் யாழ்ப்பாணத்தில் தொடர் உண்ணாவிரத போராட்டம் ஒன்றை நடத்தி வருகிறது. சங்கத்தின் உறுப்பினர்கள் மேடையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.

# கிளிநொச்சி வன்னேரிக்குளம் வீதி புனரமைப்பிற்காக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது



முல்லைத்தீவு குறுப் நிருபர்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் வீதி புனரமைக்கப்படுவதால் அக்கராயனில் இருந்து 8ம் கட்டை வரை தற்காலிகமாக வீதி மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்கள் ஸ்கந்தபுரம், மணியங்குளம் ஊடாக வன்னேரிக்குளத்திற்கு பயணிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8.00 மணியில் இருந்து இரவு 10.00 மணி வரை வீதி மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

68 ஆண்டுகளுக்கு பின்னர் வன்னேரிக்குளம் வீதி அக்கராயனில் இருந்து புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மேற்கு கிராமங்களான வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், ஜெயபுரம், வேரவில், முழங்காவில், பல்லவராயன்கட்டு ஆகிய பகுதிகளுக்கு வன்னேரிக்குளம் வீதி புனரமைக்கப்படுவதன் மூலம் போக்குவரத்துகள் இலகுவாகும்.

## கிளிநொச்சி உருத்திரீஸ்வரர் ஆலய

# அகழ்வு பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து சுழற்சி முறை போராட்டம் ஆரம்பம்



பரந்தன் குறுாப் நிருபர்

கிளிநொச்சி உருத்திரீஸ்வரர் ஆலய வளாகத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அகழ்வு பணிக்கு எதிர்ப்பு தெரிவித்த சுழற்சி முறை போராட்டம் நேற்று ஆரம்பமானது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உருத்திரபுரம் பகுதியில் அமைந்துள்ள உருத்திரீஸ்வரர் ஆலய வளாகத்தில் குறித்த அகழ்வு பணிகள் இன்று ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதை அடுத்த நேற்று காலைமுதல் குறித்த வளாகத்தில் எதிர்ப்பு தெரிவித்து சுழற்சி முறையிலான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நேற்றைய போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, மத தலைவர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

# வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தை முற்றுகையிட்ட பெற்றோர்

## ஆசிரியர் பற்றாக்குறையால் ஏற்பட்ட குழப்பம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா மடுக்கந்தை தேசிய பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி தெற்கு பிரதேச செயலகத்தை நேற்று பெற்றோர் முற்றுகையிட்டனர்.

அண்மையில் அரசாங்கத்தால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட 6 பேர் மடுக்கந்தை தேசிய பாடசாலைக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும் பாடசாலை தவணை விடுமுறையையடுத்து அவர்கள் வேறு செயற்றிட்டத்திற்காக மீள அழைக்கப்பட்டிருந்தனர்.

இதனால் தமது பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து, பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தில் கூடினர்.

ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பின்னதங்கி உள்ளது. எனவே ஆசிரியர் வெற்றிடத்தை நிரந்தரமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். முற்றுகையிட்ட மக்கள் பிரதேச செயலகத்தின் நிர்வாக கட்டடத்திற்குள் சென்றமையால் சற்றுநேரம் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் பிரதேச செயலாளர் போராட்டக்காரர்களுடன் முன்னெடுத்த பேச்சு வார்த்தையையடுத்து போராட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன், நிலமை சுமுகமாகியிருந்தது.

இதன் போது ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் அசங்க காஞ்சனகுமார,

பாடசாலை விடுமுறை விடப்பட்டதையடுத்தே குறித்த 6 ஆசிரியர்களையும் வேறு செயற்றிட்டத்திற்காக மீள அழைத்திருந்தோம். எனினும் ஒருசில நாட்களில் அவர்களை மீண்டும் பாடசாலைக்கு நியமிப்பதற்கான நடவடிக்கையை ஏற்கனவே எடுத்துவிட்டோம் என்றார்.

# திருமண விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு வீடு சென்றவர் மரணம்

யாழ்.விசேட நிருபர்

யாழில் நடைபெற்ற திருமண வரவேற்பு விருந்துபசாரத்தில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்பியவர் உயிரிழந்துள்ளார். யாழில் உள்ள பிரபல தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு திருமண வரவேற்பு விருந்துபசாரம் ஒன்று நடைபெற்றுள்ளது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உணவருந்திய பின்னர் வீடு திரும்பிய நிலையில் நெஞ்சு வலிப்பதாக கூறியுள்ளார். அதனையடுத்து வீட்டார் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

# குருத்தோலை ஞாயிறோடு ஆரம்பமாகும் பரிசுத்த வாரம்

தவக் காலத்தின் முக்கிய பகுதியான பரிசுத்த வாரம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது. குருத்தோலை ஞாயிறுடன் ஆரம்பமாகும் பரிசுத்த வாரம் தவக்காலத்தின் மிக முக்கியமான ஏழு தினங்களைக் கொண்டுள்ளது.

குருத்தோலை ஞாயிறு, புனித வியாழன், பெரிய வெள்ளி, அல்லேலலூயா சனி, மற்றும் ஈஸ்டர் ஞாயிறு ஆகிய

தினங்கள் இந்த பரிசுத்த வாரத்தில் உள்ளடங்குகின்றன.

குருத்தோலை ஞாயிறு முதல் ஈஸ்டர் பெருவிழா வரையான ஏழுநாட்களையும் புனிதவாரம் என்றழைக்கினறோம் வருடத்தின் 52 வாரங்களில் இந்த வாரத்தை மட்டும் ஏன் புனிதவாரம் என்றழைக்கவேண்டும் என எமக்குள்கேள்வி எழலாம். எனினும் . இயேசு இவ்வுலகில் வாழ்ந்த இறுதி நாட்களே இந்த புனிதவாரம்.

இந்த வாரத்திலேயே அவரது நம்பிக்கைக்குரிய நண்பர் அவரைக் காட்டிக்கொடுத்தார். மற்றொரு நண்பர் மறுதலித்தார். ஏனைய நண்பர்கள் ஓடி ஒளிந்து கொண்டனர். மனசாட்சி விலைபோனது. பொய்சாட்சிகள் அதிகரித்தன. உண்மை உருக்குலைந்தது.

இயேசு குற்றமற்றவர் என்று தெரிந்தும் தவறான தீர்ப்புக்கு உள்ளானார். இறுதியில் அவரை அடித்து ஒரு கந்தல் துணியைப் போல் சிலுவையில் தொங்கவிட்டனர். எனினும் இறுதியில் அவர் உயிர்த்தெழுந்தார்



கடவுள் என்ற மறையுண்மைக்கே மாற்று இலக்கணம் தந்தவர் இயேசு. கடவுள் துன்பப்படக் கூடியவர்தான். அதுவும் அன்புக்காக, எத்தகைய துன்பமாயினும் எவ்வளவு துன்பமாயினும் மனமுவந்து ஏற்பவரே நம் கடவுள் என்று கடவுளைப் பற்றி வித்தியாசமான ஓர் இலக்கணத்தை இயேசு சிலுவையில் கற்றுத் தந்தார்.

புனிதவார நிகழ்வுகளில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய வாழ்க்கைப் பாடங்கள் பல உள்ளன. ஈஸ்டர் பெருவிழா கொண்டாடப்படும் ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தைய ஞாயிற்றுக்கிழமையின் போதுதான் குருத்தோலை ஞாயிறு கொண்டாடப்படுகிறது.

அன்றைய தினம் அனைத்துத் தேவாலயங்களிலும் திருப்பலிக்கு முன்பதாக குருவானவரால் தீர்த்த நீரால் குருத்தோலைகள் மந்திரிக்கப்படும். பிறகு அந்த குருத்தோலைகளை கையில் ஏந்தி ஓசன்னா பாடி மக்கள் ஊர்வலமாகச் சென்று ஆலயத்தினுள் நுழைவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள்.

தென்னை, பனை, பேரீச்சை மரங்கள் போன்றவற்றின் குருத்தோலைகள் மற்றும் ஒலிவமரத்தின் கிளைகள் கிடைக்காதபட்சத்தில் லில்லி போன்ற மலர்களையும் நீளமாக வளர்ந்த புற்களையும் கையில் ஏந்தியபடி எமது முன்னோர்கள் இந்த பவனியில் செல்வார்கள். அப்போது ஓசான்னா....தாவீதின் புதல்வா ஓசான்னா ஓசான்னா ஓசான்னா... என்றும் “என் ராஜா முன்னே செல்கிறார் வெற்றிப் பவனி செல்கிறார், குருத்தோலை கையில் எடுத்து நான் ஓசன்னா பாடிடுவேன்” என்றும் பாடல்களைப் பாடியபடி மக்கள் செல்வார்கள். குருத்தோலைகளும், ஒலிவ மரத்தின் கிளைகளும் வெற்றிக்கு அடையாளமாகும். மனிதனாக வந்த இறைமகனின் பாடுகளின் ஞாயிறு குருத்தோலைகளால் குறிக்கப்படுவது பொருத்தமே!

பாடுகளின் பலனாக அன்றோ வெற்றிக் கிடைத்தது! இயேசுவின் பாடுகள் எதிர்பாரா விபத்து அல்ல! கடவுளின் உண்மைச் செயல் அது! கடவுளின் அன்பின் அரசை உலகில் நிலைநாட்ட போராடிய இயேசு தம் பாடுகளும் மரணமும் அடங்கிய இறுதிக்கட்ட போராட்டத்தில் இறங்கினார். வார்த்தையானவர் மனித உடல் எடுத்தது இதற்காகத்தான் தன் உடலைக் கிழித்துப் பலியாக்கி, வேதனை உணர்வுகளைப் பாடுகளாக்கி மனிதனுக்கு முழு விடுதலைபெற்றுத் தருகிறார். அந்த கையில் இப்பாடுகளின் குருத்தோலை ஞாயிறு வெற்றியின் ஞாயிறு. கடவுளின் பெயரால் நமக்கு வெற்றிகளை பெற்றுத் தந்தவருக்கு ஓசன்னா! என்று நாமும் வாழ்த்துவோம்.

இயேசு எருசலேமில் நுழைந்தபோது அவரைச் சுற்றி தானாகவே உருவான கூட்டத்தைக் கண்டு அதிகார வர்க்கம் அச்சம் கொண்டது. இயேசு தன் பணிவாழ்வை ஆரம்பித்ததிலிருந்து யூத மதத் தலைவர்களின் அதிகார வாழ்வுக்கு சவால்கள் எழுந்தவண்ணம் இருந்தன. அந்த சவால்களின் பலமானதாக எருசலேம் நகரில் இயேசு பெற்ற வரவேற்பு அமைந்ததுஇயேசுவின் இறுதி இராப்போசனத்தை நினைவுகூரும் புனித வியாழனன்ற தலைவர் எனில் உண்மையான பணியாளராக இருக்கவேண்டும் என்ற உண்மையை தன் சீடர்களின் உள்ளங்களில் ஆழமாய்ப் பதிக்க நினைத்த இயேசு, அவர்களுடைய பாதங்களைக் கழுவினார்.

உறவோடு வாழ்வதுதான் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு. கிறிஸ்தவ மதிப்பீடுகள் இந்த உலகத்தில் நிலை நிற்பதற்கு காரணம் உறவு மட்டுமே. பல்வேறு அருள்பணிகள் திருச்சபையில்செயற்படுத்தப்படுகின்றன. அதற்கு அடிப்படைக் காரணம் உறவு மட்டுமே.

உறவை உடன்படிக்கையின் வழியாக ஆழப்படுத்த கடவுள் இஸ்ராயல் மக்களுக்கு வாய்ப்பு கொடுத்தார். ஆனால் கடவுளின் உடன்படிக்கையை மறந்து கடவுளுக்கு எதிராக பாவங்கள் செய்தனர். எனவேதான் எரேமியா இறைவாக்கினர் புதிய உடன்படிக்கையின் அடையாளமான

**எல்.செல்வா...**

இயேசுவின் உறவை முன்னறிவித்துள்ளார்.

பாடுகள் வழியாகத்தான் இயேசு தன்னை முழுமையான தலைமை குருவாக வெளிப்படுத்தினார் இயேசு பாடுகளை ஏற்றது நம்மோடு புதிய உடன்படிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக. இந்த புதிய உடன்படிக்கை உறவின் அடையாளமாகும்.

விவிலிய நற்செய்தி வாசகம் நம்மை கோதுமை மணியாக மாறி பலன் கொடுக்க அழைப்பு விடுக்கின்றது. "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலைத் தரும் "(யோ: 12:24) என்று இயேசு கூறியுள்ளார்.

இயேசு ஒரு கோதுமை மணியாக இந்த மண்ணுலகத்தில் விதைக்கப்பட்டார். விதைக்கப்பட்ட இறையாட்சி மதிப்பீடுகள் உயிர்ப்பின் வழியாக அனைவருக்கும் சென்றடைந்தது. இன்றும் அவரின் மதிப்பீடுகள் பல்வேறு வகையில் வாழ்வாக்கப்பட்டு வருகின்றது.

இயேசுவின் மதிப்பீடுகள் நாம் நல்லுறவோடு வாழ அழைப்பு விடுக்கின்றன. இயேசுவின் வாழ்வே உறவின் அடித்தளமாக இருக்கின்றது. ஆண்டவர் இயேசு தன்னுடைய போதனைகளின் வழியாகவும் வல்ல செயல்களின் வழியாகவும் பாடுகள் உயிர்ப்பின் வழியாகவும் நம்மோடு நல்லுறவு கொண்டார். இந்த உறவு உடன்படிக்கையின் அடையாளமாக இருக்கின்றது. உறவின் உச்சத்தை நற்கருணையை ஏற்படுத்துவதன் வழியாக இயேசு வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த பரிசுத்த வாரத்தில் நம்மை நாம் சற்று ஆழமாக பின்னோக்கிப் பார்க்க அழைக்கப்பட்டுள்ளோம். நல்லுறவோடு வாழ புதிய உடன்படிக்கையின் சின்னமாகிய இயேசுவைப் போல நாமும் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். நல்ல உறவுதான் நம்மை நல்ல ஒரு மனிதராகவும் நல்ல கிறிஸ்தவராகவும் உருமாற்றும். உறவோடு வாழ்வதில்தான் மனித வாழ்வு நிறைவு பெறும்.

இந்தத் பரிசுத்த வாரத்தில் நாம் ஏழைஎளிய, ஒடுக்கப்பட்ட கைவிடப்பட்ட மக்களுக்கு நம்மாலான உதவிகளைச் செய்து நல்லுறவைப் புதுப்பிக்க முயற்சிப்போம். அத்தகைய நல்லுறவின் வழியில் இயேசு விட்டுச்சென்ற இறையாட்சி மதிப்பீடுகளை வாழ்வாக்குவோம்.




## மன்னார் தாழ்வுபாடு ஆலயத்தில் புனித சூசையப்பர் திருவிழா







மன்னார் மறை மாவட்டத்தில் கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் தாழ்வுபாடு கிராமத்தில் அமைந்துள்ள புனித சூசையப்பர் ஆலய திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக கொண்டாடப்பட்டது. கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா நிகழ்வுகளில் கடந்த 9 நாட்கள் நவ நாள் ஆராதனைகள் இடம்பெற்று கடந்த வியாழக்கிழமை மாலை வெஸ்பர்ஸ், நற்கருணை வழிபாடும் அதனைத் தொடர்ந்து நற்கருணை இறையாசீரும் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி அ. விக்டர் சோசை அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை காலை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகையின் தலைமையில் அருட்பணியாளர்கள் இணைந்து திருவிழா கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது.திருப்பலியின் நிறைவில் புனித சூசையப்பரின் திருச்சுரூப பவனி இடம்பெற்று இறுதி இறையாசீரும் வழங்கப்பட்டது. திருவிழா திருப்பலியில் பெருமளவு விசுவாசிகளுடன் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பல்துறை சார்ந்தவர்களும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள், தகவல்:மன்னார் குறூப் நிருபர்)

## பாஸ்கா கால கவிதைகள்



### மரியாள் கேட்கிறேன்

அன்பு மகனே யூதாஸ்!
மரியாள் கேட்கிறேன்
அந்த முப்பது வெள்ளிக் காசுகளை நீ
என்னிடம் கேட்டிருக்கக் கூடாதா?
வெறும் முப்பது காசுக்குத்தானா என் மகனை
முத்தமிட்டாய்? அன்பு மகனே யூதாஸ்
உன்னை நினைக்கையில்
உன் மீதான என் கவலை
என் மகனை காட்டிக்கொடுத்து
நீ பெற்ற
முப்பது வெள்ளிக்காசுகளுடன்
உன் அன்னை உன்னை ஏற்றுக்கொள்வாளா..?
முத்தங்களும்
வெள்ளிக்காசுகளும்
கை மாறி கை மாறி
தொடர்கிறதா...?

### மன்னிப்ப

ஏழு முறையல்ல
ஏழு எழுபது
முறைக்கு மேலும்
மன்னித்து விட்டோம்
இவர்கள்
திருந்துவதாயில்லை
யேசுவே உம்மை தேடுவதாக
நடிக்கிறார்கள்
மீண்டும் உம்மை
சிலுவையில் அறைய.!

### உமது பேரால் கூடி...

என் பெயரால்
எங்கே இரண்டு அல்லது
மூன்று பேர் ஒன்றாக
கூடியிருக்கின்றார்களோ
அங்கே அவர்களிடையே
நான் இருப்பேன்
என உறுதியாகச் சொன்னவரே
எம் பாவங்களுக்காய்
மரித்து
உயிர்த்த உமது நாளில்
உமது பேரால்
ஆலயத்துள் கூடியிருந்த
எம்மிடையை
இல்லாமல் நீர் எங்கே போனீர்?
குண்டுதாரிகள்
அல்லவா
கொன்று போனார்கள்!
எம்மை கொண்டு போனார்கள்!!

### மனச்சாட்சியின் கதவுகள்

"யூதாஸ் ஸ்காரியோத்
மனுமகனை
முத்தமிட்டோ காட்டிக்கொடுத்தாய்"
என்ற உயிரை உலுக்கும்
இயேசுவின் வார்த்தைகள்
அவன் மனச்சாட்சியின்
கதவுகளை
இனித் தட்டாது
இப்போது
முத்தம் வேண்டாமே

ஒரு 'குறுந்தகவல்' போதும்
யூதாசின்
ஒரு கரத்தில்
ஸ்மார்ட் போனும்
மறு கரத்தில்
மூவாயிரம் டொலரும்
அவனைப் பார்த்துச்
சிரித்துக்கொண்டிருந்தன.

**மைக்கல் கொலின்...**

## உயிர்ப்புப் பெருவிழாவை அனைவரும் ஒரே திகதியில் கொண்டாட இணக்கம்



கத்தோலிக்கர்களும் ஆர்த்தடக்ஸ் கிறிஸ்தவர்களும் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவை ஒரே திகதியில் சிறப்பிப்பது தொடர்பில் ஒரு இணக்கம் காணப்பட்டுள்ளது.

அந்த வகையில் அது தொடர்பில் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு இவ்விரு சபைகளும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்ற பரிந்துரைக்கு கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பீட அவையின் தலைவர் கர்தினால் கர்ட் கோக் அவர்கள் ஆதரவளித்துள்ளார்.

இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடுவதற்கு கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு திகதியைக் குறிப்பது கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிக்கு ஊக்கமூட்டும் அடையாளமாக இருக்கும் என்று கான்ஸ்தாந்திநோபிள் கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தையின் பிரதிநிதி ஒருவர் உலக கிறிஸ்தவ சபைகள் மன்றத்திடம் (WCC) பரிந்துரைத்துள்ளார்.

இந்த பரிந்துரையை முன் வைத்துள்ள, துருக்கி நாட்டின் Telmessos, ஆர்த்தடாக்ஸ் பேராயர் Job Getcha அவர்கள் நீசேயாவில் நடைபெற்ற முதல் கிறிஸ்தவ பொதுச்சங்கத்தின் 1700ம் ஆண்டு நிறைவு இடம்பெறும் 2025ம் ஆண்டில் இந்த பொதுத் திகதி அறிவிக்கப்படுவது பொருத்தமாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

இந்த பரிந்துரை தொடர்பில் கருத்து தெரிவித்த கர்தினால் கோக் அவர்கள் நாள்காட்டியில் உயிர்ப்புப் பெருவிழா திகதியைக் குறிப்பதில் இந்த மாற்றம் நடைபெறுவதற்கு நீசேயா பொதுச்சங்கத்தின் ஆண்டு நிறைவு நல்லதொரு வாய்ப்பு என்று தெரிவித்தார். 325ம் ஆண்டில் நீசேயாவில் நடைபெற்ற முதல் கிறிஸ்தவ பொதுச்சங்கத்தில் வசந்த காலம் தொடங்குவதையடுத்துள்ள பௌணர்மிக்குப்பின் வரும் முதல் ஞாயிறன்று உயிர்ப்புப் பெருவிழா சிறப்பிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

**மேரி தெரேசா...**

இன்று ஆர்த்தடக்ஸ் கிறிஸ்தவர்கள் ஜூலியன் நாள்காட்டியைப் பின்பற்றி உயிர்ப்புப் பெருவிழா திகதியைக் குறிக்கின்றனர்.

ஆயினும்1582ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கிரகோரியன் நாள்காட்டியை உலகின் பெருமளவான கிறிஸ்தவர்கள் பின்பற்றி உயிர்ப்புப் பெருவிழா திகதியைக் குறிக்கின்றனர்.

# கிழக்கின் குரல்



# ஐ.நாவில் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டில் முஸ்லிம் நாடுகள்

## அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்க நம்பிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் இலங்கைக்கு ஆதரவாக முஸ்லிம் நாடுகள் நடந்து கொள்ளும் என, பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ. டி. வீரசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை தொகுதி பொறுப்பாளரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை பணிப்பாளர் குழு உறுப்பினருமான றிஸ்லி முஸ்தபாவின் ஏற்பாட்டில், காரைதீவு தொடக்கம் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் வரையிலான 3. 4 கிலோ மீற்றர் கடற்கரை வீதிகளை காபட் வீதிகளாக புனரமைக்கின்ற வேலை திட்டம் மற்றும் சாய்ந்தமருது பௌசி மைதானத்தில் புதிய கரபந்தாட்ட ஆடுகளத்தை நிறுவுகின்ற வேலை திட்டம் ஆகியவற்றுக்கான ஆரம்ப விழா ஞாயிற்றுக்கிழமை மைதான முன்றலில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் திலக் ராஜபக்ஸ, காரை தீவு பிரதேச சபை தவிசாளர் கி. ஜெயசிறில், பிரதி தவிசாளர் ஏ. எம். ஜாஹிர், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது வீரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், எமது இராணுவத்தினர் நாட்டுக்கு பெருமை சேர்த்தவர்கள். அவர்களை காட்டிக் கொடுப்பதற்கு ஐ. நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் பகீரத முயற்சிகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

ஆனால் முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ளன. அதற்காக இத்தருணத்தில் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

பெரமுன அரசாங்கம் மலர்ந்து



06 மாதங்கள்தான் ஆகி உள்ளன. கொரோனா தொற்று நோய் பரம்பல் காரணமாக நாடே ஸ்தம்பித்து உள்ளது. ஆனால் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றிய வண்ணமே உள்ளது. ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு திட்டம் போன்றவற்றை உதாரணமாக சொல்ல முடியும் என்றார்.



கிழக்கு மாகாணத்தில் பழுதடைந்து காணப்பட்ட கந்தளாய் ரயில் பாதையை கடந்து செல்லும் பிரதான வீதி மற்றும் போட்டான் காடு சந்தி வீதியைக் கடந்து செல்லும் பிரதான வீதி ஆகிய வீதிகள் புனரைமப்பு செய்யும் நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரள மற்றும் புகையிரத திணைக்களத்தின் அதிகாரிகள் சென்று பார்வையிடுவதை படத்தில் காணலாம். (படம்: திருமலை மாவட்ட விசேட நிருபர்)

# யானைகளால் மின் கம்பங்கள் சேதம்

*பனங்காடு தினகரன் நிருபர்*



அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேச சபைக்குட்பட்ட சாந்திபுரம் கிராமத்தில் நேற்றிரவு காட்டு யானைகளின் தாக்கத்தினால் மின் கம்பங்கள் சேதமாக்கப்பட்டு உள்ளதுடன், மக்களது வாழ்வாதார பயிர்கள் மற்றும் வதிவிடங்ககளையும் இவை துவசம் செய்துள்ளன.

இப்பகுதி வாழ் மக்கள் யானைகளின் இருந்து தம்மை பாதுக்காக்க மின்சார வேலி அமைத்து தமமை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# நிந்தவூரில் வறிய குடும்பங்களுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் வசதிகள்

*(நிந்தவூர் குறூப் நிருபர்)*



புனித ரமழானை முன்னிட்டு அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பினரால் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்தி கொடுப்பதற்கான காசோலைகள் வெள்ளிக்கிழமை (19) வழங்கி வைக்கப்பட்டன. நிந்தவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எம் லத்தீப் பிரதம அதிதியாக கலந்துகொண்டு காசோலைகளை வழங்கி வைத்தார். இதன்போது நிந்தவூர்09 ம் பிரிவில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் வசதி இல்லாத குடும்பங்களுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்பை பெற்றுக் கொள்வதற்காக சுமார் ஒரு இலட்சம் ரூபாவுக்கான நிதி உதவிக்கான காசோலைகள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

# புராதன சின்னங்கள் ஒரு இனத்துக்கு மட்டும் சொந்தமானதல்ல; அதனை பாதுகாக்க வேண்டும்

## காத்தான்குடியில் தம்மதிலக தேரோ தெரிவிப்பு

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

தேசிய சொத்துக்கள் ஒரு இனத்துக்கு, ஒரு சமயத்துக்கு சொந்தமானதல்ல. அதனை அனைவரும் பாதுகாக்க வேண்டும் என கடுவல, தொரந்தொட்ட இராஜ மகா விகாரையின் கறுவிலக் கொட்டு தம்மதிலக தேரோ காத்தான்குடியில் தெரிவித்தார்.

காத்தான்குடிக்கு நல்லெண்ண விஜயமொன்றை மேற் கொண்டு அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் ஏற்பாட்டில் இலங்கையிலுள்ள புராதனச் சின்னங்களை பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளில் இந்த மூன்று பௌத்த தேரர்கள் காத்தான்குடிக்கு கடந்த வெள்ளிக்கிழமை வருகை தந்ததனர்.

இதன் போது காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை பிரதி நிதிகளையும் இவர்கள் சந்தித்தனர்.

இந்த சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், இந்த நாட்டிலுள்ள புராதனச் சின்னங்கள் தேசிய சொத்துக்களாகும். இந்த நாட்டிலுள்ள அனைவரும் சேர்ந்து இந்த புராதனச் சின்னங்களை பாதுகாக்க வேண்டும். அதனை மதிக்க வேண்டும் என கறுவிலக் கொட்டு தம்மதிலக தேரோ தெரிவித்தார்.தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தேசிய சொத்துக்களாக மதித்து நடக்க வேண்டிய கடமை நம் அனைவருக்கும் உண்டு.



இலங்கையில் முஸ்லிம்கள் பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்த்தவர்களுக்கிடையிலான ஒற்றுமை என்பது நீண்ட வரலாற்றைக் கொண்டது.

இலங்கை முஸ்லிம்களுக்கு மிகவும் கௌரவமான பெறுமதியான ஒரு வரலாறு இந்த நாட்டில் இருக்கின்றது.

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட துரதிஸ்டவசமான ஒரு சில சம்பவங்கள் தொடர்பில் இலங்கை முஸ்லிம்களை ஏனைய சமூகங்கள் சந்தேகத்துடன் பார்ப்பதுடன், சங்கடங்களையும் ஏற்படுத்துவதை காணக் கூடியதாக இருக்கின்றது.

முஸ்லிம்கள் சட்டத்துக்கு கட்டுப்பட்டு வாழ்வதில்லை, ஒழுக்கமாக வாழ்வதில்லை, புராதனச் சின்னங்களை அழிக்கின்றார்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் அக்கறையில்லாமல் இருக்கின்றார்கள் என்பன போன்ற கருத்துக்கள் எழுந்த வண்ணம் இருக்கின்றன.

இந்த வகையில் தேசிய தொல்பொருள்களை புராதனச் சின்னங்களை பாதுகாப்பதற்கான கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கான பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம் என்றார்.

இதில் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை பிரதி நிதிகள், காத்தான்குடி உலமா சபை பிரதி நிதிகள், காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகள், முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பௌத்த மத குருமார் அட்டப்பள்ளத்திற்கு விஜயம்

*காரைதீவு குறூப் நிருபர்*

நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் காணப்படும் இந்து மக்களின் மயான நிலத்தை மீண்டும் மீட்டுக்கொடுப்பதாக அங்குள்ள மக்களின் வேண்டுகோளிற்கு இணங்க அவர்கள் நேற்றுமுன்தினம் அங்கு சென்றுள்ளனர்.



கடும் பாதுகாப்புடன் வருகை தந்த பௌத்த மதகுருமார் இவ்விடயம் தொடர்பில் மக்களுடன் கலந்து ஆலோசனை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன் அப்பகுதி மக்களுக்கு மீண்டும் குறித்த மயான நிலத்தை பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிப்பதாகவும் தமிழ், சிங்கள மக்கள் எல்லோரும் ஒரே இனம் என்று அங்கு உரையாற்றும் போது முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த வருடங்களில் அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் பிரதேசத்துக்குட்பட்ட அட்டப்பள்ளம் இந்துமயானமானது ஆக்கிரமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அப்பகுதி மக்கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டத்திலீடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு நகரை ஒளியூட்டும் செயற்றிட்டம்

*(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)*



நகரை ஒளியூட்டும் செயற்றிட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வீதி மின் விளக்குகளுக்கான ஆவணங்களைக் கையளிக்கும் நிகழ்வானது வெள்ளிக்கிழமை (19) இடம்பெற்றது.

வீதி அபிவிருத்தி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஊடாக நகரை ஒளியூட்டும் செயற்றிட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையில், அக்சஸ் எஞ்சினியரிங் தனியார் நிறுவனத்தினால் நவீன தொழிநுட்பத்துடன் தானியங்கி முறையிலான வீதி விளக்குகளை பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்கீழ் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பழைய கல்முனை வீதியின் மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அதனை உத்தியோகபூர்வமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் திருமதி கலைவாணி வண்ணியசிங்கம் மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் மாணிக்கவாசகர் தயாபரன் அவர்களிடம் கையளித்தார்.

# வேலோடுமலை முருகனாலய உற்சவப் பெருவிழா ஆரம்பம்

*காரைதீவு குறூப் நிருபர்*

கிழக்கிலங்கையின் சித்தாண்டி முருகனாலயத்திற்கு மேற்கே, போகர் சித்தரால் வேல்பிரதிஸ்டை செய்யயப்பட்டு, நாகர் குல வம்ச அரசனாம் நாகராஜனால் வழிப்படப்பெற்ற, இலுக்குப் பொத்தானை வேலோடுமலை முருகனாலயத்தின் அலங்கார உற்சவப்பெருவிழா நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக 7 நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று, எதிர்வரும் 28ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறும். மாவடிவேம்பு, சித்தாண்டி, கொம்மாதுறை, வந்தாறுமூலை, தேவபுரம் மற்றும் பொதுமக்கள் இணைந்து இவ்வுற்சவத்தை சித்தர்கள்குரல் மெய்யன்பர்கள் நடாத்தவுள்ளனர்.

ஆலய நித்தியகுரு சிவஸ்ரீ சர. பாக்கியராசாக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. பகல் பூஜை உச்சிக்காலம் 12 மணிக்கும் ,இரவு பூஜை 7 மணிக்கும் நடைபெறும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே, இயற்கையுடன் கூடிய வனப்பகுதியில் மலையிலே எழுந்தருளிய இவ் ஆலயத்தை நோக்கி பக்தர்கள் படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

# பொத்துவில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தை தரமுயர்த்த நடவடிக்கை

*(ஒலுவில் விசேட நிருபர்)*

பொத்துவில் அறுகம்பை சவாலை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தை பிரதேச வைத்தியசாலையாக, தரமுயர்த்துவதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் நடவடிக்கை எடுத்துள்ளதாக, பிரதேச சபை உறுப்பினர் எம்.எச்.எம். ஜமாஹிம் தெரிவித்தார்.

சவாலை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தை தரமுயர்த்துமாறு ஆளுநரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ் வருட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான மதீப்பீட்டு அறிக்கையை மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கோரியுள்ளதாகவும் கூறினார்.

அறுகம்பை சவாலைப் பிரதேசத்தில் சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் இதுவரை எவ்வித அபிவிருத்தியும் செய்யாமல் காணப்படுகின்றது.

அறுகம்பை, சர்வோதயபுரம் ஆகிய பிரதேசத்தில் சுமார் 05 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அவசரத் தேவைகளுக்காக பல மைல்களுக்கு அப்பால் உள்ள பொத்துவில் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக, சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 30, கலகெதர வீதி, கடுகஸ்தோட்ட | கடுகஸ்தோட்ட, அலவத்துகொட, கலகெதர |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 114, நுவரெலியா வீதி, தலவாக்கலை | தலவாக்கலை, பூண்டுலோயா, ஹட்டன் |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல.20, கொழும்பு வீதி, கலுவெல்ல வீதி, காலி | காலி, காலிII ம் கிளை, உடுகம, பத்தேகம, கராப்பிட்டிய, ஹிக்கடுவ, ஹபராதுவ, இமதுவ |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல.4, வந்துரப்ப வீதி, அம்பலாந்தோட்ட | அம்பலாந்தோட்ட, அங்குணகொலபெலஸ்ஸ, சூரியவெவ, ஹம்பாந்தோட்ட, திஸ்ஸமஹாராம |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 25,B சுனந்தாராம வீதி, களுபோவில | களுபோவில, தெல்கந்த, பொரலஸ்கமுவ, நுகேகொட, புறக்கோட்டை, நாவல, கிருலப்பொன, பொரல்ல |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, புதிய நகரம் எம்பிலிபிட்டிய | எம்பிலிபிட்டிய, கொடக்கவெல |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல.149,இரத்தினபுரி வீதி,ஹொரன | ஹொரன, இங்கிரிய, கிரிஎல்ல |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 12, கொழும்பு வீதி, கம்பஹா | கம்பஹா, யக்கல, கம்பஹா II ம் கிளை |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல.514/4,அவிசாவெல வீதி, கடுவெல | கடுவெல, தெல்கொட |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 17, குருணாகல் வீதி, மினுவான்கொட | மினுவான்கொட, திவுலபிட்டிய |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி | களுவாஞ்சிகுடி, கல்முனை, பெரியகல்லாறு, பளுகாமம் |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, இல.52/1, மருதம் கட்டிடம், கொடிக்காமம் வீதி, நெல்லியடி | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 16, வாழ்வுதயம் கொம்பிளக்ஸ், தலைமன்னார் வீதி, மன்னார் | மன்னார், வன்காலை |
| 15 | தேசிய சேமிப்பு வங்கி, இல.161, பிரதான வீதி, குளியாப்பிட்டி | குளியாப்பிட்டி, நாரம்மல, ஹெட்டிப்பொல, பன்னல |
| 16 | தேசிய சேமிப்பு வங்கி, குருணாகல் வீதி, சிலாபம் | சிலாபம், மாதம்ப, பிங்கிரிய |
| 17 | தேசிய சேமிப்பு வங்கி, இல.66, பிரதான வீதி, அலவ்வ | அலவ்வ, பொல்கஹவெல, கிரியுல்ல |

மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2021.04.08 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2021.04.11

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல.39, 40, புதிய நகரம், கண்டி வீதி, மஹியங்கன | மஹியங்கன |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 20, புதிய நகரம், திகன, ராஜவெல்ல | திகன, வத்தேகம |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 147, திருகோணமலை வீதி, மாத்தளை | மாத்தளை |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல.341, காலி வீதி, அம்பலாங்கொடை | அம்பலாங்கொடை, உரகஸ்மன்ஹந்திய, பிட்டிகல, எல்பிட்டிய |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 55, பெலியத்த வீதி, ஹக்மன | ஹக்மன, பெலியத்த, தங்கல்ல, வலஸ்முல்ல, வீரக்கெட்டிய, மித்தெனிய, ஊருபொக்க, தெய்யந்தர |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 75, ஹைலெவல் வீதி, ஹோமாகம | ஹோமாகம, மீகொடை, கொட்டாவ மஹரகம, பத்தரமுல்ல, அத்துருகிரிய, தலவத்துக்கொட, மாலபே, ஹன்வெல்ல |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல.318, காலி வீதி,கல்கிஸ்ஸ | கல்கிஸ்ஸ, தெகிவளை, கொள்ளுப்பிட்டிII ம் கிளை, பம்பலப்பிட்டி, வெள்ளவத்த, தலைமை அலுவலகக் கிளை |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல.57/1,யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவெல | அவிசாவெல, ருவன்வெல, எஹெலியகொட |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல.71/A, பான்ஸ் ரத்வத்த மாவத்தை, பலாங்கொட | பலாங்கொட, கஹவத்தை, பெல்மடுல்ல |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி,அவரிவத்த, கட்டுநாயக்க (பஸ் நிலையம் முன்பாக) | கட்டுநாயக்க, ரத்தொலுகம |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 378, அவிசாவெல வீதி, வெல்லம்பிட்டிய | வெல்லம்பிட்டிய,முல்லேரியா |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல.257, நீர்கொழும்பு வீதி, வத்தளை | வத்தளை,பேலியகொட, மஹபாகே |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 5, பிரதான வீதி, திருகோணமலை | திருகோணமலை, கந்தளாய் |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, இல.496, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம்II ம் கிளை, ஊர்காவற் துறை (கய்ட்ஸ்), திருநெல்வேலி, கோப்பாய் |
| 15 | தேசிய சேமிப்பு வங்கி,அனுராதபுர வீதி, கஹடகஸ்திகிலிய | கஹடகஸ்திகிலிய, கெபித்திக் கொல்லாவ, ஹொரவப் பொத்தான, மதவாச்சி |
| 16 | தேசிய சேமிப்பு வங்கி, இல.07, பிரதான வீதி, கல்கமுவ | கல்கமுவ, மாஹோ, தம்புத்தேகம |
| 17 | தேசிய சேமிப்பு வங்கி, இல.1/10, பழைய வைத்தியசாலை வீதி, நிக்கவெரட்டிய | நிக்கவெரட்டிய, புத்தளம், ஆணமடுவ, வாரியப்பொல |

எவ்வித முன்னறிவித்தலுமின்றி அடகு ஏலவிற்பனையை ரத்துச் செய்வதற்கோ, கூட்டிணைப்பதற்கோ அல்லது பிற்போடுவதற்கோ வங்கிக்கு சகல உரித்துமுண்டு.

**ஒப்பமிட்டவர்/பிரதிப் பொது முகாமையாளர்**
**(கிளைக்கடன் மற்றும் அஞ்சல் வங்கி)**
**தேசிய சேமிப்பு வங்கி**
**தலைமை அலுவலகம்,**
**கொழும்பு 03.**

**தொலைபேசி : 2573008-11,**
**நீடிப்பு இல. 441, 244, பெக்ஸ் : 2574018**

## இறுதி தீர்மானம் தொடர்பான பொது அறிவிப்பு

வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகள் நிருமாணம்
உள்ளடங்கலான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காடுகள் மீள் வளர்ப்பு
மற்றும் வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

**வன பாதுகாப்புத் திணைக்களம்**

### முன்மொழியப்பட்ட விலகண்டிய திட்டத்திற்கு பொருந்தும் ஆரம்ப சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கை

**தேசிய சுற்றுச்சூழல் 23 BB (4) சட்டப்பிரிவின் கீழான அறிவிப்பு**

மேற்கண்ட திட்டத்துடன் தொடர்புடைய ஆரம்ப சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கையின் ஆய்வுக்குப் பின்னர் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, திட்டத்தை செயல்படுத்துவதற்காக 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் திட்டங்களை அங்கீகரிப்பதற்கான நடைமுறை) விதிமுறைகளின் இல் 13 க்கு அமைவாக கொழும்பு 10, டீ.பீ. ஜெயா மாவத்தை, இல.500 இல் அமைந்துள்ள நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரிடம் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக வன பாதுகாப்புத் திணைக்களம் முடிவு செய்துள்ளது என்பதை பொதுமக்களுக்கு தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

**வன பாதுகாப்பாளர்**
**வன பாதுகாப்புத் திணைக்களம்,**
**தலைமை அலுவலகம், "சம்பத்பாய"**
**இல. 03, இராஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்ல**

## கருவலகஸ்வெவ பிரதேச சபை

### 2022 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுதிட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல்

2022 ஆம் ஆண்டிற்காக கருவலகஸ்வெவ பிரதேச சபையின் வரவுசெலவுதிட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு குறித்த அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்கள் மற்றும் சனசமூக சங்கங்களில் இருந்து அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு குறித்த ஆலோசனைகளை 2021 ஜுன் 30 இற்கு முன் வழங்குமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

**டபிள்யூ.பீ.நிமல் ஜயசிரி பண்டார**
**பிரதேச சபை**
**கருவலகஸ்வெவ**
**தொலைபேசி இலக்கம் - அலுவலகம் - 0322267917.**

## பெயர்மாற்றம்

கொட்டடி, கடற்கரை வீதி, பருத்தித்துறை இல் வசித்து தற்போது இல.05/05, 1ம் குறுக்கு, MMV பின்வீதி, புதிய காத்தான்குடி - 06 இல் வசிக்கும் செல்வரத்தினம் நிறோயன் (951235040V) ஆகிய நான் 17.09.2015ஆம் திகதி புனித இஸ்லாம் மார்க்கத்தை தழுவிக் கொண்டதுடன் எனது பெயரை செல்வரெத்தினம் முஹம்மது றமீஸ் என மாற்றம் செய்துள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**Repeat Your ad For Better Offers**

## பெயர் மாற்றம்

முஹமட் மாஹிர் ஸாஹிராவாகிய நான் இன்று முதல் எனது பெயரை மாதவன் ஷிரோமி என்று மாற்றிக் கொள்கிறேன் என்பதை இலங்கை அரசாங்கத்திற்கும் இலங்கை மக்களுக்கும் தெரிவித்து கொள்கிறேன்.

## பெறுகை அறிவித்தல்

### 2021/2022 வருடத்தில் தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தின் அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் தோட்டங்களை சுத்திகரிப்பதற்கான விலைமனு கோரல்

தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தின் அலுவலக விடுதிகள் மற்றும் தோட்டங்களை சுத்திகரிக்கும் சேவையை வழங்குவதற்காக தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தினால் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இந்த நிலையத்தினால் வழங்கப்படும் மாதிரிப் படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பெறுகை ஆவணங்களைக் கோரும் நிறுவனங்கள் சுத்திகரிப்பு சேவை வழங்குதல் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். மீளளிக்கப்படும் 1000.00 ரூபாவை இந்த நிலையத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததன் பின் சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கணக்குப் பிரிவிலிருந்து பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. பெறுகை ஆவணங்கள் 2021-03-23ஆம் திகதி முதல் 2021-04-06ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை வழங்கப்படும்.

04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை ஆவணங்களை முத்திரைக் குறி பொறித்து 2021-04-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில்

**பணிப்பாளர்,**
**தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம்,**
**யோதகம,**
**எம்பிலிப்பிட்டிய.**

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அவ்வாறல்லாவிடில் நேரில் கொண்டு வந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

05. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2021-04-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன், நிறைவடைந்தவுடன் உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும்.

06. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

07. விலைமனுக்களுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தின் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட 2021-06-15ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் 40,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

08. மேலதிக விபரங்களை 047-2261659 எனும் தொலைபேசி இலக்கத்தில் கணக்காளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பெறுகைக் குழு,**
**தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம்.**

## சுற்றுலாத்துறை அமைச்சு

**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை**

### கேள்வி கோரல்

**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் வீரவில நகரத்தில் அமைந்துள்ள விடுமுறை பங்களாவிற்கு முகாமைத்துவ சேவையை வழங்குதல்**

**கேள்வி இல. SP/2021-3**

1. சிவில் விமான சேவைகள் அதிகார சபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் (DPC) தலைவரினால் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் வீரவில நகரத்தில் அமைந்துள்ள விடுமுறை பங்களாவிற்கு முகாமைத்துவ சேவையை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. கேள்வியைக் கையளிப்பதற்கு கடந்த மூன்று (03) வருடத்தினுள் இயைபுடைய மாதிரியிலான சேவை வழங்கிய அனுபவம் தேவையாகும்.
3. 2021 மார்ச் மாதம் 24ஆம் திகதி முதல் 2021 ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின் மீளளிக்கப்படாத ஆயிரத்து ஐந்நூறு (1500.00) (வெற் இன்றி) ரூபா கட்டணத்தைச் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
4. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, சிவில் விமான சேவைகள் சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டப் பிரிவின் 0112358824 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் அனைத்து கேள்விதாரர்களினாலும் இருபதாயிரம் (20,000.00) ரூபாவுக்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை வைப்புச் செய்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களுக்கு கேள்விப் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.
6. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2021 மார்ச் மாதம் 29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் இடம்பெறும்.
7. 2021 ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைக் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வீரவில சுற்றுலா பங்களாவிற்கு முகாமைத்துவ சேவையை வழங்குதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. கேள்வியைக் கையளிப்பதற்கு தகைமை பெறும் நிறுவனத்தினால் முழு ஒப்பந்தப் பெறுமதியின் 10% பெறுமதியான இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பெயரில் பெற்றுக்கொண்ட நிபந்தனைகளற்ற செயற்றிறன் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். எதிர்பார்க்கப்படும் செயற்றிறன் மட்டத்திலான சேவை கிடைக்காவிட்டால் அதை அறவிட்டுக் கொள்ளும் உரிமையை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
9. 2021 ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான காலம் முடிவடைந்தவுடன் உடன் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,**
**இல. 152/1, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க.**

## 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கத்திற்கான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 எ பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்.

வடமேல் உள்ளூராட்சி ஆணையாளராகிய ஐ.எம்.ஐ. இலங்ககோன் ஆகிய என்னால் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத்திற்கான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் திருத்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 எ பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள ரிதீகம பிரதேச சபையின் துணைத் தலைவர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2021.03.31 ஆந் திகதி மு.ப, 10.00 மணிக்கு ரிதீகம பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்பதனை இத்துடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

**ஐ.எம்.ஐ. இலங்ககோன் உள்ளூராட்சி ஆணையாளர் (வடமேல்)**

**2021.03.22 ஆந் திகதி**
**2 ஆம் மாடி, பீ கதவு மாகாண சபை அலுவலகத் தொகுதியில் அமைந்துள்ள வடமேல் உள்ளூராட்சி திணைக்களம்.**

## மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி விற்பனைச் சந்தை அநுராதபுரம்

| வாகன இல. | தயாரிப்பு | வகை |
|---|---|---|
| NC BGR - 18XX | WEGO | BIKE |
| NC BIA - 60XX | STRYKER | BIKE |
| NC BIC - 24XX | RAY-ZR | BIKE |
| NC YQ-70XX | RE 205 | THREE WHEELER |
| NC BFD - 69XX | RAY-ZR | BIKE |
| NC BGC - 84XX | METRO | BIKE |
| NC BIJ - 65XX | CD 100 | BIKE |
| WP BHK - 39XX | DIO | BIKE |
| WP BHW - 23XX | DIO | BIKE |
| NW BCN - 53XX | | BIKE |
| WP BIQ - 33XX | NTORQ | BIKE |
| NW BII - 94XX | RAY-ZR | BIKE |
| NW BIN - 86XX | DIO | BIKE |
| NC BAI-76XX | CT 100 | BIKE |
| NC BHD-40XX | HEAVY DUTY | BIKE |
| NC BEX - 32XX | WEGO | BIKE |
| UP BGV-28XX | DIO | BIKE |
| NC BGT - 76XX | XL SUPER HD | BIKE |
| NP BEB-75XX | PULSAR 150 | BIKE |
| NP BIR - 85XX | CT 100 | BIKE |
| NP BFV - 17XX | RAY-ZR | BIKE |

**யாழ்ப்பாண ஜங்ஷன், அநுராதபுரம்**
**(யுனைட்டட் மோர்டசுக்கு முன்)**
வாகன சாலையில் 2021 மார்ச் 25ம் திகதியில்
காலை 9.00 மணியிலிருந்து பார்வையிடலாம்.
முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் விற்பனை சந்தையிலிருந்து அகற்றுவதற்கு கம்பனிக்குரிமையுண்டு

diadem DSM

**071 2125664 / 071 9919986**
**025-5622661-2**

நுழைவு கட்டணம் ரூ.500/-

**வாகன விற்பனைச் சந்தை திகதி : 25.03.2021**
**நேரம்: காலை 10.00 மணி**
*நிபந்தனைக்குட்பட்டது

தலைமை அலுவலகம்
**ஆப்பிகோ பினான்ஸ் கோ. பி.எல்.சி**
146, ஹெவலொக் வீதி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.
தொடர்புகளுக்கு : 0115 553663
Estd.1951 PQ 92

## பெறுகை அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-90

பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கையின் வழங்குநர்களிடமிருந்து இலங்கை அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**1. Paper Shredder – 01 Unit**

| | |
|---|---|
| ***Closing Date of Bid*** | : 20-04-2021 – 2.00 p.m. |
| ***Bid Reference No.*** | : SCP05/P.Shredder/NCB07/2021-01 |
| ***Document Fee (Non Refundable)*** | : Rs. 1,000.00 |
| ***Pre Bid Meeting*** | : 30-03-2021 at 10.00 a.m. |

**2. Standalone Paper Drill (Punching Machine) – 01 Unit**

| | |
|---|---|
| ***Closing Date of Bid*** | : 20-04-2021 – 2.00 p.m. |
| ***Bid Reference No.*** | : SCP05/P.M/NCB11/2021-05 |
| ***Document Fee (Non Refundable)*** | : Rs. 2,000.00 |
| ***Pre Bid Meeting*** | : 31-03-2021 at 10.00 a.m. |

ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் மீளளிக்கப்படாத கட்டணம் சகிதம் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை கொழும்பு-08, இல. 118, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல்கள் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை உரிய விலைமனு தொடர்பான விண்ணப்பங்கள் வழங்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முன் தினம் வரை பி.ப. 2.00 மணி வரை வழங்கல் பிரிவினால் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட திகதிகளில் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் கேள்விக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.

மேலதிக விபரங்களை கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கங்கானி லியனகே,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08.**

**தொலைபேசி/தொலைநகல்: 011-2698653**
**இணையதளம்: www.documents.gov.lk**

## SLITA

**இலங்கை புடவை மற்றும் ஆடைகளுக்கான நிறுவகம்**
பத்திக் கைத்தறித்துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு
இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் 160 பத்திக் பயிற்சி நிலையங்களை நிறுவுவதற்கான திட்டத்தின் கீழ்

### பத்திக், நவநாகரீக உடை அலங்காரம் மற்றும் தையற் தொழிநுட்பத்துறையில் தேர்ச்சி மிக்க பயிற்றுவிப்பாளராக ஓர் அரிய வாய்ப்பு (ஒப்பந்த அடிப்படையில்)

வாருங்கள், எம்முடன் இணைந்து பயிற்சி பெறுங்கள்

**பின்வரும் தகுதிகள் உங்களிடம் உள்ளதா?**

- பத்திக் தொழில்நுட்பம், நவநாகரீக உடை அலங்காரம் ஆகியவற்றில் அனுபவம் / ஆர்வம் மற்றும் உற்பத்திக்கான ஆடை மாதிரி உரு தயாரித்தல் / தையற் தொழில்நுட்பம் போன்றவற்றில் பயிற்றுனராக 5 வருட சேவை அனுபவம்.
- புடவை / ஆடை சார் துறை தொழில் முயற்சியாளர்கள்
- புடவை மற்றும் ஆடைசார் துறையில் அங்கீகரீக்கப்பட்ட NVQ தரம் 3/4 இல் தகைமை
- இலங்கை புடவை மற்றும் ஆடைகளுக்கான நிறுவனத்தின் பட்டப்படிப்பு அல்லது டிப்ளோமா கற்கை நெறிச் சான்றிதலுடன் பத்திக் சாயமிடல்

**கிடைக்கவிருக்கும் அனுகூலங்கள்**

- முழுஅளவிலான விரிவான பயிற்சி
- எல்லாம் உள்ளடங்களாக ரூபா.30,000/-மாத வருமானம்.
- தொழில் முயற்ச்சியாளராகமாற தொழில்சார் வளர்ச்சி

**ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மூன்று பயிற்சியாளர்கள் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் சிறப்பு பிரிவுகளில் தெரிவு செய்யப்படுவர்**

- வடிவமைப்பு உருவாக்கமும் பத்திக் சாயமிடலும்
- ஆடை உற்பத்திக்கான மாதிரி உரு தயாரித்தல்
- தையல் இயந்திரம் திருத்துதலும் பராமரித்தலும்

**சுயமாகத் தயாரிக்கப்பட்ட உங்களுடைய விண்ணப்பப்படிவத்தை 2021.03.31 திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கீழ் உள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்**

பணிப்பாளர் நாயகம்
கந்தவல எஸ்டேட், இல.02, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானை.
தொலைபேசி: 011 - 2632406, தொலைநகல் : 011 - 2636917 வட்ஸ்அப் / வைபர் : 070 415 1777
மின்னஞ்சல்: director@textile-clothing.lk , வலைத்தளம் : ww.slita.lk

**நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் உற்பத்தித்திறன் வாய்ந்த குடிமகனை உருவாக்குதல்**

லேக்ஹவுஸ் **விளம்பர** மத்திய நிலையம்
உங்கள் விளம்பரங்களை எங்கள் மூலம் பிரசுரியுங்கள்

**மாத்தறை**
இல. 29, பிரதான பஸ் நிலையம், மேல் மாடி
**041 223 5412**
அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்
இல. 35, டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10
1949

## விலை மனுக்கோரல்

வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகள் நிருமாணம்
உள்ளடங்கலான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காடுகள் மீள் வளர்ப்பு
மற்றும் வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

**வன பாதுகாப்புத் திணைக்களம்**

### கருப்பு நிற (ஒளி ஊடுருவாத) பொலித்தீன் பைகள் வழங்குவதற்கான விலைமனுக்கோரல்

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி பொலித்தீன் பைகளை வழங்குவதற்காக வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| பைகளின் அளவு | திண்மம் | நிறம் மற்றும் வகை | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 9″ x 6″ | 400 | கருப்பு (ஒளி ஊடுருவாதவ) | 3373000 |
| 12″ x 8″ | 500 | கருப்பு (ஒளி ஊடுருவாதவ) | 1893000 |
| 18″ x 12″ | 500 | கருப்பு (ஒளி ஊடுருவாதவ | 330000 |

மனுதாரர்கள் ஏல ஆவணங்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்கு கிளையிலிருந்து, "சம்பத்பாய", இல.82, இரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லயில் 2021.04.06 ஆம் திகதி வாரநாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 02.45 மணித்தியாலங்கள் வரை மீளச்செலுத்தப்படாத ரூபா.3,500/- ஐ செலுத்துவதன் மூலம் மனு ஆவணத்தை விலைக்கு வாங்கமுடியும்.

2021.04.07 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன். அன்றைய தினம் பி.ப.2.15 மணிக்கு மனுக்கள் திறக்கப்படும்.

மீள்ச்செலுத்தப்படாத ரூ.200,000.00 தொகையை மனுப் பாதுகாப்பு பிணையாக பொது வனப்பாதுகாப்பாளர் எனும் பெயரில் வைப்பிலிடப்பட்ட குறித்த பொது 172 இரசீதினை இணைத்து அல்லது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியிலிருந்தும் பெறப்பட்ட ரூ.200,000.00 வங்கி வரைவை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை வாரநாட்களில் சிரேஷ்ட கணக்காளரை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**பொது வனப் பாதுகாப்பாளர்**
**வன பாதுகாப்புத் திணைக்களம்,**
**தலைமை அலுவலகம், "சம்பத்பாய"**
**இல. 82, இராஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல**
**தொ.பே. இல. 011 286 6026**

# நகர்வலம்



## கலைஞர்களை கைதூக்கி வளர்க்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆசியாவின் ஆச்சர்யம்

ஏ.எல்.எம் அதாஉல்லா எம்.பி தெரிவிப்பு

ராஜகிரிய குறூப் நிருபர்

ஊடகவியலாளர்கள் மிகத் தெளிவுடன் நடந்து கொண்டால் நாட்டில் வீணான சந்தேகங்கள்,பதற்றங்கள் பரவும் நிலை ஏற்படாதென தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாஉல்லா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (ஞாயிற்றுக் கிழமை) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நடந்த கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர்,ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துப் பேசுகையிலே இவ்வாறு கூறினார்.



தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்:எல்லாவற்றையும் அரசியலாகப் பாரக்கும் அல்லது அரசியலாக்கிப் பேசும் மனநிலைகளிலிருந்து முதலில் நாம் விடுபட வேண்டும். சங்கடங்கள்,சவால்கள் மற்றும் சந்தேகங்களை அரசியலாக்கத்தான் சிலர் முயற்சிக்கின்றனர். கொள்கையில் மக்களை ஒற்றுமைப்படுத்த இயலாத சில அரசியல்வாதிகள், நடப்பவை அனைத்தையும் அரசியலாக்கி ஆதாயம் காண முனைவதால்தான்,சிறுபான்மையினர் சில சவால்களை எதிர்கொள்ள நேரிடுகிறது.ஒரே நாடு ஒரே சட்டம் என்பது எல்லோரும் வாழ்வதற்கான நாட்டை உருவாக்கும் சிந்தனை. இதில்,தத்தமது அடையாளங்களுடன் மக்கள் வாழ்வதற்கு வழிவகுக்கப்படும். புதிய அரசியலமைப்புக்கான யோசனைகள்,ஆலோசைனகள் மக்களிடமும் கோரப்பட்டுள்ளன. அவரவர்,தங்களுக்கேற்ற அல்லது வசதியான ஆலோசனைகளை முன்வைக்கலாம்.இவற்றில் எதைத் தேர்ந்தெடுப்பது,தவிர்ப்பது என்ற முடிவுகளை இதற்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவினரே தீர்மானிப்பர். இதற்கிடையில்,ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை



அரசியலமைப்பாகக் கருதச் சிலர் அவசரப்படுகின்றனர். இதற்குச் சில ஊடகங்களும் ஒத்துழைக்கின்றன. இதுதான் கவலை. மன இறுக்கங்கள் இடைவெளியாகிச் செல்வதற்கு இவ்வாறான கலை நிகழ்ச்சிகள் கை கொடுக்கும்.பண்டையத் தொழில்களில் ஏன் இன்றும் சில தொழில்களைச் செய்யும் போது, நாட்டார் பாடல்களைப் பாடிக்கொண்டு தானே செய்கின்றனர்.

கலை கலந்த வேலையில் அலுப்பிருக்காது என்பதும் இதைத்தானே. எத்தனையோ அறிவிப்பாளர்கள், கலைஞர்கள் மற்றும் இலக்கியவாதிகளுக்கு இந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தானம் கை கொடுத்துள்ளது.

இவ்வாறானவர்கள் இன்று உலகெங்கும் பரந்து வாழ்ந்து எமது நாட்டின் மொழி,கலாசாரங்களை பாரறியச் செய்வது மகிழ்ச்சி தருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம் அதாஉல்லா தெரிவித்தார்.

## வாகன விபத்துக்களில் மூவர் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் பொலிஸ் வலயத்தின் இரு பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளதாக வலய போக்குவரத்து பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரவபொத்தான பொலிஸ் பிரிவின் இரு இடங்களில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் 42 வயதுடய பெண் ஒருவரும் 20 வயது இளைஞன் ஒருவரும் உயிரிழந்தனர்.

இபலோகம பொலிஸ் பிரிவின் அவுகன வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், 67 வயதுடய நபர் ஒருவரும் உயிரிழந்தார்.

இவ்விபத்துச் சம்பவம் கடந்த 14 மற்றும்15 ஆம் திகதிகளில் இடம்பெற்றுள்ளதாக அநுராதபுரம் வலய போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ஆத்மிகத்திலிருந்து அரசியலை வேறாக்குவது, மலரிலிருந்து நறுமணத்தை பிரிப்பது போன்றது

அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல் தலைவர் எஸ்,எம். சபீஸ்

அம்பாறை சுழற்சி நிருபர்

ஆத்மிகத்தை அரசியலிலிருந்து பிரிப்பது மலரிலிருந்து நறுமணத்தைப் பிரிப்பது போன்று முடியாத காரியமென, அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல் சம்மேளனத் தலைவரும் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான எஸ், எம். சபீஸ் தெரிவித்தார். ஸஹீஹுல் புகாரியின் தமாம் வைபவத்தில் தலைமை உரையாற்றிய போதே,அவர் இவ்வாறு தெரிவித்தார். அக்கரைப்பற்று ஜும்ஆ பெரியபள்ளிவாசலில் அண்மையில் நடைபெற்ற ஸஹீஹுல்புஹாரி தமாம் வைபவத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது; 64 வருடங்களாக ஸஹீஹுல் புஹாரி கிரந்தம் ஓதப்பட்டு வருகிறது. சுமார் ஆறு இலட்சம் ஹதீதுகளைத் திரட்டிய இமாம் புகாரி அவர்கள், சுமார் ஐயாயிரம் ஹதீதுகளை நூலாகத் தொகுத்தார். நபியவர்களின் வாக்கு, வாழ்க்கை, முன்மாதிரிகள்தான் ஹதீதுகளாக,அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பின்பற்ற உதவுகிறது. புனித குர்ஆனுக்கு அடுத்தபடியாக, ஹஹீஹுல் புகாரி கிரந்தத்தை மதிக்கிறோம். ஜும்ஆ பிரசங்கங்கள் சுருக்கமாக இருப்பதால் எல்லாவற்றையும்



சொல்ல முடியாதுள்ளது. இவ்வாறான ஹதீஸ் மஜ்லிஸ்கள்தான், முழுமையான விளக்கத்தைக் கற்றுக் கொள்ள உதவுகிறது. தற்போதைய கணனி யுகத்தில் எமது இளம் சமூகத்தினர் மார்க்க விடயங்களில் கவனம் செலுத்துவது குறைந்து வருகின்றமை கவலையளிக்கிறது. இவ்வாறான மஜ்ஜிலிஸ் வைபவங்கள்தான் அல்லாஹ்வின் பக்கம் எம்மைத் திருப்புகிறது. எனவே, இவ்வாறான மஜ்லிஸ்களை ஏற்பாடு செய்த எமது முன்னோர்களை, இந்த உயரிய சபையில் ஞாபகமூட்ட விரும்புகிறேன். பள்ளிவாசல்களில் கடமையாற்றிய முஅத்தின்கள், இமாம்கள் மற்றும் கடமையாற்றிய பெரியவர்களையும் கௌரவிக்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை "இன்ஷாஅல்லாஹ்" செய்யவுள்ளோம்.

தனியே மார்க்க விடயங்களை மாத்திரமன்றி சமூகப்பணிகளையும் செய்வதுதான்,மஸ்ஜித்களின் கடமையாக வேண்டும்.

நபியவர்களின் காலந்தொட்டு, பள்ளிவாசல்கள்தான் சமூகத்தை வழிநடத்தின.சிறந்த அரசியல் தலைமைகளும் பள்ளிவாசல்களிலே,புடம்போடப்பட்டன. அரசியலையும், ஆத்மிகத்தையும் பிரிக்க முடியாதென்பது இதிலிருந்து புலப்படுகிறது.

இந்நிலைமைகள் பின்னர் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புக்களால் மாற்றமடைந்தன. இதனால்,தலைமைகளைப் புடம்போடும் நல்ல சந்தர்ப்பங்கள் இல்லாமலாகின. தன்னைப் பொறுத்தவரை சிறந்த சமூக மற்றும் அரசியல் தலைமைகளுக்கான பாடசாலைகளாகவே பள்ளிவாசல்கள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் உரையாற்றிய அக்கரைப்பற்று ஜெம் இய்யதுல் உலமா சபையின் செயலாளர்,இளம் தலைமைகள் பள்ளிவாசல்களைப் பொறுப்பேற்பது மகிழ்ச்சியளிப்பதாகவும் இருபது வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற, புகாரி மஜ்லிஸ் நினைவுகள், தம்மை ஆட்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

## வீட்டுக்குள் நுழைந்த திருடன் பணம், நகைகள் திருட்டு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் மூன்றாம் பகுதி புபுது மாவத்தையில் அமைந்துள்ள வீடொன்றிற்குள் புகுந்த நபரொருவர், தங்க ஆபரணங்கள் மற்றும் பணத்தை திருடிச் சென்றுள்ளார்.

சுமார்,எட்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க தங்க ஆபரணங்களையும் 20 ஆயிரம் ரூபா பணத்தையும் இவர் திருடிச் சென்றுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.இச்சம்பவம் கடந்த (19) நடந்துள்ளது.

இவ்வீட்டின் உரிமையாளரான 52 வயது பெண் தனது புதல்வியுடன் வீட்டு ஜன்னல் கதவுகளை அடைத்து விட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு சென்றிருந்தார். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே, இப்பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்கு வந்தபோது, ஜன்னல் உடைக்கப்பட்டுள்ளதை அவதானித்தனர். பின்னர், அலுமாரியின் கதவுகளும் உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டிருந்தமை தெரிய வந்தது. இதுகுறித்து வீட்டு உரிமையாளரான பெண், பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். திருடிய நபர் தொடர்பில் இது வரைக்கும் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில், அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சஞ்ஜீவ மஹாநாம உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு



புத்தளம் தினகரன் நிருபர்

பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் திட்டம் இவ்வருடமும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கமைய, பத்துளு ஓயா சிங்கள மகா வித்தியாலயத்தில் வைத்து மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கப்பட்டது. பாடசாலை அதிபர் சிசிர குமார தலைமையில் இந்நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். புத்தளம் நகர சபை உறுப்பினர் நகுலன், பாராளுமன்ற உறுப்பினரின் பத்துளு ஓயா குழுத் தலைவர் ரமீஸ், பத்துளு ஓயா இணைப்பாளர் சியாம் மற்றும் பெற்றோர், நலன்விரும்பிகள் எனப் பலரும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

## இலைமறை காயாகவுள்ள இளைஞர்களை ஊக்குவிக்க விருதுகள் வழங்கி கௌரவிப்பு



புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் வரலாற்றில் முதன் முதலாக இளம் தலைமைத்துவங்களை ஊக்குவிக்கும் வகையில் "ஷங்கர் விருது 2021" எனும் விருது வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் நகரின் சமூக சேவையாளரும், தொழில் அதிபருமான திரு. ஷங்கர், இந்த விருதுகளை வழங்கினார்.

புத்தளம் நகரில் கலை, கலாசாரம், விளையாட்டு, கல்வி, சமூக மேம்பாடு மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பங்களிப்புகளை நல்கும் இளம் தலைமைகள் தெரிவு செய்யப்பட்டு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் (19) புத்தளம் மன்னார் வீதியில் அமைந்துள்ள ஷங்கர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இலைமறை காய்களாக இருந்து பல சாதனைகள் நிலைநாட்டும் இளம் தலைமைகளை இணங்கண்டு அவர்களை ஊக்குவிப்பதே இதன் பிரதான நோக்கமாகும். இவ்வாறு தெரிவித்த திரு.ஷங்கர், தொடர்ந்தும் வருடா வருடம் இவ்வாறான நிகழ்வை நடாத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

விருது வழங்கும் நிகழ்வில் அதிதியாக கவிஞர் எஸ்.ஏ.சீ.பீ.மரிக்கார் கலந்து கொண்டார்.

## கடற்கரைச் சூழலை கட்டமைத்தல் துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பம்

அக்கரைப்பற்று மத்திய நிருபர்

அக்கரைப்பற்று மாநகர சபைக்கு உட்பட்ட கடற்கரை சூழலை கட்டமைத்தல் மற்றும் அழகுபடுத்தல் தொடர்பான துறை சார்ந்த முக்கிய அதிகாரிகளுடனான கலந்துரையாடல், அண்மையில் (18) மாநகர சபை கேட்போர் கூடத்தில் மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலகம், கரையோர பாதுகாப்பு திணைக்களம், மீன்பிடி கடல் வள முகாமைத்துவ திணைக்களம், 247வது படைப்பிரிவு என்பனவற்றின் முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





மலையகத்தின் மூத்த கல்விமான் எம்.வாமதேவன் எழுதிய "குன்றிலிருந்த கோட்டைக்கு" எனும் நூல் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் (21.03) ஞாயிற்றுக்கிழமை ஹற்றன், ஹைலன்ஸ் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரியின் அதிபர் இரா.ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தலைமையுரை, வெளியீட்டுரை, ஆய்வுரை, கருத்துரை என்பன இடம்பெற்றன. இதன்போது, நூலாசிரியர், பழைய மாணவர்கள் உட்பட பாடசாலை நிர்வாகத்தினரால் பலர் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்.
படம் நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

# மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் முதல் இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தில் ஏமாற்றிய இலங்கை அணி





மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த இலங்கை அணி வெறும் 169 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்துள்ளது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது. போட்டியில் இலங்கை அணி சார்பாக பெதும் நிசங்க டெஸ்ட் அறிமுகத்தை பெற்றுக்கொண்டதுடன், தென்னாபிரிக்க தொடரில் உபாதைக்கு முகங்கொடுத்திருந்த தனன்ஜய டி சில்வா மீண்டும் அணியில் இணைக்கப்பட்டிருந்தார்.

**இலங்கை அணி**

திமுத் கருணாரத்ன (தலைவர்), லஹிரு திரிமான்ன, ஓசத பெர்னாண்டோ, தினேஷ் சந்திமால், பெதும் நிசங்க, தனன்ஜய டி சில்வா, நிரோஷன் டிக்வெல்ல, சுரங்க லக்மால், லசித் எம்புல்தெனிய, துஸ்மந்த சமீர, விஷ்வ பெர்னாண்டோ

மேற்கிந்திய தீவுகள் அணி

க்ரைக் ப்ராத்வைட் (தலைவர்), ஜோன் கெம்பல், க்ரூமா பொன்னர், கெயல் மேயர், ஜெர்மைன் ப்ளெக்வூட், ஜொசுவா டி சில்வா, ஜேசன் ஹோல்டர், ரகீம் கொன்வல், அல்ஷாரி ஜோசப், கெமார் ரோச், செனொன் கேப்ரியல்

இலங்கை அணியின் துடுப்பாட்ட இன்னிங்ஸை பொருத்தவரை, விக்கெட்டுகள் சீரான இடைவெளிகளில் வீழ்த்தப்பட்ட நிலையில், இலங்கை அணியால் குறிப்பிடத்தக்களவான ஓட்ட எண்ணிக்கையை பெறமுடியவில்லை.

இலங்கை அணியை பொருத்தவரை லஹிரு திரிமான்ன, ஏனைய துடுப்பாட்ட வீரர்களிலிருந்து தனித்துநின்று 70 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக்கொண்ட நிலையில், ஏனைய துடுப்பாட்ட வீரர்களில் நிரோஷன் டிக்வெல்ல 32 ஓட்டங்களையும், பெதும் நிசங்க 13 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

குறித்த இந்த நான்கு வீரர்களை தவிர ஏனைய எந்தவொரு வீரரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையை பெறமுடியாமல் பெவிலியன் திரும்பியிருந்தனர். மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில் ஜேசன் ஹோல்டர் 5 விக்கெட்டுகள் பிரதியை கைப்பற்றியதுடன், கெமார் ரோச் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். பதிலுக்கு தங்களுடைய முதல் இன்னிங்ஸை ஆரம்பித்துள்ள மேற்கிந்திய தீவுகள் அணி, முதல் நாள் ஆட்டநேர நிறைவில் விக்கெட்டிழப்பின்றி 13 ஓட்டங்களை பெற்றறுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு – மேற்கு நட்புறவுக் கிண்ண கிரிக்கெட் தொடர்



**யாழ்.விளையாட்டு நிருபர்**

ஏசியன் பெயின்ட்ஸ் கோஸ் வே அனுசரணையுடன் வடக்கு மேற்கு நட்புறவுக்கு கிண்ணத்துக்கான. 20 ஓவர்களைக்கொண்ட கிரிக்கெட் போட்டித் தொடரில் மோட் கிரிக்கெட் கழக அணி 6 விக்கெட்டினால் வெற்றி பெற்றது.

கடந்த (20) திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து மோட் கிரிக்கெட் கழக அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ் கிரிக்கெட் கழக அணியினர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதற்கு அமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.கிரிக்கெட் கழக அணியினர் 17.4 ஓவர்களில் சகல இலக்குகளை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அதிகபட்சமாக றுக்மன் 22 ஓட்டங்களையும், மதுசன், ஆதித்தன் ஆகியோர் 19 ஓட்டங்களையும், மோகன் ராஜ் 17 ஓட்டங்களையும், தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சு மோட் ஸ்போட்ஸ் கழக அணி சார்பில் இந்தியாஸ் 3 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும், நீமேஸ் 3.4 ஓவர்கள் பந்துவீசி 6ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினர்.

93 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மோட் ஸ்போர்ட்ஸ் கிளப் அணியினர் ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில் அதிகபட்சமாக வடுகே 32 ஓட்டங்களையும், செய்யத் 27 ஓட்டங்களையும், சயித் 16 ஓட்டங்களையும், தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சு யாழ். கிரிக்கெட் கழக அணி சார்பில் டார்வின், பிரதீப், அஞ்சேயன், சஜீபராஜ், ஆகியோர் தலா ஓர் விக்கெட்டினை வீழ்த்தினர்.

# றைஸ்டார் ஜீனியர் கழக வீரர்களுக்கான சீருடை அறிமுகம்



**பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்**

பாலமுனை றைஸ்டார் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில். றைஸ்டார் ஜீனியர் பிறிமியர் கிரிக்கெட் லீக் 2021 கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் கழக வீரர்களுக்கான சீருடை அறிமுக நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை (21) பாலமுனை பொது விளையாட்டு மைதான அரங்கில் இடம் பெற்றது.

பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஐ.எல்.எம்.பாயிஸ் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அதிதிகளாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவி தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனிபா, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.முஸம்மில், கழகத்தின் ஆலோசகர்களான பாலமுனை மின்ஹாஜ் மகாவித்தியாலய அதிபர் கே.எல்.உபைதுல்லா, கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.இப்றாஹிம், அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி விடுதி அத்தியட்சகர் எஸ்.எல்.றகுமதுல்லா, தொழிலதிபர் கே.எல்.எம்.ஜிப்ரி, கழகத்தின் செயலாளர் வை.எம்.அசாம், கழகத்தின் பொருளாளர் ஏ.றிஸ்மி உட்பட கழகத்தின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# வீதி பாதுகாப்பு உலக ரி20 தொடர் இலங்கை லெஜன்ட்ஸ் அணியின் போராட்டம் வீண்



வீதி பாதுகாப்பு தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெறும் வீதி பாதுகாப்பு உலக ரி 20 தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய லெஜன்ட்ஸ் அணி, இலங்கை லெஜன்ட்ஸ் அணியினை 14 ஓட்டங்களால் வீழ்த்தி முதன்முறையாக சம்பியன் பட்டம் வென்றிருக்கின்றது.

கடந்த (21) ராய்பூர் நகரில் ஆரம்பமான இறுதிப் போட்டியில், தொடரின் அரையிறுதிப் போட்டிகளில் முறையே மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்க ஆகியவற்றின் லெஜன்ட்ஸ் அணிகளை வீழ்த்திய இலங்கை லெஜன்ட்ஸ் மற்றும் இந்திய லெஜன்ட்ஸ் ஆகியவை பலப்பரீட்சை நடாத்த தயாராகின.

தொடர்ந்து போட்டியின் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை லெஜன்ட்ஸ் அணியின் தலைவர் திலகரட்ன டில்ஷான் முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை இந்திய லெஜன்ட்ஸ் அணிக்கு வழங்கியிருந்தார்.

இதன்படி போட்டியில் முதலில் துடுப்பாடிய இந்திய லெஜன்ட்ஸ் அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களை எடுத்தனர்.

இந்திய லெஜன்ட்ஸ் அணியின் துடுப்பாட்டம் சார்பில் அதிரடியான அரைச்சதங்களை பூர்த்தி செய்த யூசுப் பதான் 36 பந்துகளுக்கு 5 சிக்ஸர்கள் மற்றும் 4 பௌண்டரிகள் அடங்கலாக 62 ஓட்டங்களையும், யுவ்ராஜ் சிங் 41 பந்துகளுக்கு 60 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இலங்கை லெஜன்ட்ஸ் அணியின் பந்துவீச்சு சார்பில் ரங்கன ஹேரத், பர்வீஸ் மஹரூப், சனத் ஜயசூரிய மற்றும் கௌசல்ய வீரரட்ன ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் சாய்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 182 ஓட்டங்களை அடைய பதிலுக்கு துடுப்பாடிய இலங்கை லெஜன்ட்ஸ் அணியினர் பலத்த போராட்டத்தினை காட்டியிருந்த போதும், 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்று போட்டியில் தோல்வியினைத் தழுவியது.

இலங்கை லெஜன்ட்ஸ் அணியின் துடுப்பாட்டம் சார்பில் இறுதிவரை போராட்டம் காட்டியிருந்த வீரர்களில் கௌசல்ய வீரரட்ன 15 பந்துகளுக்கு 3 சிக்ஸர்கள் மற்றும் 3 பௌண்டரிகள் அடங்கலாக 38 ஓட்டங்களையும், சின்தக்க ஜயசிங்க ஆட்டமிழக்காது 30 பந்துகளுக்கு 40 ஓட்டங்களையும், சனத் ஜயசூரிய 43 ஓட்டங்களையும் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்திய லெஜன்ட்ஸ் அணியின் பந்துவீச்சு சார்பில் இர்பான் பதான் மற்றும் யூசுப் பதான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் கைப்பற்றி தமது தரப்பின் வெற்றியினை உறுதி செய்திருந்தனர்.

இப்போட்டியில் தோல்வியடைந்திருக்கும் இலங்கை லெஜன்ட்ஸ் அணியினர் 2021ஆம் ஆண்டுக்கான வீதி பாதுகாப்பு உலக ரி 20 தொடரில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொள்கின்றது.



# மேயர் கிண்ண ஹொக்கி தொடர்; 12 அணிகள் பங்கேற்பு

கொழும்பு மாநகர சபை அனுசரணையுடன் மேயர்கிண்ண ஆடவருக்கான சம்பியன் கிண்ண ஹொக்கி தொடர் எதிர்வரும் ஏப்ரல் 1ம் திகதி முதல் 4ம் திகதி வரை கொழும்பு ரீட் மாவத்தையிலுள்ள ஹொக்கி மைதானத்தில் நடைபெறவுள்ளது. தேசிய ரீதியில் பிரபல ஹொக்கி கழங்களின் பங்களிப்புடன் 12 அணிகள் இந்த மேயர் கிண்ண ஹொக்கி போட்டித் தொடரில் களமிறங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலலங்கை இராணுவம், இலங்கை விமானப்படை, இலங்கை கடற்படை, இலங்கை பொலிஸ், சிஎச் அன்ட் எப்சி, பிஆர்சி, பழைய மாணவர் றோயல், பழைய மாணவர் டீ. எஸ். சேனநாயக்க, பழைய மாணவர் நாலந்தா, கண்டி மாவட்ட ஹொக்கி, மாத்தளை மாஸ்டரீஸ் மற்றும் கொழும்பு மாநகர சபை ஹொக்கி அணிகள் இந்தப் போட்டித் தொடரில் பங்கு கொள்ள அழைக்கப்பட்டுள்ளன. இதில் புதிதாக மாநகரசபை ஊழியர்கள் ஒன்றிணைந்து கொழும்பு நகர சபை அணியொன்றை களமிறக்கவுள்ளமை குறிப்பிடத்தககது.

முதல் சுற்றுப் போட்டிகள் அணிகளை நான்கு குழுக்களாக பிரித்து லீக் முறையில் போட்டிகள் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு குழுவிலுமுள்ள புள்ளி அடிப்படையில் முதலிரு இடங்களைப் பெறும் அணிகள் காலிறுதியில் மோதவுள்ளன. கொரோனா பரவலின் பின் தடைப்பட்டிருந்த விளையாட்டுப் போட்டிகள் மீண்டும் ஆரம்பக்கப்பட்டுள்ளதுடன் நீண்ட நாட்களுக்குப் பின் முழுமையான ஹொக்கி தொடர் நடைபெறுவதால் அநேகரின் கவனமும் இத்தொடரின் திரும்பியுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதான நகர ஆணையாளர் சட்டத்தரணி திருமதி ரோசனி திசாநாயக்க கொழும்பு பிஆர்சி மைதானத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார். கொழும்பையும் கொழும்பைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள இளைஞர்களை போதைவஸ்துப் பாவனையிலிருந்து பாதுகாப்பதற்காக இவ்வாறான விளையாட்டுத் தொடர்களை நடத்தி அவர்களை அதில் ஈடுபடச் செய்வதே சிறந்த வழியாகும் எனவும் இவ் ஊடகவியலாளர் சந்திப்பின் போது ரோசனி திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

“நகர சபை எனக் கூறும் போது திடீரென நினைவுக்கு வருவது குப்பை கூளங்களை அப்புறப்படுத்துவதுதான்.

எமது சபையின் கீழ் பல விளையாட்டு அபிவிருத்தி திணைக்களங்கள் உள்ளன. அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வது எமது கடமையாகும்.

கொரோனா தாக்கத்தின்பின் இவ்வாறான போட்டித் தொடர்களை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த ஹொக்கி போட்டித் தொடரை சிறந்த சந்தர்ப்பமாக நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த ஹொக்கி தொடருக்குப் பின் கிரிக்கெட், கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற தொடர்களையும் நடத்துவதற்கு நகரசபை மேயரினதும், அங்கத்தவர்களினதும் ஒத்துழைப்பு கிடைத்திருப்பதாக கொழும்பு மாநகர ஆணையாளர் சட்டத்தரணி திருமதி ரோசனி திசாநாயக்க தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் கொழும்பு மாநகரசபையின் விளையாட்டு பணிப்பாளர் மாஷங்க லியனகே, ஹொக்கி செயலாளர் எம். ஜே. எம். நௌஷாட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குழு ஏ டி. எஸ். நேனநாயக்க பழையமாணவர், மாத்தளை மாஸ்டரிஸ், பி. ஆர். சி.

குழு பி கண்டி ஹொக்கி, இலங்கை இராணுவம், இலங்கை விமானப் படை

குழு சி நாலந்த பழைய மாணவர், றோயல் பழைய மாணவர், இலங்கை கடற்படை

குழு டி சீஎச். அன்ட் எப்சி இலங்கை பொலிஸ், கொழும்பு மாநகரசபை.

# வளர்மதி கிண்ணம் செல்வநகர் அணிவசம்



**தோப்பூர் குறூப் நிருபர்**

வளர்மதி விளையாட்டு கழகத்தின் 33வது ஆண்டின் நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 20 இற்கு 20 கடின பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் தோப்பூர் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இத்தொடரின் வெற்றிக்கிண்ணத்தினை செல்வநகர் விளையாட்டுக் கழகம் சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

செல்வநகர் விளையாட்டுக்கழகம் 1990 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட முதல் ஐந்து தடவை இறுதிப்போட்டிக்குத் தெரிவாகி கிண்ணத்தை கைநழுவ விட்டு ஆறாவது தடவை இறுதிப்போட்டியில் கிண்ணத்தை சுவீகரித்து ஊருக்கு பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சுற்று தொடரின் இறுதிப் போட்டியில் ஷியா மற்றும் செல்வநகர் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இத்தொடரில் வெற்றியீட்டிய செல்வநகர் அணிக்கு பிரதம அதிதியினால் வெற்றிக் கிண்ணமும் காசோலையும் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரதம அதிதியாக அஸீஸ் நளீமி, கௌரவ அதிதிகளாக மஜீத் நிஜாமுதீன் சட்டத்தரணி , மௌஜீத்(ஆசிரிய ஆலோசகர்) கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும் .

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.